Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

**அற்புதன் அச்சகம்**

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 11 சனிக்கிழமை (27.09.2014) பக்கங்கள் 20 ஓசை – 361

## யாழ். அரச உத்தியோகத்தர்கள் 2000 பேருக்கு மோட்டார் சைக்கிள்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களில் கடமையாற்றும் 2000 கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கி வைக்கவுள்ளார் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் நேற்று தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில், ஜனாதிபதியின் வருகை தொடர்பிலான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கலந்துரையாடல் நடைபெற்றது.

யா்ழ். மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள்

19 ஆம் பக்கம் பார்க்க

## இரகசிய வங்கி கணக்குகள் ஷிராணி மீது விசாரணை

(கொழும்பு)

வங்கிக் கணக்குகளை இரகசியமான முறையில் பேணி வந்தமை தொடர்பாகவும் வெளிப்படைத் தன்மை இல்லாமை தொடர்பாகவும் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீது விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

அதேவேளை, முன்னாள் நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் வங்கி கணக்கு விபரங்களை

19 ஆம் பக்கம் பார்க்க

## கீரிமலை தடுப்புச் சுவரில் வெடிப்பு வலி. வடக்கு பிரதேச சபையில் குழப்பம்

(தெல்லிப்பளை)

கீரிமலையில் தடுப்புச்சுவர் அமைத்தமை தொடர்பான விவகாரம் வலி. வடக்கு பிரதேச சபையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

வலி. வடக்கு பிரதேச சபையின் நேற்றைய மாதாந்த கூட்ட அமர்விலே கீரிமலை கடல் அரிப்பு தடுப்பணைச் சுவர் சம்பந்தமான விவகாரம் பிரஸ்தாபிக்கப்பட்டபோது சபையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டதுடன் கூட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டு தவிசாளர் வெளியேறிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வலி. வடக்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் நேற்று நடைபெற்றபோது கடந்த 5 மாதங்களுக்கு முன் வலி. வடக்கு பிரதேச சபையின் மேற்பார்வையில் கீரிமலை உவர்நீர் தடுப்புச் சுவர் 48 இலட்சம் ரூபா

19 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கே வருகிறார் ஜனாதிபதி மகிந்த செயற்றிட்டங்கள் பல அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த மாதம் வடபகுதிக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ள நிலையில் அதன் முன்னேற்பாடுகள் குறித்த விசேட கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகத்தின் அரச அதிபர் அலுவலகத்தில் மேற்படி கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றுள்ளது.

அடுத்த மாதம் 12 ஆம் திகதி வட பகுதிக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளார்.

இதனடிப்படையில் 12 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி மகாவித்தியாலயம், கிளிநொச்சி இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நிர்மாணிக்கப்பட்ட மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்களை திறந்து வைக்கவுள்ள அதேவேளை, மாவட்டத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாவட்ட செயலகக் கட்டடத்தையும் திறந்து வைக்கவுள்ளார்.

இதேபோன்று மறுநாளான 13 ஆம் திகதி பளையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான புகையிரத சேவையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ள ஜனாதிபதி கொடிகாமம், நாவற்குழி பகுதிகளில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள புகையிரத நிலையங்களை

19 ஆம் பக்கம் பார்க்க



## இஸ்லாமிய நாடுகளுடன் நட்புறவு நியூயோர்க்கில் நேற்று ஆராய்வு



(கொழும்பு)

இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் (Organization of Islamic Cooperation - OIC) செயலாளர் நாயகம் ஐயாட் அமீன் மதனி (Iyad Ameen Madani) நேற்றுக் காலை நியூயோர்க் நகரில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் அமர்வுகளிடையே இந்தச்சந்திப்பு இடம்பெற்றது. இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் செயலாளர் நாயகம் பதவிக்கு ஜனாப்.மதனி தெரிவுசெய்யப்பட்டதிலிருந்து, அமைப்புக்குட்பட்ட

19 ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச அணுசக்தி அதிகார சபைக்கு தலைவராக இலங்கையர்




(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பின் கீழ் இயங்கும் சர்வதேச அணுசக்தி அதிகார சபைத் தலைவராக இலங்கையர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.சர்வதேச நாடுகளின் அணு ஆயுத உற்பத்திகளை கண்காணித்தல், அணுப் பரம்பல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அணுகுண்டு சோதனைகளை தடுத்தல் என்பன இந்த அதிகார சபையின் பொறுப்புகளாகும். உலகின் 162 நாடுகள் இந்த அதிகார சபையின் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளன. இந்நிலையில் இந்த அதிகார சபையின் புதிய தலைவராக வியன்னாவில் உள்ள

19 ஆம் பக்கம் பார்க்க

## தேய்வடைகிறது பொன்சேகாவின் கட்சி

### கட்சிதாவ பலர் முயற்சி

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் ஜனநாயக தேசிய முன்னணி பல கூறுகளாக உடைந்து சிதறும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளது.

தற்போதுள்ள நிலையில் கட்சியின் பிரபல்யமிக்க தலைவர்களான

19 ஆம் பக்கம் பார்க்க

## பிரிட்டிஷ் விமான சேவை இடைநிறுத்தம்

(கொழும்பு)

இலங்கைக்கான தமது விமான சேவைகளை இடைநிறுத்துவதற்கு பிரிட்டிஷ் விமான சேவை நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் ஹீத்ரோவிலிருந்து கொழும்புக்கான தமது இறுதித் சேவை அடுத்த வருடம் மார்ச் மாதம் 28 ஆம் திகதியுடன் முடிவுக்கு வரவுள்ளதாக பிரிட்டிஷ்

19 ஆம் பக்கம் பார்க்க





**விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?**

இது ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை சம்பளம் 18,000-35,000 வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள் 0766398366.

(C/3775)

# மக்களின் ஆதரவைப் பெறுபவரே சுயநலமற்ற உண்மையான பிரதிநிதி

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே.ஜெகன்



மக்களது ஆதரவை எவர் ஒருவர் சுயநலமற்ற வகையில் மிக நெருக்கமாக பெற்றுக் கொள்கின்றாரோ அவர்தான் மக்களது உண்மையான பிரதிநிதியாக இருக்க முடியும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கே.வி.குகேந்திரன் (வி.கே. ஜெகன்) தெரிவித்துள்ளார்.

வேலணைப் பிரதேசத்திற்குட்பட்ட இளைஞர் ஒன்றிய அங்குரார்ப்பண நிகழ்வு வேலணைப் பிரதேசசபைத் தலைவர் எஸ். சிவராஜா (போல்) தலைமையில் நடைபெற்றது. இந்நிழ்வில் அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த காலத்தில் தேசியவாதப் பேச்சுக்களைக் கூறி இளைஞர்களையும் யுவதிகளையும் தவறாகப் பயன்படுத்தியவர்கள் தமிழ்த் தேசியம் என்ற ஒன்றை வைத்துக் கொண்டு மக்களை அதலபாதாளாத்துக்குள் தள்ளிவிட்டுள்ளனர். தமிழ் மக்களும் இந்தக் கூட்டமைப்பினரை நம்பி தமது ஒட்டுமொத்த எதிர்காலத்தையும் இன்று வரை இழந்து கொண்டிருக்கின்றனர்.

வேலணைப் பகுதியைப் பொறுத்தளவில் எமது கட்சியில் சேவைகளையும் செயற்பா டுகளையும் அதிகம் பெற்றுக்கொண்டு எம்மை ஆதரிக்கும் மக்களைக் கொண்ட பகுதியாகும். இதனால் தான் நாங்கள் இப்பகுதி மக்களுக்கான அரசியல் சேவைகளைச் செய்யும் அதிகாரங்களைக் கொணடிருக்கின்றோம்.

இளைஞர்கள் ஒவ்வொரு வரும் தமது சமூகம் சார்ந்த விழிப்புணர்வும், தூரநோக்கும் கொண்டவர்களாக செயற்படு வார்களானால் எமது மக்களை எதிர்காலத்தில் ஆயுதக் கலாசாரமற்ற ஒரு புது யுகத்திற்கு கொண்டுசெல்ல முடியும். இதற்காகத்தான் இணக்க அரசியலூடாக எமது மக்களின் வாழ்வாதாரம் மற்றும் அரசியல் செயற்பாடுகளை நகர்த்திச் செல்லும் வழிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வருகின்றார்.

இதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் பக்கபலமாக இருப்பீங்களானால் அந்நாளை வெகு விரைவில் உங்களுக்கு அவர் பெற்றுத்தருவார்.

இந்த நிகழ்வில் வேலணைப் பிரதேசபைத்த தலைவர் போல், தேசிய அமைப்பாளர் ப.சீவரத்தினம் (கிபி) சர்வதேச இணைப்பாளர் மித்திரன், சர்வதேச முக்கியஸ்தர் விந்தன், மகேஸ்வரி நிதிய இணைப்பானர் ரஜீவ், முன்னாள் மேயர் யோகேஸ்வரி ஆகியோருடன் இருநூறுக்கு மேற்பட்ட இளைஞர்களும் கலந்து கொண்டனர்.


## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்.
சிவலிங்கப்புளியடி.
வண்ணார்பண்ணை.
யாழ்ப்பாணம்.

021 222 8680,
077 592 5088.

(C/3800)


# புதிய யோகா பயிற்சி ஆரம்பம்

யாழ்.யோக அரங்கத்தினர் நடத்தும் யோகா பயிற்சியின் அடுத்த புதிய பயிற்சிச் செயற்பாட்டு ஆரம்ப நிகழ்வு நல்லூர்த் தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் மாலை 5.00 மணி தொடக்கம் 6.00 மணிவரை நடைபெறவுள்ளது.

தொடர்ந்து யோகா வகுப்புக்கள் தினமும் மாலை 6.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை 20 நாட்கள் நடைபெறும்.

இப்பயிற்சி நெறியில் சூரிய நமஸ்காரம் முதலான மிகவும் அவசியமான யோகா பயிற்சிகள் அனுபவமுள்ள ஆசானால் நுட்பமாகப் பயிற்றுவிக்கப்படுவதுடன், கையேடும், சான்றிதழும் வழங்கப்படும். அரச, அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்த யோகாப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படுகின்றது.

ஆர்வமுள்ள அனைவரும் இதில் இணைந்து பயன்பெறலாம் என்று யோக அரங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

# இன்று கூட்டுறவு தின விழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்தும் 92 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவும், கௌரவிப்பு நிகழ்வும் இன்று முற்பகல் 10.00 மணிக்கு சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திச் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் தலைவர் நா.கணேசஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான திருமதி மதுமதி வசந்தகுமார், பனை அபிவித்திச் சங்கத்தின் தலைவர் பசுபதி சீவரத்தினம், வடமாகாண மதுவரி உதவி ஆணையளர் பி.கிறிஸ்ரி ஜோசப், யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களான திருமதி.ந.கனகம்மா, பொ.மோகன், யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வின் போது 2013 ஆம் ஆண்டின் சிறந்த அங்கத்தவர்கள், பணியாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளதுடன், 2013 இல் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் சித்தி பெற்ற மாணவர்கள் மற்றும் உயர்கல்வி வாய்ப்பு பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேலும் 92 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், 2013 ஆம் ஆண்டின் சிறந்த சங்கங்கள், கொத்தணிகளுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோட்டார் சைக்கிள் விபத்து; நெல்லியடியில் இருவர் காயம்

நெல்லியடி சந்தைப் பகுதியில் நேற்று மாலை 4.30 மணிக்கு இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்தனர்.

நெல்லியடியைச் சேர்ந்த குகதாஸ் யசோதா (வயது-42), இமையாணன் பகுதியைச் சேர்ந்த த.சுசிபன் (வயது-25) ஆகிய இருவருமே படுகாயமடைந்து மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிள்கள் இரண்டும் சேதமடைந்துள்ளன. நெல்லியடிப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (18)

# அழக்குக் கலைக் கண்காட்சி

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் யாழ்.வலய முறை சாராக் கல்விப் பிரிவில் அழக்குக் கலை கண்காட்சியும், சிறுவர் இல்லத்தில் கைப்பணிக் கண்காட்சியும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் படிப்பு மண்டபத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு சங்கத் தலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் முறை சாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகம் கலந்து கொள்ளவுள்ளர்.

இந்தக் கண்காட்சி நிகழ்வுகள் போதனாசிரியர் எஸ்.ஜீவனாவின் ஒழுங்கமைப் பில் நடைபெறவுள்ளது.


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1095

திகதி 25.09.2014

வெற்றி எண்கள் — ஆங்கில எழுத்து

06 08 29 58 V

ஜக்பொட் பரிசு ரூ. 3,97,91,220/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,97,91,220/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 2 | 10,00,000/= | ரூ. 20,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8 | 50,000/= | ரூ. 4,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 283 | 1,000/= | ரூ. 2,83,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 540 | 1,000/= | ரூ. 5,40,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12070 | 60/= | ரூ. 7,24,200/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6553 | 40/= | ரூ. 2,62,120/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 159365 | 20/= | ரூ. 31,87,300/= |
| ஆங்கில எழுத்து | 22930 | 20/= | ரூ. 4,58,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 78,55,220/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூபா 40,103,380/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.09.29 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3797)


# சுற்றுலாத்துறை விருத்தி; யாழில் இன்று மாநாடு

(யாழ்ப்பாணம்)

வடமகாணத்தில் சுற்றுலா துறையை விருத்தி செய்வதற்கான முதலாவது நடவடிக்கையாக சுற்றுலாத்துறை சம்பந்தமான மாநாடு ஒன்று இன்று யாழ். ரில்கோ விடுதியில் முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 5.00 மணி வரை நடைபெறவிருப்பதாக வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் அதிகாரி கிசோர் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.ரில்கோ விடுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த மாநாடு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனின் தலைமையில் நடைபெறவுள்ளதுடன் உலக சுற்றுலா தினமாகிய இன்று வடமாகாணத்தின் சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதற்கான படியாக இந்த மாநாடு நடை பெறவுள்ளதாகவும் தெரிவித்த அவர், கொழும்பிலிருந்து இந்த மாநாட்டுக்காக பல அமைப்புக்களின் பிரதிநிதிகள் வருகின்றனர். அத்துடன் சுற்றுலாத்துறை சார்ந்த நிறுவனங்களுடைய அதிகாரிகளும் கலந்து கொள்வதற்காக வருகின்றனர்.

இவர்களது உரைகளும் இடம்பெறவுள்ளது. இந்த மாநாட்டின் இறுதியில் 'பனல் டிஸ்கசன்' அதாவது உல்லாசப் பயணத்துறையில் அறிவுசார்ந்தவர்களிடம் இருந்து அபிப்பிராயங்களைப் பெற்று நாங்கள் சுற்றுலாத்துறையை எவ்வாறு அபிவிருத்தி செய்யப்போகின்றோம் என்ற தீர்மானங்களை எடுப்பதற்காக இந்த மாநாட்டைப் பயன்படுத்தப்போவதாகவும் தெரிவித்தார்.

இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்ட வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் தலைவரும். ரில்கோ விடுதியின் முகாமைத்துவப் பணிப்பாளருமான திலகராஜ் தெரிவிக்கையில், வடமாகாணத்தின் சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதற்கு வடமாகாண சுற்றுலாத்துறை அதிகார சபை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அரச நிறுவனம் ஒன்றின் துணையுடனேயே வடமாகாணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய முடியும்.

எனவே சுற்றுலாத்துறை அதிகார சபை வடமாகாண சபையினால் உருவாக்கப்பட வேண்டும் அதன் பின்னர் படிப்படியாக வடக்கின் முக்கியமான சுற்றுலாத்துறையினை அடையாளப்படுத்தி உல்லாசப் பயணிகளை வெளிநாடுகளில் இருந்து வரவழைத்து இந்தத் துறையை விருத்தி செய்யலாம் என்றார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் சுற்றுலாத்துறை வளவாளர்கள் கணேசலிங்கமும் கலந்து கொண்டார்.

(பா.25)

# வீதியை நோக்கி சாய்ந்த நிலையில் தொலைபேசி வயர் இணைப்பு கம்பங்கள்

## கவனிப்பாரற்று இருக்கிறது ரெலிக்கொம்

(பொன்னாலை)

பொன்னாலைப் பாலத்தினூடாக காரைநகருக்கு கொண்டுசெல்லப்படுகின்ற சிறிலங்கா ரெலிகொம் தொலைபேசி வயர் இணைப்புக் கம்பங்களில் இரு கம்பங்கள் வீதியை நோக்கிச் சாய்ந்த நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இந்த வீதியூடாகப் போக்குவரத்துச் செய்யும் வாகனச் சாரதிகள் அச்சமடைந்துள்ளதாகவும் இந்தக் கம்பங்களில் ஒரு கம்பம் வீதியை நோக்கி மிகவும் தாழ்வாகச் சரிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காற்றுடன் கூடிய மழை பெய்தால் இந்தக் கம்பம் வீதியில் சரிந்து விழுந்துவிடக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் இந்தப் பாலத்தினூடாக தினமும் ஏராளமான வாகனங்கள் சென்றுவருகின்ற நிலையில் இந்தக் கம்பம் சரிந்து வீழ்ந்தால் விபத்துக்கள் ஏற்பட்டு உயிர்ச்சேதம் ஏற்படும் என்று வாகனச் சாரதிகளும் மக்களும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

எனவே, இந்த விடயத்தில் சிறிலங்கா ரெலிகொம் நிறுவனம் உரிய கவனம் செலுத்த வேணடும் என்று பொதுமக்களும் சாரதிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (48)

# மாற்றுத் திறனாளி இருவருக்கு வீடு புனரமைப்புக்கு நிதி வழங்கல்

(கரவெட்டி)

மாற்றுவலுவுடையோருக்கான தேசிய செயலகம் கரவெட்டி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த இரண்டு மாற்றுத் திறன் உடைய பயனாளிகளுக்கு வீட்டினை புனரமைக்க தலா 90 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளது.

ஏற்கனவே, இரண்டு பயனாளிகளுக்கு இக்கடன் வழங்கியுள்ளதுடன் மொத்தமாக நான்கு பேருக்கு வழங்கியுள்ளது.

புதிதாக கிடைக்கப் பெற்ற பயனாளிகளுக்கு எதிர்வரும் 9ஆம் திகதி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் எஸ். சிவசிறி அறிவித்துள்ளார்.

கரவெட்டி மத்தி தச்சன் தோப்பைச் சேர்ந்த செல்வரட்ணம் சண்முகராஜா, இராஜ குலசிங்கம் தங்கமலர் ஆகியோருக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மாற்றுவலுவுடையோருக்கான தேசிய செயற்கை மாற்று ஆற்றல் உடைய எஸ். ரதி சந்திரா என்பவருக்கு ஆடு வளர்ப்பு சுய தொழில் மேற்கொள்ள 25 ஆயிரம் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டது.

இவர் கரவெட்டி பிரதேச செயலக பிரிவின் உடுப்பிட்டியைச் சேர்ந்தவர். இவருக்குரிய காசோலையைப் பிரதேச செயலர் சிவசிறி அண்மையில் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (18)



அச்சுவேலி தெற்கில் சட்டத்தரணி நிருபா பாலசிங்கத்தின் ஏற்பாட்டில் அண்மையில் அப்பிரதேச பெண்களுக்கு சட்டம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்படுவதைக் காணலாம். (எஸ்.பி.)

# தபாற் பெட்டிகள் இல்லாததால் சிரமத்துக்குள்ளாகும் மக்கள்


(அச்சுவேலி)

அச்சுவேலி சந்நதி வீதியிலமைந்த கதிரிப்பாய் சந்தியிலும் தம்பாலைச் சந்தியிலும் தபாற் பெட்டிகள் இல்லாததால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் அஞ்சல் திணைக்களத்தால் இந்தப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த தபாற் பெட்டிகள் நாட்டில் இடம்பெற்ற போர்ச் சூழ்நிலை காரணமாக் அழிவடைந்த நிலையில் காணப்படுவதாகவும், குறித்த இரு கிராமங்களிலும் வசிக்கும் மக்கள் தமது தபால்களை அனுப்புவதற்கு ஒரு கிலோ மீற்றர் தொலைவுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 9ஆம் திகதி 140ஆவது உலக அஞ்சல் தினத்தை தபால் திணைக்களம் கொண்டாடவுள்ள நிலையில் இவ்விரு பகுதிகளுக்கான அஞ்சல் - பெட்டிகளை அமைத்து வழங்குமாறு பொதுமக்கள் உரிய தரப்பினருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

# கையில கிடைக்கிற அதிகாரத்தை காலில போட்டு மிதிக்கலாமா?




ஊவாத்தேர்தல் எதிர்க்கட்சிகளுக்கு பச்சை விளக்கைக் காட்டியிருக்கு.

ஆனால், முழுப்பச்சையில்லை.

இது ஒரு மெல்லிய பழுப்பு நிறப்பச்சையே.

இதுக்கே ஐக்கிய தேசியக் கட்சி கடுமையான புளுகத்தில துள்ளிக்குதிக்குது.

20 வருசமாக தடுமாறிக்கொண்டிருந்த கட்சிக்கு இப்பிடியொரு முடிவு, கொஞ்சம் சாதகமாகத் தெரிஞ்சால் பிறகு சொல்ல வேணுமா?

இனி ஏதோ ஆட்சியை அமைக்கப்போறதே.தாங்கள்தான் எண்ட கணக்கில பெரிய வித்தையெல்லாம் காட்டத்தொடங்கீட்டுது ஐ.தே.க.

இதுக்கு ஒரு தெம்பைக் குடுத்தது ஊவாத் தேர்தல் முடிவுகள் எண்டது உண்மைதான்.

எண்டாலும் இந்த முடிவுகளை ஒரு நம்பிக்கையாக வைச்சுக்கொண்டு அடுத்த ஜனாதிபதித்தேர்தலில ரணில் குதிச்சாரெண்டால்..... அது ரணிலுக்கு இன்னொரு தோல்விக்களமாகத்தானிருக்கும்.

ஆனால், ஊவாத்தேர்தல் அரசாங்கத்துக்கும் நல்ல மாதிரியான ஒரு நிலையைக் குடுக்கேல்ல.

எப்பிடியோ ஆட்சியைப் பிடிச்சாலும் சந்தோசப்படுகிற மாதிரி நிலைமையில்லை.

இந்த முடிவுகள் எல்லாம் ஒவ்வொருத்தரும் தங்களை ஒருக்கால் திரும்பிப் பாக்க வைக்கிறதுக்கான ஒரு பாடம், படிப்பினை எண்டுதான் நினைக்கிறன்.

இப்பிடியான தேர்தல் முடிவுகள்தான் சனங்களைப் பற்றிச் சிந்திக்க வைக்கும்.

இந்த அமோக வெற்றி, பெரு வெற்றி எண்ட மாதிரிக் கண்மூடித்தனமாகச் சனங்கள் ஒரு தரப்புக்கு வாக்குகளை அள்ளிப்போட்டால், தனிப்பெரும்பான்மையைப் பெறுகிற கட்சிகள், பிறகு சனங்களையும் மதிக்கிறேல்லை. எதிர்தரப்பையும் மதிக்கிறேல்ல.

ஆகையால், இந்த மாதிரி இறுக்கமான நிலைமில மட்டுமட்டாக வெற்றி பெற்றால்தான் ஆட்சி சிறப்பாக நடக்கும்.

சனங்கள் அப்பதான் நன்மையையும் பாதுகாப்பையும் பெறக்கூடியதாக இருக்கும்.

அப்பிடிப்பார்த்தால், ஊவாத்தேர்தல் முடிவுகள் ஆருக்கு நல்லதோ கெட்டதோ நாட்டு மக்களுக்கு நல்ல மாதிரியான ஒரு நிலையை உருவாக்கப்போகிறது.

இனி வரப்போகிற பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித்தேர்தல் எல்லாத்திலயும் எல்லாத்தரப்புகளும் கொஞ்சம் நிதானமாகச் சிந்திப்பினம்.

ஏனெண்டால், இப்பிடி நெருக்கடிமாதிரி, மட்டுமட்டான நிலையில தேர்தல் வெற்றிகள் வந்தால், ஆட்சியில இருக்கிற கட்சி பெரிய பலத்தோட இருந்து தான் நினைச்சமாதிரியெல்லாம் கூத்தாட ஏலாது.

அப்பிடிக் கூத்தாடினால், திமிறினால் எதிர்க்கட்சிகள் ஆட்சியைக் கவிழ்த்து விடும் எண்ட எச்சரிக்கை இருக்கும்.

அதால நல்லாய்ச் சிந்திச்சு, வலு பக்குவமாக ஒவ்வொரு விசயத்திலயும் நடந்து கொள்ளப்பாப்பினம். ஊழலும் அதிகார துஸ்பிரயோகங்களும் அரசியல் செல்வாக்கு, பழிவாங்கல்கள் எண்ட பேச்சுகளும் கிடையாது.

அதோட சிறுபான்மை மக்களின் பாதுகாப்பும் அவர்களுக்கான மதிப்பும் தாராளமாக இப்பிடியான நிலையிலதான் கிடைக்கும்.

ஏனெண்டால், முறையாக ஆட்சி அமைக்கிறதெண்டால், அதுக்குச் சிறுபான்மைச் சமூகங்களின்ரை ஆதரவு தேவையெண்ட நிலை வரும்போதுதான் அதுகளின்ரை பாதுகாப்பும் நலன்களும் கவனிக்கப்படும்.

அப்பிடியொரு நிலையை உருவாக்கிறதில ஊடகங்கள்தான் முன்னுக்கு வரவேணும்.

ஊடகங்கள் வரிஞ்சு கட்டிக்கொண்டு, விடாப்பிடியாக ஒரு கட்சிக்குத்தான் உங்கட தலையைக் குடுங்கோ எண்டால்... சனங்களின்ரை தலைதான் உருளும்.

இதுதான் இப்ப நடந்து கொண்டிருக்கு.

தமிழரெண்டால் தமிழ்க்கட்சிக்குத்தான் புள்ளடியைப் போடுவம்.

சிங்களவரெண்டால்... சிங்களக்கட்சியைத்தான் ஆதரிப்பம்.

முஸ்லிம்கள் எண்டு எங்களுக்கும் ஒரு கட்சி இருக்குத்தானே. அதுக்கு நாங்கள் வோட்டுப்போடுறது முறைதானே... என்டெல்லாம் ஆளாளுக்குச் சொன்னால்...

மீண்டும் பழைய குருடி கதவைத்திறவடி எண்ட கதைதான்.

இலங்கையின்ரை அரசியல் எப்பவும் முருங்கை மரத்தில ஏறுகிற வேதாளம் மாதிரியும் பழைய குருடி கதவைத்திறவடி மாதிரியும்தான் இருக்குது.

இதை எப்பிடி மாத்திறது எண்டதைப்பற்றி சனங்கள்தான் யோசிக்கோணும்.

எப்பவும் சனங்களின்ரை கையிலதான் அதிகாரத்தின்ரை முதல் வாய்ப்பு வாறது.

சனங்களைத் திசை திருப்பிறது ஊடகங்கள்.

ஊடகங்களும் சனங்களும் சரியாகத் தீர்மானிச்சால் எந்த விண்ணனாலயும் ஒரு மசிரையும் புடுங்கேலாது.

இதுக்கு வழிகாட்ட வேணும் படிச்ச மனிசர். புத்திசீவிகள்.

ஆனால், அவையள்தானே இப்ப முந்திப்போய்... அதிகாரத்துக்குக் கால் கழுவிற ஆட்களாயிருக்கினம்...!

என்னால் எதையும் சாதிக்க முடியும் என்று தன்மீது நம்பிக்கை வைத்திருப்பதே வெற்றியின் இரகசியம். - இராக்கர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## உடனழக் கவனத்துக்குரிய ஒன்று!

மன அழுத்தத்தால் ஆண்களைவிட பெண்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்திருக்கிறது. குறைந்தபட்சம் 10 சதவீத மக்கள் கடுமையான மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக மனநல கழகம் முன்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருந்தது.

மன அழுத்தம் அல்லது உள நெருக்கடி என்பதை ஒரு நோயாக மேலைநாடுகளில் கருதுகின்றனர். இந்த நோய்க்கு மருந்துகளும் சிகிச்சை முறைகளும் மேற்கொள்வதை அவர்கள் மிக அவசியமானதாகக் கருதுகின்றனர். காய்ச்சல், மூக்கடைப்புக்கு வைத்தியரிடம் போவதைப் போல மேலைநாடுகளில் மன நல மருத்துவரைச் சந்திப்பதும் சகஜமான விஷயம்.

ஆனால் அவர்களுக்கு மாறான கலாசாரத்தில் ஊறிப்போன நம்மிடையே நிலைமை வேறு. நமது கலாசாரத்தில் மன உளைச்சலை நோயாக குறிப்பிடுவது இல்லை.

மகிழ்ச்சி, கோபம் மாதிரி அதுவும் ஓர் உணர்வு. “அவர் ஒரு மாதிரி” என்றோ “அப்படித்தான் அது ஒரு போக்கு” என்றோ சொல்லி விட்டுப் போய்விடுகிறோம். அல்லது ‘பாவம் மன நிலை பாதிக்கப்பட்டவர்’ என்ற அனுதாபத்தோடு முடித்துவிடுகிறோம்.

இந்த மன அழுத்தம் சிலருக்கு உடனேயே மாறலாம், சிலருக்கு வாரக்கணக்கில் மாதக்கணக்கில் நீடிக்கலாம். இழப்பினால் ஏற்படும் அதிர்ச்சி, சோகம், வேலை பறிபோனதால் வாழ்க்கை பறிபோனதால் உண்டான விரக்தி, ஏமாற்றம், நம்பிக்கைக் குறைவு ஆகியவற்றை நாம் மன அழுத்தமாக பார்ப்பதில்லை.

முப்பதாண்டுகாலம் யுத்தச் சூழலினுள் வாழ நேர்ந்த நமது மக்கள் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். மக்கள் மனங்களிற்கு ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கீட்டையும் பாதிப்புகளையும் போக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது மற்றெல்லாவற்றையும் விட உடனடி முக்கியத்துவமானது.

யுத்தத்தினதும் அதன் முடிவினதும் காரணமாக ஏற்பட்ட இந்த உளநெருக்கடியை நீடிக்க விட்டால் விளைவுகள் மோசமடைந்து செல்லும். அந்த மாதிரியான மனநிலையே பல நோய்கள் உண்டாக காரணமாகலாம். தற்கொலை எண்ணம் வரலாம் என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

உடல் உஷ்ணம், இரத்த அழுத்தம் போல மன அழுத்தம் அளக்கக்கூடியதாக இல்லை. ஆகவே எது ஆரோக்கியமான அளவு, எது ஆபத்தானது என வரையறை செய்யவும் முடியாது.

பொதுவாக அனைத்து மக்களுக்குமான நம்பிக்கையை விதைத்தலும் (Instilling Hope) மற்றும் சமூகங்களுக்கிடையே மீள் இணைப்பு (Reconciliation) ஏற்படுத்தலும் மிக அவசரமானதும் அவசியமானதும் என்கிறார்கள் இன்றைய நம் சமூக நிலைமைகளின் மீது அக்கறை கொண்டுள்ள மருத்துவர்கள்.

அரசு, சமூகத்தவர்கள், மதத்தலைவர்கள் அனைவரும் இணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டியது மிக முக்கியமானது. அச்சமற்று பீதி கொள்ளாது ஒரு சமூகத்தினர் மற்றைய சமூகத்தினரை ஏற்றுக்கொள்கின்ற நிலை உருவாக்கப்பட வேண்டும்.

அரசியல்வாதிகளினால் நம்பிக்கையிழந்த சமூகத்தில் அவர்களை விட சமய, சமூகத் தலைவர்கள் முன்வந்து இவற்றை செய்ய வேண்டும். வீம்புகளை ஒதுக்கிவிட்டு, மற்றைய மனிதர்களிடம் – சமூகத்திடம் நம்பிக்கையை ஏற்படுத்திக்கொண்டு நல்லிணக்கம் காணவேண்டியது நமது சமூகத்திற்கே இன்று மிக முக்கியமாகிறது.

மேற்குறிப்பிட்டவாறு உளவியல் அறிஞர்கள் எச்சரிப்பதிலுள்ள உண்மையையும் யதார்த்தத்தையும் நாம் புரிந்து செயற்பட வேண்டும். நாம் உடன் கவனமெடுக்க வேண்டிய பிரச்சினைகளுள் முக்கியமான ஒன்று இது. - ஆசிரியர்

# கட்டணம் குறையும் மின்பட்டியலை தயாரிக்கும் முறை குறித்து கேள்வி

கட்டணம் குறைக்கப்பட்டுள்ள மினசாரப் பட்டியல்களை தயாரிக்கும் வழிமுறை தொடர்பில் அறிவிக்குமாறு திறைசேரியிடம் இலங்கை மின்சார சபை எழுத்துமூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

மின்சார சபையின் தலைவரினால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சபையின் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொது முகாமையாளருமான செனஜித தசநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் ஒவ்வொரு மின் பிராந்தியங்களிலும் வெவ்வேறு கட்டணங்களின் அடிப்படையில் மின்சாரப் பட்டியல்கள் தயாரிக்கப்படுவதாக மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

குறிப்பாக கைத்தொழில் துறை, பொதுப் பணிகள், வணக்கஸ்தலங்கள், ஹோட்டல் துறை என வெவ்வேறு துறைகளுக்கான தனித்தனி கட்டண முறைகள் இலங்கையில் பின்பற்றப்படுகின்றன.

எனவே மின்சார கட்டணங்களுக்கான புதிய வழிமுறைகள் குறித்து திறைசேரியினால் அறிவிக்கப்பட்ட பின்னர் மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் ஊடாக புதிய கட்டண விபரங்களை தயாரிக்க முடியும் என இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# 11 வயது மாணவன் துஷ்பிரயோகம் பாடசாலை அதிபர் கைதானார்

(தலைமன்னார்)

11 வயது பாடசாலை மாணவனொருவரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய அப்பாடசாலையின் அதிபரை பொலிஸார் கைது செய்த சம்பவமொன்று, தலைமன்னார், கட்டுக்காரன் குடியிருப்பு பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவன், மன்னார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார் என மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தலைமன்னார் கட்டுக்காரன் குடியிருப்புப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் ஆறாம் தரத்தில் கல்வி பயின்று வந்த 11 வயது மாணவனொருவரை, கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலையின் களஞ்சியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ள அதிபர், அம்மாணவனின் சீருடைகளைக் களைந்து துஷ்பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில், குறித்த மாணவனின் பெற்றோர், தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்ததை அடுத்து, நேற்று முன்தினம் மேற்படி பாடசாலையின் அதிபரை பொலிஸார் கைது செய்தனர்.

# வீட்டில் விழுந்தது இடி; கணவன், மனைவி காயம்

தலைமன்னார், பியரில் உள்ள வீடு ஒன்றின் மீது நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு இடி விழுந்ததில், அவ்வீட்டிலிருந்த கணவன், மனைவி இருவரும் காயமடைந்த நிலையில் தலைமன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை முதல் நிலவிய காலநிலை மாற்றம் காரணமாக இடி, மின்னலுடன் மழை பெய்துள்ளது.

இந்நிலையில், இரவு 7.30 மணியளவில், தலைமன்னார் தபால் அலுவலகத்தில் கடமை புரியும் என்.பாலச்சந்திரன் என்பவரும் அவரது மனைவியும் வீட்டில் இருந்த சமயத்தில், அவர்களின் வீட்டுச் சுவரின் மீது இடி விழுந்து வீடு சிறு சேதத்துக்கு உள்ளாகியது.

அத்துடன், அங்கு பொருத்தப்பட்டிருந்த மின் வயர்கள் முற்றாக எரிந்ததுடன் அங்கு இருந்த மின்சார உபகரணங்கள் யாவும் சேதமடைந்துள்ளன. குறித்த சம்பவம் தொடர்பாக தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், அச்சமயத்தில் வீட்டில் இருந்த கணவனும் மனைவியும் இடி தாக்கத்துக்கு உள்ளாகி காயமடைந்த நிலையில், தலைமன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று தற்போது வீடு திரும்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# 399 கோடி ரூபா வரி மோசடி எண்மருக்கு 20 வருட சிறை

## கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

சுமார் 399 கோடி ரூபா வரி மோசடியுடன் தொடர்புடைய 8 பிரதிவாதிகளுக்கு தலா 20 வருட சிறைத் தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

இந்த 8 பிரதிவாதிகளும் நீதிமன்ற உத்தரவை மீறி வெளிநாடு சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் பிரதிவாதிகள் இன்றியே வழக்கு விசாரணை செய்யப்பட்டது.

இந்நிலையில் பிரதிவாதிகள் எண்மரும் 30 மில்லியன் ரூபா அபராதம் செலுத்த வேண்டும் என கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்ரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

பிரதிவாதிகளின் சொத்து விபரங்கள் .குறித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி இரகசிய பொலிஸாருக்கும் சட்டமா அதிபருக்கும் நீதிபதி பணித்துள்ளார். சொத்துக்கள் அரசுடமையாக்கப்படும் என்றும் நீதிபதி அறிவித்துள்ளார்.

தெற்காசியாவில் பாரிய வரி மோசடி எனக் கருதப்படும் 399 கோடி ரூபா வரி மோசடியுடன் தொடர்புடைய தேசிய வருமான வரி திணைக்களத்தின் முன்னாள் பிரதி ஆணையாளர் குணசிறி டி சொய்சா ஜயதிலகவிற்கு கடந்த மாதம் .8 ஆம் திகதி நீதிமன்றம் 1198 கோடி ரூபா அபராதம் விதித்தது குறிப்பிடத்தக்கது.

# பெண்கள் குறித்த இலங்கை சட்டம் முன்னுதாரணமாகக் கொள்ளும் பூட்டான்

பெண்களின் வீட்டு வன்முறைகளை தடுப்பது குறித்து இலங்கையின் நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்கள் குறித்து ஆராய்ந்து அதனை முன்மாதிரியாகக் கொண்டு பூட்டானில் இந்த சட்டங்களை அமுல் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பூட்டான் அரசின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

பூட்டான் அரசின் பிரதிநிதிகள் குழு ஒன்று தற்சமயம் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது. பத்தரமுல்லையிலுள்ள செத்சிறிபாயவில் உள்ள சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சிற்கு விஜயம் செய்த மேற்படி பிரதிநிதிகள் அமைச்சின் அதிகாரிகளுடனான சந்திப்பின் போது இதனைத் தெரிவித்தனர்.

வீட்டு வன்முறைகளை தடுப்பது குறித்த சட்டங்கள் எதுவும் இதுவரை பூட்டானில் முறையாக அமுல நடத்தப்படவில்லை. இது தொடர்பாக ஆசிய நாடுகளிடையே இலங்கையிலேயே மிகவும் வெற்றிகரமாக இச்சட்டம் அமுல் நடத்தப்படுகிறது. எனவே இந்த சட்டங்களை தமது நாட்டிலும் முன்னுதாரணமாக கொள்ளவே தாம் தீர்மானித்துள்ளதாக அந்த நாட்டிலிருந்து வருகை தந்துள்ள பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

# ஒழுக்கநெறி பிறழாது கல்வியைப்பெற இறைசிந்தனையை வழங்க வேண்டும்

## இளையதம்பி சபாரத்தினசிவம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் தமது கல்வியை ஒழுக்க நெறி பிறழாது பெற்றுக் கொள்ள கல்வியுடன் இறைசிந்தனை சக்தியையும் ஒருங்கே கொண்டிருக்க வேண்டும்.

இவ் இறைசக்தி சிந்தனையை வழங்க கல்விக்கூடங்களும், மாணவர்களின் பெற்றோர்களும் ஒருங்கே முன்னின்று உழைக்க வேண்டும்.

இவ்வாறு பிரதம அதிதியாக கலந்து கொண்ட நவாலி வடக்கு பெத்தளாச்சி நாச்சிமார் ஆலய பிரதம குரு சிவத்திரு இளையதம்பி சபாரத்தினசிவம் தெரிவித்தார்.

'சிறுவர்களுக்கான ஆன்மீக கல்வியும், இசையும்' எனும் தொனிப்பொருளில் நவாலி ஹேமலதா ஞாபகார்த்த ச.ச.நிலையத்தில் நிகழ்வு ஒன்று இடம் பெற்றது. இதில் கலந்து கொண்ட ஆலய பிரதம குரு சிவத்திரு. கி.சபாரத்தின சிவம் மேலும் தெரிவிக்கையில்,

இன்று எங்கு பார்த்தாலும் ஊடகங்களில் வன்புணர்வு, கொலை, பாலியல் முயற்சி, தற்கொலை, சிறுவர் துஷ்பிரயோகம், கடத்தல் என்று வன்முறைகள் நீண்டு கொண்டே செல்கின்றன.

இந்த இழிநிலையான செயல்களைச் செய்வது யார்? இந்த சமூகங்களில் பிறந்து முறையான கல்வியையும் முறையான இறை சக்தியையும் கொண்டிராத இளைஞர் சக்திகளே இப் பாதக செயலைச் செய்கின்றனர்.

இவ்வாறான பாதக செயல்கள் மூலம் இறுதியில் அவர்கள் நீதி மன்றங்களின் ஊடாக செல்லொணா தண்டனைகளை அனுபவித்து வருகின்றனர். எனவே எமது நாட்டில் உள்ள பாடசாலைகளில் கறபிக்கும் ஆசிரியர் முதல் அதிபர் வரை தமது மாணவர்களை கல்வி, விளையாட்டு, ஒழுக்கம், இறைதியானம், இசை போன்ற அற்புத செயல்களில் முழுமையாக ஈடுபடுத்த அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என்றார்.

இதேபோல பெற்றோர்களும் தமது பிள்ளைகளின் கல்விநிலை ஒழுக்க நிலையில் தினமும் போதனை செய்ய வேண்டும் அத்துடன், தினமும் அவர்களைக் கண்காணித்து அவர்களின் முன்னேற்றங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

மாணவர்கள் உயர்தர கற்கை நெறி முடிவடைந்து பல்கலைக் கழகம் செல்லும் வரை அவர்களிடம் கைபேசி வழங்குவதை தவிர்க்க வேண்டும். ஒவ்வொரு மாணவனும் படிக்கும் காலங்களில் கல்வியுடன் இசை, நாடகம், மற்றும் இசைக்கருவிகள் வாசிப்பதிலும், ஊடகப்படிப்பிலும் அக்கறை செலுத்தவேண்டும். இன்று பல்கலைக்கழகம் செல்பவர்களில் அதிகமானவர்கள் பெண்கள், அரச அலுவலகங்களில் ஆண்களை விட பெண்களே கூடுதலாக தொழில் புரிந்து வருகின்றனர்.

இன்றைய இளைஞர்கள் இலத்திரனியல் சாதனங்களின் முன்னேற்றம், தொலைக்காட்சி, களியாட்டம், கைபேசி, இணையத்தளங்களில் ஈடுபடுவதே இன்றைய அழிவுகளுக்கு காரணமாகும். எனவே ஒட்டுமொத்தமாக எல்லோரும் எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஒருங்கே பாடுபட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (92)

# மஞ்சள் கோட்டு கடவையில் மோ.சைக்கிள் நடவடிக்கை எடுக்க தவறியது பொலிஸ்



(யாழ்ப்பாணம்)

மஞ்சள் கோட்டு கடவையில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி வைத்து போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்தவர்களுக்கெதிராக பொலிஸார் நடவடிக்கை மேற்கொள்ள தவறியுள்ளதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக போடப்பட்டுள்ள மஞ்சள் கோட்டுக் கடவையில், மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி விட்டு பயணிகள் சிலர் சென்றுள்ளதாகவும். நோயாளிகளை காவிச் செல்லும் அம்புலன்ஸ் வண்டிகள் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு செல்வதற்கு இடையூறு விளைவிக்கும் விதமாகவே இந்த மோட்டார் சைக்கிள்கள் நிறுத்தப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 1 மணித்தியாலங்களுக்கு மேலாக் மோட்டார் சைக்கிள்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்ததாகவும் இதற்கு யாழ்.போக்குவரத்து பொலிஸார் எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப் படுகின்றது. (25)

# பொருளியல் பேராசான் நினைவாக மாணவர்களுக்கு உதவிப்பொருட்கள்



(யாழ்ப்பாணம்)

மறைந்த பொருளியல் பேராசான் வரதராஜனின் 31 ஆவது நாள் நினைவை முன்னிட்டு யாழ்.எய்ட் நிறுவனத்தினால் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் மேம்பாட்டிற்கு பல்வேறான உதவிப் பொருட்களும் ஒரு தொகுதி ஆடைகளும் வழங்கப்பட்டன.

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அதிபர் ரங்கநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.எய்ட் நிறுவனத்தின் ஸ்தாபர் தி.நடன சபேசன், நிறுவனப் பணிப்பாளர் கமலக்கண்ணன், திட்டப் பணிப்பாளர் பார்த்தீபன் ஆகியோர் கலந்து கொண்டு உதவிப் பொருட்களை வழங்கியுள்ளனர். இந்நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் பங்கு கொண்டனர்.

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்துக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவதற்கு உரிய அனுசரணையை சமூக சேவையாளர்களும், கனடா வாழ் புலம் பெயர் ஈழத்தமிழர்களுமான தி.சத்திய மூர்த்தி, செல்வி ச.அஞ்சனா, ம.பிறேம்குமார் ஆகியோர் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)

# பிரேரணையை பட்டியலிட மறுப்பது மனித உரிமையை மீறும் செயல்

## வடமாகாண சபை மீது பாய்கிறார் சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

பிரேரணை ஒன்றை சமர்பித்தால் அதனைப் பட்டியல் இடுங்கள் கட்சி எங்களுக்கு சொல்லட்டும் முன்மொழிவதா இல்லையா என்பதை அதை விடுத்து, நான் பிரேரணையை பட்டியலிட மாட்டேன் என தெரிவிப்பது எமது மனித உரிமையை மீறும் செயல் இது விடயத்தில் நீங்கள் இறுதி முடிவு எடுக்க முடியாது என சிவாஜிலிங்க தெரிவித்தார்.

வடமாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் நேற்றுமுன் தினம் வடமாகாண சபையின் 16 ஆவது அமர்வில் கலந்து கொண்டு தன்னால் வழங்கப்பட்ட பிரேரணை தொடர்பில் பட்டியல் இடப்படவில்லை என்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கறுப்பு சால்வை அணிந்து கொண்டு இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி என்னால் கொண்டு வரப்பட்ட பிரேரணையில் இனப்படுகொலைகள் என்ற பதம் இருக்கின்றது என தெரிவித்து தொடர்ந்து அந்தப் பிரரேரணை ஒத்திவைக்கப்பட்டு வருகிறது.

அடுத்த அமர்வில் இதனை விவாதிக்க விசேடகூட்டத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள் எனத் தெரிவித்தார்.

சிவாஜிலிங்கத்தின் பிரேரணை தொடர்பில் வினவிய போது குறுக்கிட்ட முதலமைச்சர் இப் பிரேரணை மூலம் தற்போதைய சர்வதேச விசாரணைக்கு பங்கம் ஏற்படக் கூடும எனவே இன்னும் கொஞ்சக் காலம் பொறுமை காக்கவும் என கேட்டுக்கொண்டார். (இ)

# ஓடுகள் பிரித்து பொருட்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

சங்கத்தானை அரசடி வீதியிலுள்ள மின் உபகரணங்கள் விற்பனை நிலையம் உடைத்து 1,77,420 ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டுப்போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 23 ஆம் திகதி இரவு 9 மணிக்கு பின்னரே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும் சாவகச்சேரியில் வசித்துவரும் மகாதேவன் (வயது 30) என்பவரது விற்பனை நிலையமே உடைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அன்றையதினம் இரவு 9 மணிக்கு கடையைப் பூட்டிவிட்டு சென்ற உரிமையாளர் மறுநாள் காலை கடைக்கு வந்து பார்த்த போது ஓடுகள் பிரிக்கப்பட்டிருந்ததாகவும் உள்நுழைந்து பார்த்த போது 1,77,420 ரூபா பெறுமதியான மின் உபகரணங்கள் திருட்டுப் போயிருந்தமை தெரியவந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# குண்டர் குழுவால் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பிறந்து ஐந்தே நாட்களான சிசுவை வைத்திருந்த அறைக்கு பக்கத்து ஒழுங்கையில் எரிக்கப்பட்ட குப்பையால் எழுந்த புகை மண்டலத்தால் அந்த குழந்தை மூச்செடுக்க முடியாமல் அவதிப்பட்டதை அவதானித்த தந்தை குப்பையைக் கொழுத்தியவர்களிடம் குப்பையைக் கொழுத்த வேண்டாம் இதனால் குழந்தை சுவாசிக்க முடியாமல் அவதிப்படுகிறது என தெரிவித்தார். இதற்கு குப்பைகொழுத்தியவர்கள் பேச்சுதர்க்கத்தில் ஈடுபட்டதுடன் கூட்டமாக வந்து அவர் மீது தாக்குதலையும் நடாத்தியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக் கிழமை முற்பகல் யாழ்.காங்கேசன்துறை வீதி மதவடிப் பகுதியில் நடைபெற்றது.

இது தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (68)

# பரீட்சை அலுவலர்களுக்கு விபரங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் அலுவலர்களாக கடமையாற்ற விரும்புவோரின் விபரங்கள் பரீட்சைத்திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன.

டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள பரீட்சைக்காக பரீட்சை அலுவலர்களின் விபரங்கள் கல்வி வலயங்களால் பாடசாலை அதிபர்களிடம் கோரப்பட்டுள்ளன. அதிபர் சேவை, ஆசிரியர் சேவையை சேர்ந்த தரம் 1, 2-I இல் உள்ளவர்களின் விபரங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

– 78ஆம் ஆண்டு அரசியல் சாசனத்தின்படி –

# 3ஆவது தடவை ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ போட்டியிட முடியாது

## கூறுகிறது ஜே.வி.பி.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாம் தவ்ணைக்காக ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடுவதனை பூரணமாக நிராகரிப்பதாக ஜே.வி.பி கட்சியின் பிரசாரச் செயலாளர் விஜிதஹேரத் தெரிவித்துள்ளார். 1978ஆம் ஆண்டு அரசியல் சாசனத்தின் அடிப்படையிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரண்டாம் தவணைக்காக பதவிப் பிரமாணம் செய்து கொணடார் எனவும் இதனால் மூன்றாம் த்வணைக்கு போட்டியிடக் கூடிய சட்ட ரீதியான தகுதி கிடையாது எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் குறித்து இன்னமும் எவ்வித தீர்மானமும் கட்சி எடுக்கவில்லை எனவும், தேர்தல் பற்றி அறிவிக்கப்படும் தீர்மானங்கள் எடுக்கப்படும் எனவும், தற்போதைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாம் தவணைக்காக போட்டியிடுதனை தடுக்கும் வகையில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இரண்டாம் தவணைக்காக தெரிவு செய்யப்பட்டதுடன் 2011ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9ஆம திகதியே 18ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

1978ஆம் ஆண்டு அரசியல் சாசனத்தின் அடிப்படையில் ஜனாதிபதியாக இரண்டு தடவைகள் பதவி வகித்தவர் மூன்றாம் தவணைக்காக போட்டியிட முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் போட்டியிட முடியாது எனவும், அவரும்ஏற்கனவே இரண்டு தடவைகள் பதவி வகித்து விட்டார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2011ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொள்ளும் ஜனாதிபதிகள் இரண்டு தடவைகளுக்கு மேல் ஆட்சி வகிக்க முடியும் என குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிட்டால் நீதிமன்றில் வழக்குத் தொடரப் போவதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

2005ஆம் ஆண்டிலும், 2010ஆம் ஆண்டிலும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வதாகக் கூறியே ஜனாதிபதி மகிந்த தேர்தலில் போட்டியிட்டார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரச சேவை வெற்றிடங்களை விரைவில் நிரப்ப நடவடிக்கை

அரச சேவைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன அதிகாரிகளை பணித்துள்ளார்.

அமைச்சில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இந்த அறிவுறுத்தலை அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார்.

இதன் நிமித்தம் அரச முகாமைத்துவ சேவைக்கு 4,429 ஊழியர்களும், நிர்வாக சேவைக்கு 230 உத்தியோகத்தர்களும் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

அத்துடன், தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களாக 640 பேரும் மொழிபெயர்பாளர்களாக 233 பேரும் அரச நிறுவனங்களில் காணப்படும் வெற்றிடங்களுக்கு ஏற்ப அரச சேவையில் புதிதாக இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

மக்களுக்கு அரச துறைகளினூடாக சிநேகபூர்வ சேவைகளை வழங்க அரசாங்கம் தொடர்ச்சியாக புதிய நியமனங்களை வழங்கி வருகிறது. கடந்த காலங்களில் அரச துறைகளில் காணப்பட்ட வெற்றிடங்களுக்காக ஆளணியினர் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

சென்ற வருடங்களில் இலங்கை நிர்வாக சேவைக்கு 687பேரும், முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு 13.294 பேரும் இணைத்துக் கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் கலாசாரத்தை சீரழிக்கும் மம்ஸ் நியூ போய் பிரண்ட் பாடத்திட்டம்

## கொதிக்கிறது பொதுபலசேனா

சர்வதேச பாடசாலைகளில் 4ஆம் வகுப்பு பாடப்புத்தகத்தில் “மம்ஸ் நியூ போய் பிரண்ட்” என்ற பாடம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கையின் கலாசார மத விழுமியங்களோடு இணைந்த குடும்பப் பின்னணி சீரழியும் பயங்கரம் தோன்றியுள்ளதாக பொது பலசேனா தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அரசாங்கம் விசாரணைகளை மேற்கொண்டு சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் கடுமையான சட்டங்களை பிறப்பிக்க வேண்டுமென்றும் தெரிவித்தது.

கொழும்பு கிருலப்பனையிலுள்ள பொதுபலசேனா அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய பொது பலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞான சார தேரர்,

நாட்டின் கல்வித்துறை எமது கலை, கலாசார, மத மற்றும் வரலாற்றுப்பின்னணிகளோடு அமைந்ததாக வகுக்கப்பட வேண்டும்.

இலங்கை மற்றும் தெற்காசிய வலய நாடுகளிலுள்ள குடும்பங்களில் கட்டுப்பாடுகள் ஒழுங்கு விதிமுறைகள் உள்ளன.

இதன்படி தாய், தந்தை, சகோதரி, சகோதரன், மாமன் என உறவுகளைப் பிரித்தறிந்து பண்பாட்டுடன் வாழும் பின்னணி எமக்குள்ளது.

அந்த வரையறையை மீறி கலாசார சீர்கேடுகளுடன் வாழ முடியாது. அது எமது பண்பாட்டுக்கு உசிதமானதல்ல.

நாட்டில் இன்று சர்வதேச பாடசாலைகள் அதிகரித்து எமது குடும்ப பண்பாடுகளை சீரழிக்கும் விதத்திலான பாடத் திட்டங்கள் கற்பிக்கப்படுகின்றன.

இப்பாடசாலைகளில் போதைப் பொருட்கள் தாராளமாக கிடைக்கின்றன.

மோசமான பழக்க வழக்கங்களுக்கு பிள்ளைகள் தள்ளப்படுகின்றனர்.

எமது நாட்டின் வரலாறு, தாய்மொழி, மதக்கல்வி கற்பிக்கப்படுவதில்லை. மேற்குலக கலாசாரத்துடன் இணைந்த பாடத்திட்டங்களே கற்பிக்கப்படுகின்றன.

இதனூடாக மாணவர்கள் மோசமான கலாசார சீரழிவுகளுக்கு உள்ளாகின்றனர்.

எனவே, இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம், கல்வி அமைச்சு கவனம் செலுத்த வேண்டும்.

பாடப்புத்தகங்கள் தொடர்பில் விசாரணைகளை நடாத்துவதோடு அந்த பாடசாலைகளுக்குள் என்ன நடக்கின்றது என்பது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டுமென்றும் ஞானசார தேரர் தெரிவித்தார்.

# விகாரைகளில் சோதனையெனில் பள்ளிவாசல்களில் ஏன் முடியாது?

## கேட்கிறது ஜாதிகஹெலஉறுமய

நாட்டின் பள்ளிவாசல்களில் புலனாய்வுப் பிரிவினரும், பொலிஸாரும் படையினரும் இணைந்து சோதனை நடத்த வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கடசியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளதாவது பள்ளிவாசலில் என்ன நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன, என்ன விடயங்கள் பேசப் படுகின்றன என்பது குறித்து கண்காணிக்கப்பட வேண்டும்.

பௌத்த விகாரைகளில் சோதனை நடத்தப்படுகின்ற போது ஏன் பள்ளிவாசல்களில் சோதனை நடத்த முடியாது? எனக் கேள்வி எழுப்பியுள்ளார். கடும்போக்குவாத மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், மதரசாக்களில் வெளிநாட்டு மத போதகர்கள் எதனைச் சொல்கின்றார்கள் என்பதனை கண்காணிக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான், சவூதி அரேபியா போன்ற நாடுகளைச் சேர்ந்த மத போதகர்கள் கொழும்பு, புத்தளம், பேருவளை மற்றும் வடக்குப் பகுதி பள்ளிவாசல்களில் போதனைகளை செய்து வருகின்றனர். இஸ்லாம் மற்றும் இஸ்லாமிய சட்டங்கள் தொடர்பில் விரிவுரைகள் நிகழ்த்தப்படுகின்றன. அரபு மொழி, வன்முறைகள் கூட போதிக்கப்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் முஸ்லிம் சிறுவர்கள் அடிப்படைவாத முஸ்லிம் கொள்கைகளை பின்பற்றக் கூடிய அபாய நிலைமை காணப்படுகின்றது. எனவே இஸ்லாமிய பாடசாலைகளில் புகட்டப்பட்டு வரும் விடயங்கள் குறித்து கண்காணிப்பு செய்யப்பட வேண்டியது அவசியமாகின்றது. முஸ்லிம்கள் நாள் ஒன்றுக்கு ஐந்து தடவை பள்ளியில் கூடி தொழுகை செய்வதாகவும் என்ன விடயங்கள் பேசுகின்றாரகள் என்பது பற்றியும் கவனிக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் முஸ்லிம் கடும்போக்குவாத நடவடிக்கைகள் கிடையாது எனவும் பள்ளிவாசல்களை கண்காணிக்கப்பட வேண்டிய அவசியம் கிடையாது எனவும் பொலிஸ ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். இலங்கையில் அனைத்து இன மக்களும் சமாதானத்துடன் வாழ்ந்து வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரசியல், சிவில் அமைப்புக்களுடன் இணைந்து புதிய கூட்டணிக்கு தயாராகும் ஐ.தே.க.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்யவும், நாடு எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் ஏனைய அரசியல் கட்சிகள் சிவில் அமைப்புக்களுடன் விரிவான ஓர் கூட்டணியை அமைத்துக்கொள்ள ஐ.தே.கட்சி தீர்மானித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் விரிவான கூட்டணி ஒன்றை அமைப்பதற்கு இணங்கப்பட்டுள்ளது.

நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளாக ஐக்கிய தேசியக் கட்சியையும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியையும் மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளதாக கட்சியின் தேசிய தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்று முடிந்த ஊவா மாகாணசபைத் தேர்தல் முடிவுகளின் மூலம் இந்த விடயம் வெளிப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி ஒன்றின் ஊடாக போட்டியிட்டதுடன், ஐக்கிய தேசியக் கட்சி தனித்து போட்டியிட்டு 40 வீத வாக்குகளைப் பெற்றுக் கொண்டது என குறிப்பிட்டுள்ளார்.

பொது திட்டமொன்றின் அடிப்படையில் கூட்டணி சேர வேண்டியதன் அவசிய்த்தை ஏற்றுக்கொள்வதாக கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேம தாசவும், முன்னாள் பிரதித்தலைவர் கரு ஜயசூரியவும் தெரிவித்துள்ளனர்.

பொதுவான கூட்டணி ஒன்றை அமைக்கும் முனைப்புக்களில் ஐக்கிய தேசியக் கட்சிதலைமைத்துவம் ஏற்று செயற்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளனர்.

நாடு அடைந்துள்ள ஆபத்தான நில்யிலிருந்து மீட்பதற்கு ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்புடன் கூட்டணி ஒன்றை அமைக்க வேண்டுமென தெரிவித்துள்ளனர்.

# ஐ.தே.க வில் இணைகிறார் சஜித்தின் நண்பர் டிரான்

மௌபிம பத்திரிகை நிறுவனத்தின் உரிமையாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டிரான் அலஸ் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் மற்றும் பிரதித் தலைவரின் அழைப்பின் பேரில் அவர் அக்கட்சியில் இணையவுள்ளார்.

டிரான் அலஸ், ஜனநாயக கட்சியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்து வருகிறார்.

பாடசாலை காலத்தில் இருந்தே சஜித் பிரேமதாசாவின் நெருங்கிய நண்பரான டிரான் அலஸ், ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்பட்டிருந்த தலைமைத்துவ நெருக்கடிக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கும் வகையில் முயற்சிகளை மேற்கொண்டதுடன் அதன் பயனாக சஜித் மீண்டும் கட்சியின் பிரதித் தலைவராக நியமிக்கப்பட்டார். இதற்காக நேரடியாக நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் டிரான் அலஸ் ஆகியோர் மீது ஊடகங்கள் விமர்சனங்களை முன் வைத்திருந்தன.

இவ்வாறான விமர்சனங்களுக்கு மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஐக்கியத்திற்காக பாடுபட்டதன் காரணமாக டிரான் அலஸை பொரளை தொகுதியின் அமைப்பாளராக நியமிக்க கட்சியின் தலைவர் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பராமரிப்பின்றி காணப்பட்ட கேணிகள் மீள் புனரமைப்பு செய்ய ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ளூராட்சி சபைக்குட்பட்டு பராமரிப்பு இன்றி காணப்படும் 230 கேணி கள் மீள்புனரமைப்பு செய்யப் படவுள்ளன.

வடமாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளிற்கு கீழ் கடந்த கால மன்னர் மற்றும் ஆட்சியாளர்களால் கட்டப்பட்ட கேணிகள் கைவிடப்பட்டும், தூர்ந்துபோயும், திண்மகழிவுகளால் நிரப்பப்பட்டும் வருகின்றன.

இவ்வாறான கேணிகளின் விபரம் உள்ளூராட்சி அமைச்சு ஊடாக மீளவும் திரட்டப்படவுள்ளன. கடந்த காலங்களில் நிலத்தடி நீரை கால்நடைகளின் குடிதண்ணீர் தாகத்தை தீர்க்கும் நிலையமாக உரசல் கல்லுகள் பொருத்தப்பட்டு புனரமைக்கப்பட்டன.

இவ்வாறான கேணிகள் தற்போது அழிவடைந்து வருகின்றன. என்பதனை மாகாண சபை உறுப்பி னர்கள் தெரிவித்ததை அடுத்து முதலமைச்சர் நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (92)




**சமூகசேவை அமைச்சின் செயலாளர் இமெல்டா சுகுமார் கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறியிடம் கரவெட்டி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கென சக்கரநாற்காலிகள் கையளிப்பதைக் காணலாம். (18)**

# வவுனியா பிரதேச செயலகத்தில் கலை இலக்கிய விழா



(வவுனியா)

வவுனியா வடக்கு பிரதேச செயலக கலை இலக்கிய விழா நேற்றுமுன்தினம் நெடுங்கேணி கதிர்வேலாயுத சுவாமி ஆலயக் கலையரங்கில் இடம்பெற்றது. வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின்போது நெடுங்கேணி மகாவித்தியாலயத்திலிருந்து நெடுங்கேணி கதிர்வேலாயுத சுவாமி ஆலய கலையரங்குவரை விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர்.

இந்நிகழ்வின் போது பாரம்பரிய கலாசார நிகழ்வுகளும் கவியரங்கங்களும் கோலாட்டம் போன்ற கலைநிகழ்வுகளும் இடம்பெற்றதோடு மருதமுகிழ் இதழ் - 4 நூல் வெளியீடும் இடம்பெற்றது.

பிரதம விருந்தினர்களாக வட மாகாண கல்வியமைச்சு பண்பாட்டாலுவல்கள் பிரதிப் பணிப்பாளர் திருமதி உஷா சுபலிங்கம், வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி பராசக்தி கணேசலிங்கம், நெடுங்கேணி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர்.மதிவதனன், வவுனியா தமிழ்ச்சங்க செயலாளர் தமிழருவி த.சிவகுமரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. இப் பிரதேசத்தில் பெயர் பெற்ற கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். (40)

# சுயதொழிலை மேற்கொள்ள பயனாளிகளுக்கு நிதி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சமூக சேவைதிணைக்களத்தினால் கரவெட்டி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 3 பயனாளிகளுக்கு சுயதொழிலை மேற்கொள்வதற்காக நிதி வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் எஸ்.சிவசிறி தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு பயனாளிகளுக்கும் தலா 15000 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளதாகவும் இவர்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமூக சேவைப்பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துளளார்.

ஆடு வளர்ப்பிற்காக பதிவு செய்தவர்களான அல்வாய் தெற்கைச் சேர்ந்த கோபாலன் சிறிதரன் இமையாணான் மேற்கைச் சேர்ந்த சிங்கராசா உதயகுமார் ஆகியோரும் கோழி வளர்ப்புக்காக பதிவுசெய்த சமரபாகுவைச் சேர்ந்த கந்தையா செல்வராசா ஆகியோரையே சமூக சேவை பிரிவுடன் தொடர்புகொண்டு பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (18)

# றோட்டறிக் கழகத்தினால் கல்வி உபகரணங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

காலி றோட்டறிக் கழகத்தினர் நல்லூர் றோட்டறிக் கழகத்தினருடன் இணைந்து கோப்பாய மகாவித்தியாலய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளனர். நேற்று முன்தினம் பாடசாலை மண்டபத்தில் வித்தியாலய அதிபர் த.ஞானப்பிரகாசம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வின் போது விருந்தினர்கள் அனைவரும் வித்தியாலயத்துக்கு சமீபமாகவுள்ள ஆலயத்திலிருந்து ஊர்வலமாக பாண்ட் வாத்திய சகிதம் மேடைக்கு அழைத்து வரப்பட்டனர். மங்கள விளக்கேற்றல், இறைவணக்கம் வரவேற்பு நடனம் ஆகியன இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து வரவேற்புரையைப் பிரதி அதிபர் திருமதி.ஜெ. சேவற்கொடியோன் நிகழ்த்தினார்.

தலைமையுரையையடுத்து மாணவர் உரைகளை செல்வி. மோ.தேவப்பரியா, செல்வன் ச.மயூரன் ஆகியோர் நிகழ்த்தினர். கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராசா, யாழ்.கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன், கிராம உத்தியோகத்தர் எஸ்.பாலசுப்பிரமணியம், காலி றோட்டறிக் கழகத் தலைவர் வை.கீர்த்தி டயஸ், நல்லூர் றோட்டறிக் கழகத் தலைவர் ரீ.ரவீனதாஸ், றோட்டறியன் மோகன்ராஜ் மற்றும் பல விருந்தினர் உரைகளை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் 60 சப்பாத்துக்கள், 49 புத்தகப்பைகள், 500 அப்பியாசக் கொப்பிகள் என ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் றோட்டறிக்கழகங்களினால் வழங்கப்பட்டன. (137)

# முரசின் இன்றைய பலன்



(27.09.2014 சனிக்கிழமை)

ஜய வருஷம் புரட்டாதி மாதம் 11 ஆம் திகதி.
திருதியை - அமிர்தசித்தம்.
சுவாதி நட்சத்திரம் மு.இ. 10.24 வரை. பின் விசாகம்.
இராகு காலம் 09.02 - 10.32 வரை. சுபநேரம் 03.02 - 04.32 வரை.

**ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | ஆவணங்களில் இடம்பெற்ற பிழையான எழுத்து பிரயோகங்களைச் சரியாக்க ஏற்றநடவடிக்கையில் ஈடுபடல், தொலைபேசி உரையாடல்மூலம்நிறுவனங்களில்இருந்து வரவேண்டிய நிலுவைபற்றி குறிப்பிடல். |
| ரிஷபம் | முகம் பார்த்துக் கதைப்பதன் மூலம் மனதில் உள்ள துயர்தீரல், அரசியல் பிரமுகர்களின் கருணை பெற்ற பதவி பெறநாடிச் செல்லல். |
| மிதுனம் | பெற்றோரின் புத்திமதியை வேதவாக்காகக் கொண்டதால் வரவிருந்த துயர் விலகிவிடல், மடிக்கணினி மூலம் விவாகத்திற்காக ஏற்ற வரனைத்தேடிப்பார்த்தல். |
| கடகம் | குடியிருந்தவரை வீட்டை விட்டு எழுப்புதல், வீட்டு வாடகை அதிகரித்ததால் கைவிட்டு வேறுமனைதேட வெளிக்கிடல். |
| சிம்மம் | பொறுப்பின்றிக் கொடுத்த பணத்தைப்பெற முடியாத நிலையில் முறையிடச் செல்லல், திகதி தப்பிய பொருளை கட்டியழிக்க முயன்றவருடன் வாக்குவாதப்படல். |
| கன்னி | கௌரவ பதவிக்கு சிபார்சுடன் விண்ணப்பித்தும் கிடைக்காமையிட்டு கவலையடைதல், பெற்றோரின் நோய் நிலைமுன்னிட்டு மகளை உள்ளூர்மணமகனுக்கே விவாகம் செய்ய எண்ணிச்செயற்படல். |
| துலாம் | இரவில் துயிலும் போது யன்னல் கரையைத்தவிர்ப்பது திருடரால் ஏற்படும் ஆபத்து விலகிவிடல், ஓய்வு பெற்ற பினனரும் மீள்நியமனம் பெறவிண்ணப்ப முயற்சியில் ஈடுபடல். |
| விருச்சிகம் | தொலைந்த ஆபரணம் பகீரதப்பிரயத்தால் எடுத்து தேடலின விளைவாக சிக்குதல், வாஸ்து சோதிடவிதிக்கேற்ப புதியமனை அமைக்க நிலமெடுக்க சோதிடரை நாடுதல். |
| தனுசு | பழையவாகனத்தை மெருகூட்டி விற்பனை செய்ய முயற்சி செய்பவரில்எச்சரிக்கையாக இருக்கவும், திகதி தப்பிய மருந்துப பொருட்களை கொள்வனவு செய்வதை தவிர்த்தல் நன்று. |
| மகரம் | முதிர்கன்னிகளைக் கரைசேர்க்க பதவியை விட்டு ஓய்வுபெற எண்ணுதல், மைந்தனைத்திருத்தி நல்வழிக்குக் கொண்டுவர முயற்சித்தல். |
| கும்பம் | வாகனம் நிற்பாட்ட முன்இறங்க முற்படுவதையும் ஓடிச் சென்று ஏற முயல்வதையும் தவிர்த்துக்கொள்ளுங்கள், கௌர வப்பாதிப்பை முன்னிட்டு நிகழ்வுக்கு சமூகமளிக்காது விட்டுவிடல். |
| மீனம் | போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றி பரிசில், பாராட்டும் பெற்று மகிழ்வடைதல், நாகபாம்பை அடித்துக்கொண்றதால் தோஷம் ஏற்படலாம் என்ற பயப்பிராந்தி அடைதல். |

## மென்பந்து கிரிக்கெட் முல்லைத்தீவில் இன்று

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - முள்ளியவளை விநாயகர் விளையாட்டுக் கழகம் நடாத்தும் பத்து ஓவர்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று முதல் நாளை மறுதினம் வரை விநாயகர்விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

விலகல் முறையில் நடைபெறவுள்ள இப்போட்டித் தொடரில் 18இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குகொள்ளவுள்ளதாகவும், இப்போட்டித் தொடரின் அரையிறுதி, இறுதி ஆட்டங்கள் நாளை மறுதினம் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கிண்ணம் வெல்லும் அணிக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## சம்பியன் லீக்; இன்றைய ஆட்டம்

**டொல்பின்ஸ் எதிர் நோதென்**

**இடம்: பெங்களூர்**


**நேரம்: மாலை 4 மணி**

**பேர்த் ஸ்கார்ச்சர்ஸ் எதிர் சென்னை சூப்பர் கிங்ஸ்**

**இடம்: பெங்களூர்**

**நேரம் : இரவு 8 மணி**

# தலைமை பயிற்றுநராக நியமனம் கௌரவமாக கருதும் அத்தப்பத்து



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுநராக என்னை தெரிவு செய்திருப்பது எனக்கு கிடைத்த பெரும் கௌரவமாக கருதுகின்றேன் என அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுநராக அத்தப்பத்து கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவு செய்யப்பட்டார். தலைமைப் பயிற்றுநராகத் தெரிவு செய்யப்பட்டமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அத்தப்பத்து மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நியமனம் கிடைத்ததை பெரும் கௌரவமாகக் கருதுகின்றேன். கிரிக்கெட் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் அணிக் கப்டனாக இருக்கக் கிடைத்தமை பெரும் பாக்கியம். ஒவ்வொரு வீரருக்கும் நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்ற விருப்பம் இருக்கும்.

நான் விளையாடிய காலத்தில் அணிக்காக என்னை அர்ப்பணித்து ஆடினேன். அதன் விள்ளவாக கப்டன் பதவி எனக்கு வழங்கப்பட்டது. ஒரு கிரிக்கெட் வீரராக, கப்டனாக இருந்து நாட்டிற்கு பெருமை சேர்த்தது போன்று தலைமைப் பயிற்றுநராக இருந்தும் நாட்டிற்குப் பெருமை சேர்க்க முயற்சிப்பேன். பயிற்றுநர் பதவி என்பது சவால் நிறைந்தது. கடந்த இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் அணிகளுக்கெதிரான தொடர்களின் போது இடைக்கால பயிற்றுநராக செயற்பட்டதன் மூலம் நிறைய அனுபவங்களைப் பெற்றுள்ளேன். அணியில் உள்ள ஒவ்வொருவரும் சாதிக்க வேண்டும் என்ற வேட்கையுடன் உள்ளனர். அவர்களுடன் நெருங்கிப் பழகி வருகின்றேன். அவர்களின் மன நிலையை என்னால் இலகுவாகப் புரிந்துகொள்ள முடிகின்றது.

வீரர்களுக்கும் எனக்குமிடையில் நல்ல புரிந்துணர்வு இருக்கின்றது. அடுத்து வரும் தொடர்கள் பெரும் சவால் நிறைந்தது. உலகக் கிண்ணத் தொடருக்கு தயார்படுத்திக் கொள்ளும் வகையில் இதனை நாங்கள் பயன்படுத்திக்கொள்ள முயற்சிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வாழ்நாள் சாதனையாளராக கௌரவிக்கப்பட்டார் கபில்



(லண்டன்)

லண்டனில் உள்ள "ஹவுஸ் ஒப் லோர்ட்ஸில்" நடைபெற்ற நிகழ்ச்சியில், முன்னாள் இந்திய கிரிக்கெட் அணி கப்டன் கபில்தேவுக்கு, வாழ்நாள் சாதனையாளருக்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்திய - ஐரோப்பிய வர்த்தக அமைப்பு சார்பில், வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கும் நிகழ்ச்சி, லண்டனில் உள்ள 'ஹவுஸ் ஒப் லோர்ட்ஸில்' நேற்று முன்தினம் நடைபெற்றது. இவ்விருது முன்னாள் இந்திய கிரிக்கெட் அணி கப்டன் கபில்தேவுக்கு வழங்கப்பட்டது. இவர் 1983இல் இந்தியாவுக்கு முதன்முதலில் உலக கிண்ணத்தைப் பெற்றுக்கொடுத்தது மற்றும் குஷீ சங்கம் சார்பில் ஏழை மற்றும் ஆதரவற்றோர்களின் முன்னேற்றத்துக்கு பாடுபட்டது உள்ளிட்ட காரணங்களுக்காக கிடைத்தது.

இது குறித்து கபில்தேவ் கூறுகையில், இந்தியனாக இருப்பதில் பெருமை அடைகிறேன். தற்போதுள்ள நிலையில், இந்தியா, உலக அளவில் எந்த நாட்டுடனும் வர்த்தகத்தில் ஈடுபட தயாராக உள்ளது. எனக்கு இங்கிலாந்தை பிடிக்காது. ஏனெனில் பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவை ஆட்சி செய்தனர். அதேவேளையில், அவர்களால் சிறப்பாக விளையாட முடியாத கிரிக்கெட்டை எங்களுக்கு வழங்கியதில் மகிழ்ச்சி. அவர்கள் மூலம் வந்த ஆங்கில மொழியை என்னால் நன்றாக பேச முடியாது என்றார்.

# ஹிஜாப்பால் தடை எதிரணிக்கு வெற்றி



17ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்கள் கூடைப்பந்து லீக் ஆட்டத்தில் கட்டார்-மங்கோலியா அணிகள் மோதவிருந்தன. இந்தப் போட்டியில் பங்கேற்கும் முஸ்லிம் நாடான கட்டார் அணியின் வீராங்கனைகள் முகத்தில் ஹிஜாப் அணிந்து களம் இறங்க வந்தனர்.

இது சர்வதேச கூடைப்பந்து சம்மேளன விதிமுறைக்கு முரணானது. பர்தாவை அகற்றினால் மட்டுமே களம் இறங்க முடியும் என்று போட்டி அமைப்பு குழுவினர் உறுதியாக தெரிவித்தனர்.

இதற்கு கட்டார் அணி நிர்வாகிகள் ஆட்சேபனை தெரிவித்தனர்.

தங்கள் மத நம்பிக்கைக்கு மாறாக தங்களால் செயற்பட முடியாது. ஹிஜாப் அணிந்து களம் இறங்க தடை விதித்திருப்பது நியாயமற்றது என்று வாதிட்டதுடன் களம் இறங்க மறுத்து விட்டனர். ஆனால் அதற்கு போட்டி அமைப்பு குழுவினர் செவிசாய்க்கவில்லை. இதனால் ஆடாமலேயே மங்கோலியா அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இந்த சர்ச்சை குறித்து கட்டார் அணியின் நிர்வாகி முகமது கூறுகையில், ஹிஜாப்புடன் விளையாடலாம் என்று எங்களுக்கு முதலில் தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது ஹிஜாப்புடன் விளையாட எங்களை ஏன் அனுமதிக்க மறுக்கிறார்கள் என்பது புரியவில்லை.

ஹிஜாப் அணிவதால் எதிரணிக்கு ஆபத்து ஏற்படுத்தும் என்றோ அல்லது எதிர்மறையான தாக்கத்தையோ ஏற்படுத்தும் என்றோ நான் நினைக்கவில்லை. ஹிஜாப் தடை விவகாரத்தில் தங்கள் முடிவை போட்டி அமைப்பாளர்கள் மாற்றிக் கொள்ளாவிட்டால் நாங்கள் இந்தப் போட்டியில் விளையாடமாட்டோம் என்ற நிலையில் உறுதியாக இருக்கிறோம் என்றார்.

# அரையிறுதியில் பெட்ரா கிவிடோவா

சிங்கப்பூரில் நடந்து வரும் ஊஹன் ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் செக் குடியரசை சேர்ந்த பெட்ரா கிவிடோவா, பிரான்ஸ் நாட்டின் கரோலின் கார்சியாவை வீழ்த்தி அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

விம்பிள்டன் போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற 24 வயதான கிவிடோவா, 20 வயதேயான கார்சியாவை 6-3, 6-4 என்ற செட் கணக்கில் தோற்கடித்தார். தர வரிசையில் 49ஆம் நிலை வீராங்கனையான கார்சியாவின் கனவு இதனால் தகர்ந்து போனது.

கடந்த போட்டிகளில் முன்னாள் உலக தர முதல்நிலை வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் மற்றும் அக்னீஸ்கா ராட்வான்ஸ்கா ஆகியோர்ரை வீழ்த்தி காலிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றார் கார்சியா. ஆனால் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் செய்த பல தவறுகளால் தோல்வியை தழுவும் நிலைக்கு அவர் தள்ளப்பட்டார்.

இது குறித்து கிவிடோவா கூறுகையில், கார்சியாவுக்கு இந்த வாரம் சிறப்பானதாக அமைந்திருந்தது. அவர் வீனஸ் மற்றும் அகா ஆகியோரை தோற்கடித்து முன்னேறினார். ஆனால் போராட்டத்திற்கு எப்பொழுதும் கார்சியா தயாராக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# உள்ஞரில் அனுமதி



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சசித்ர சேனாநாயக்கவுக்கு எதிர்வரும் வர்த்தக சேவை கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் விளையாடுவதற்கான வாய்ப்பை வழங்க இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

பந்து வீச்சு தொடர்பில் சர்வதேச கிரிக்கெட் சபையினால் சசித்ர சேனாநாயக்கவுக்கு போட்டித் தடை விதிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவர் மேற்கு அவுஸ்ரேலிய பல்கலைக்கழக நிபுணர்களுடன், தமது பந்து வீச்சு முறைமை தொடர்பான பல சுற்றுப் பயிற்சி களில் தற்சமயம் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மகளிர் கிரிக்கெட்

## இலங்கைக்கு முதல் பதக்கம்

17 ஆவது விளையாட்டு விழாவில் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி வெண்கல பதக்கம் வென்றுள்ளது.

வெண்கல பதக்கத்திற்காக நடைபெற்ற போட்டியில் சீன மகளிர் அணியை 5 விக்கெடுக்களால் இலங்கை மகளிர் அணி தோற்கடித்துள்ளது.

இந்தப் போட்டியில் முதலில் ஆடிய சீன மகளிர் அணி, 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 65 ஓட்டங்களை பெற்றது.

66 ஓட்ட வெற்றியிலக்கை நோக்கி பதிலளித்தாடிய இலங்கை மகளிர் அணி 17.1 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து இலக்கை எட்டியது. இதன் மூலம் ஆசிய விளையாட்டு விழாவில் இலங்கை சுவீகரித்த முதலாவது பதக்கமாக இது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பதக்கப் பட்டியல்

தென் கொரியாவின் இன்ச்சான் நகரில் 17ஆவது ஆசிய விளையாட்டு விழா நடைபெற்று வருகின்றது. இதில் பதக்கப் பட்டியலில் முன்னணியில் உள்ள நாடுகளின் விபரம் வருமாறு:

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 79 | 42 | 34 | 155 |
| ஜப்பான் | 28 | 36 | 32 | 096 |
| தென் கொரியா | 28 | 33 | 31 | 092 |
| கஜகஸ்தான் | 06 | 08 | 16 | 030 |
| வடகொரியா | 06 | 07 | 09 | 022 |
| சீன தைபே | 05 | 03 | 06 | 014 |
| ஈரான் | 04 | 06 | 04 | 014 |
| ஹொங்கொங் | 04 | 05 | 14 | 023 |
| மங்கோலியா | 04 | 03 | 06 | 013 |
| மலேசியா | 02 | 04 | 04 | 010 |
| மியான்மார் | 02 | 00 | 00 | 002 |
| வியட்னாம் | 01 | 05 | 16 | 022 |
| சிங்கப்பூர் | 01 | 03 | 06 | 010 |
| குவைத் | 01 | 03 | 01 | 005 |
| இந்தியா | 01 | 01 | 13 | 015 |

## கூட்டுறவாளர் தின விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

92ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தினை முன்னிட்டு யாழ். மா.சி.க. கூ.ச. சமாசம் நடாத்தும் மாபெரும் விளையாட்டுப் போட்டி இன்று காலை 8.30 மணி முதல் இரவு 6.00 மணி வரை யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி நிகழ்வில் பல வகையான விளையாட்டுக்கள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், சி.க.கூ.சங்க அங்கத்தவர்கள் ஏனைய கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

இதேவேளை, இப்போட்டி நிகழ்வை யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய மட்ட ஆணழகன் போட்டி வடமராட்சி வாசியும் பங்கேற்பு

(கொழும்பு


தேசிய மட்ட ஆணழகன் போட்டிகள் நாளை கொழும்பில் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டியில் வடமராட்சியைச் சேர்ந்த ஜோன் வானேந்திரன் நிவிந்தன் பங்குபற்றவுள்ளார்.

இவர் கடந்த வருடம் பருத்தித்துறை பாரதி விளையாட்டுக்கழகத்தினால் வடமாகாண ரீதியில் நடாத்தப்பட்ட ஆணழகன் போட்டியில் சம்பியன் பட்டம் வென்றிருந்தார். அத்துடன் இந்த வருடம் பாரதி விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்ட ஆணழகன் போட்டியிலும் சம்பியன் பட்டம் வென்றிருந்தார். இப்போட்டி 50 கிலோ எடை தொடக்கம் 85 கிலோ எடை வரையுள்ளவர்கள், 7 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு நடாத்தப்பட்டது. 7 பிரிவுகளிலும் முதலிடங்களை பெற்றவர்களுக்கு கிராண் சம்பியன் பட்டம் வழங்கப்பட்டது. இதில் ஜோன் வானேந்திரன் நிவிந்தன் இவ்வருடம் சம்பியனாகியிருந்தார்.

தேசிய மட்ட போட்டியில் பங்குபற்றுவது குறித்து கருத்துத் தெரிவித்த நிவிந்தன், தேசிய மட்ட ஆணழகன் போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களுக்கு தனித்தனியான பயிற்றுநர்கள் இருப்பார்கள். உடல் ஆரோக்கியம் தொடர்பாக ஒரு பயிற்றுநரும், உடலின் அழகு, மற்றும் கட்டிங் தொடர்பாக பயிற்றுவிக்க ஒரு பயிற்றுவிப்பாளரும், ஊட்டச்சத்துமா வகைகள், உணவுகள் தொடர்பாக கவனிப்பதற்கு உணவுசார் நிபுணர் ஒருவரும், உடல் நலன் தொடர்பாக கவனிக்க தனிப்பட்ட வைத்தியர் ஒருவரும் இருப்பார்.

எல்லாவற்றுக்கும் மேலாக அனுசரணை நிறுவனம் ஒன்று ஒவ்வொரு ஆணழகனுக்கும் இருக்கும். ஆனால், வடமாகாண ஆணழகன்களுக்கு இவ்வாறான எந்தவித வசதி வாய்ப்புக்களும் இல்லை. வடமாகாணத்தில் ஆணழகன் போட்டிக்கு தயாராகும் வீரர்கள், தமது சொந்தச் செலவிலும் முயற்சியிலும் தங்களைத் தாங்களே தயார்ப்படுத்தி, போட்டிகளின் திகதிகளை தேடி அறிந்து பங்குபற்ற வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றனர்.

என்னைப் பொறுத்தவரையில் எனக்கு குடும்ப ரீதியில் பண வசதிகள் இல்லை. இருந்தும் என் குடும்பம் எனக்கு உறுதுணையாக இருக்கின்றது. இதனால் நானாகவே தயாராகி போட்டிகளில் பங்குபற்ற முடிகின்றது எனத் தெரிவித்தார்.



# தேசிய மட்ட எறிபந்தாட்டப் போட்டி
## காலிறுதியுடன் வடமாகாணம் வெளியேற்றம்

(கொழும்பு)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்துப் போட்டியில் வடமாகாணப் பாடசாலை அணிகள் காலிறுதிப் போட்டியுடன் வெளியேற்றப்பட்டுள்ளன.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட எறிபந்துப் போட்டி கடந்த 23,24,25ஆம் திகதிகளில் கொழும்பு சிவெலி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாணம் சார்பாக பல அணிகள் பங்குகொண்டபோதிலும் காலிறுதிப் போட்டிக்கு மூன்று அணிகள் தகுதிபெற்றிருந்தன. இருப்பினும் அந்த மூன்று அணிகளும் காலிறுதிப் போட்டியுடன் வெளியேற்றப்பட்டன. இதில் பெண்களுக்கான காலிறுதிப் போட்டியில் கனகனராயன்குளம் மகாவித்தியாலய அணியும் சிலிவிய மத்திய கல்லூரி அணியும் மோதின. இதில் கனகராயன்குளம் மகாவித்தியாலய அணி 19-25, 18-25 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோல்வியைத் தழுவியது.

ஆண்களுக்கான காலிறுதிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, சேலன் மத்திய கல்லூரி அணிகள் மோதின. இதில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி 18-25, 16-25 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோல்வியைத் தழுவியது.

மற்றுமொரு காலிறுதிப் போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் கலுவா மகாவித்தியாலய அணியும் மோதின. இதில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி 11-25, 16-25 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோல்வியைத் தழுவியது. (12)



தங்கம் வென்ற எம்.நிருஷாந்

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடாத்திய பளு தூக்கல் போட்டியில் கந்தரோடை பகுதி இளைஞன் தங்கப்பதக்கம் வென்றார். செ்ன. ஜோண்ஸ் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியில் எம்.நிருஷாந் 185 கிலோ எடையைத் தூக்கி தங்கம் வென்றார். இவர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. (48)

# கிண்ணம் வென்றது மயிலங்காடு ஞானமுருகன்



(உரும்பிராய்)

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை மயிலங்காடு ஞானமுருகன் அணி கைப்பற்றிக்கொண்டது.

பின்தங்கிய பாடசாலை மாணவர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதற்காக நிதி திரட்டும் நோக்கில் வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. அணிக்கு ஏழு பேர் கொண்ட இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியும் மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதின.

முதற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதிக் கொண்டன. இதில் ஞானமுருகன் அணி வீரர் லஸ்ரின் முதல் கோலைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். இதற்குப் பதிலடி கொடுக்கும் நோக்கில் றோயல் அணி செயற்பட்டபோதிலும் முற்பாதி ஆட்டத்தில் அது கைகூடவில்லை. இந்நிலையில் முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை ஞானமுருகன் அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது.

பிற்பாதி ஆட்டத்தில் எழுச்சியுற்ற மயிலங்காடு ஞானமுருகன் அணி அடுத்தடுத்து கோல் மழை பொழிந்து றோயல் அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தது. தவரூபன், தீபன், ஜெகன் ஆகியோர் கோல் மழை பொழிந்து ஞானமுருகன் அணியின் வெற்றியை உறுதி செய்தனர். நிறைவில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக லஸ்ரீன், தொடர் நாயகனாக கபில், சிறந்த கோல் காப்பாளராக சயந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் விருதுகளும் வழங்கப்பட்டனர்.

இதேவேளை, இந்நிகழ்வின் சிறப்பம்சமாக வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தால் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட 'வீரசூரி' விருது நான்கு பேருக்கு வழங்கப்பட்டது.

வடமாகாண பாடசாலைகளின் உடற்கல்வி ஆசிரியர்களாக கடமையாற்றும் இவர்கள், பாடசாலை மாணவர்களை சிறந்த முறையில் பயிற்றுவித்து தேசிய மட்ட போட்டிகளில் மாணவர்கள் பதக்கங்கள் பெறுவதற்கு காரணமாக இருந்தமைக்காக இந்த விருது வழங்கப்பட்டது.

இதில் உடுவில் மகளிர் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியரான ப.தர்மகுமாரன், புதுக்குடியிருப்பு இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆசிரியர் க.சசிக்குமார், கிளிநொச்சி பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ். ஜெயகரன், வவுனியா சுந்தரபுரம் மகா வித்தியாலய ஆசிரியர் இ.டபிள்யூ. ஜெயநேசன் ஆகியோரே 'வீரசூரி' விருதைப் பெற்றுக்கொண்டனர். (93)

## விளையாட்டு செய்திகள்

## மத்தியூஸ் மகிழ்ச்சி

இலங்கை தலைமைப் பயிற்றுவிப் பாளராக அத்தப்பத்து நியமிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. அவர் ஒவ்வொரு வீரரையும் புரிந்துகொண்டு செயற்படக் கூடியவர். அவரின் நியமனம் எனக்கு மாத்திரமன்றி அனைத்து வீரர்களுக்கும் மகிழ்ச்சியான விடயமே. அவரது பயிற்சியில் நாங்கள் கடந்த மூன்று தொடர்களில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுள்ளோம் என இலங்கை அணிக் கப்டன் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.



# மாவை சேனாதிராசாவின் இராஜதந்திரம் தான் என்னே!

**அ**ண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழுவில் இந்தியா சென்று வந்த பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற, தமது கட்சியின் முன்னைநாள் தலைவரும், புலிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டவருமான அ.அமிர்தலிங்கத்தின் நினைவு தினக் கூட்டத்தில் பேசினார்.

(அரசாங்கம் புலிகளை அழிக்கும் வரை தமது தலைவரின் ஆத்ம சாந்திக்காக ஒரு மௌனப் பிரார்த்தனை கூட செய்வதற்கு பயந்து இருந்தவர்கள் தான் இந்த வாய்ச் சவடால் வீரர்கள்) அந்தக் கூட்டத் தில் வழமைபோல சில பொன்னான கருத்துகளை நமது "தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு" மாவையார் அவிழ்த்து விட்டிருக்கிறார்.

அதாவது, இனிமேல் தாம் இராஜதந்திர ரீதியாக நடக்க வேண்டிய சூழல் உருவாகி உள்ளதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அப்பாடா! இப்பவாவது இதுவரை காலமும் தாம் இராஜதந்திர ரீதியாக நடக்கவில்லை என்று ஒப்புக் கொண்டாரே! அது போதும் இப்போதைக்கு.

அதேநேரத்தில் இன்னொரு மயிர்க்கூச்செறியும் திகில் கதையையும் அவர் அவிழ்த்து விட்டிருக்கிறார். அதாவது, புதுதில்லியில் தாம் இந்திய அரசாங்கத்துடன் என்ன பேசினோம் என்பதை தாமும் வெளியிட மாட்டோம், இந்தியாவும் வெளியிட மாட்டாது எனச் சொல்லியுள்ளார்!

அவரது இந்தக் "கதை"யைக் கேட்டதும் ஆளாள் தலையைப் பிய்க்கத் தொடங்கிவிட்டார்கள். "சில வேளைகளில் இந்தியா படை கொண்டு வந்து இலங்கையைத் தமிழருக்குப் பிரித்துக் கொடுக்க ஏதாவது திகதி அறிவித்திருக்குமோ?" என்று கூடப் பலர் அங்கலாய்க்கத் தொடங்கிவிட்டனர். மாவையின் அறிவிப்பால் உலக ரீதியாக பங்குச் சந்தை நிலவரங்கள் கூட மாற ஆரம்பித்துவிட்டன என ஒரு தமிழீழத் தாயக ஆய்வாளர் வேறு மார் தட்டுகிறார்.

சரி, அது ஒருபுறம் இருக்கட்டும். மாவை சொன்ன இனிமேல் மேற்கொள்ள இருக்கும் இராஜதந்திர அணுகுமுறைக்கும், அவர் சொன்ன சஸ்பென்ஸ் கதைக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதோ என்று தயவுசெய்து ஒருக்கால் சிந்தித்துப் பாருங்கோ. அவர் சொன்ன இராஜதந்திரத்தை நினைக்க "எங்கப்பன் குதிருக்கை இல்லை" என்ற கதை ஞாபகம் வரவில்லையா?

**- வானவில் இதழ் 44**

# வாசிப்பின் ஆறு பலன்கள்

**1.** வாசிப்பு மொழி வளத்தை அதிகரிப்பதால் சரளமாக பேசுவதற்கு உதவும். என்னுடைய வகுப்பில் பல மாணவர்கள் தமிழில் கூட நினைத்ததை சொல்ல முடியாது திணறுவதை பார்க்கிறேன். ஆனால் வாசிப்பு பழக்கம் உள்ள மாணவர்கள் சரளமாக தன்னம்பிக்கையாக பேசுகிறார்கள்.

**2.** மொழியின் இயக்கம் ஒரு தர்க்கத்தை சார்ந்து இருக்கிறது. நன்றாக வாசிக்கிறவர்கள் எந்த துறை பற்றியும் புத்திசாலித்தனமாக எதையாவது பேசுவார்கள். இது வாசிப்பு தரும் தர்க்க அறிவினால் வருவது.

**3.** உரைநடை வாசிப்பை நான் ஒரு உரையாடலாக பார்க்கிறேன். உதாரணமாக நல்ல கட்டுரைகளை அதிலுள்ள கருத்துக்களுடன் மனதளவில் வாதிட்டபடியே தான் படிக்க முடியும். இது வாதத் திறனையும் அதிகப்படுத்தும். இன்னொரு பக்கம் மூளையை சுறுசுறுப்பாக வைத்திருக்கும்.

**4.** புனைவு வாசிப்பு நம் உணர்ச்சிகளை கட்டமைக்கிறது. அரசியல் பிரக்ஞை தரலாம். அற உணர்ச்சியை தூண்டலாம். மனதை பண்படுத்தலாம். வேறுவிதமாகவும் தூண்டலாம். உதாரணமாய் ஒருநாள் யூமா வாசுகியின் கவிதைத் தொகுப்பு "அமுத பருவம் வலம்புரியாகி அணைந்ததொரு சங்கு" படித்து விட்டு வண்டி ஓட்டும் போது சாலையில் எந்த அழகான பெண்ணை பார்த்தாலும் அவ்வரிகள் என் கட்டுப்பாட்டையும் மீறி மனதில் மேலெழுந்து வந்தன. முராகாமியின் ர்நயச வாந றுமைெ ளுமைெ படித்து விட்டு ஏதாவது குடிக்க வேண்டும் என எண்ணம் தீவிரமாகியது. வாசிப்பு ஏதோ ஒரு ரசாயனத்தை நம் மனதில் கலந்து விடுகிறது.

**5.** வாசிப்பை உயர்ந்த மனங்களுடனான உரையாடலாக பார்க்கிறேன். நாம் நடைமுறையில் பல அற்பத்தனங்கள் மத்தியில் வாழ்கிறோம். அப்போது வாசிப்பு நம்மை சில அடிகள் மேலே தூக்கி விடுகிறது.

**6.** போன வருடம் ஆறு மாதங்களாய் புரியாத ஒரு மன அழுத்தத்தில் இருந்தேன். அப்போது எரிக் புரோமின் Fear of Freedom படித்த போது சட்டென என் பிரச்சினையின் காரணம் புரிந்து சரியாகி விட்டது. வாசிப்பு ஒரு மருந்தாகவும் இருக்கலாம்.



**- ஆர்.அபிலாஷ் -**

# இவற்றில் ஆண்களின் பங்கு என்ன?

**- இந்துவில் விலாசினி கட்டுரையிலிருந்து.**

**கு**ழந்தை நட்சத்திரமாக தேசிய விருது பெற்ற ஸ்வேதா பாசுவின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்து இன்று ஏதேதோ தீர்ப்புகள் எழுதிக் கொண்டிருக்கிறோம்.

ஸ்வேதா பாசு ஒரு நட்சத்திர



விடுதியில் ஒரு ஆணுடன் "சமரசமான" நிலையில் இருந்ததற்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அப்படி அவர் யாருடன் இருந்தார் என்பதையும் அவர்கள் தைரியமாக ஏன் வெளியிடவில்லை?

காவலர்கள் இந்தச் செயலில் ஈடுபட்ட ஆணையும், அந்த நட்சத்திர விடுதி உரிமையாளரையும் கைது செய்யாதது நிச்சயம் ஒரு மோசமான முன்னுதாரணம்.

பாலியல் வழக்குகளில் பாதிப்படைவது எல்லாம் சம்பந்தப்பட்ட பெண்கள் மட்டும்தான். மற்ற குற்றங்களில் கைது செய்யப் படுபவர்களுக்குக்கூட அந்தரங்கம் பேணப்படுகிறது. ஆனால் பாலியல் வழக்குகளில், அது ஒரு பெண் விரும்பி மேற்கொள்ளும் தொழிலாக இல்லாமல், அவள் மீதான வன்முறையாக இருந்தாலும் காவல்துறை, மீடியாவின் அணுகுமுறை மிக மோசமானது.

சமீபத்தில், பாலியல் வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்ட ஒரு மாணவியின் அடையாளம் மீடியாக்களால் வெளியிடப்பட்டு அவளின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டு என்றென்றும் மீள முடியாத மன உளைச்சலை அவளுக்கு அளித்திருக்கிறது. ஆனால் அவளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியவர் யார் என்று நம் ஒருவருக்கும் தெரியாது.

பாலியல் தொழில் செய்தாலும் ஒரு பெண்தான் குற்றவாளி, பாலியல் வல்லுறவுக்கு ஆளானாலும் அவள்தான் குற்றவாளி. இப்படி ஒழுக்கமாக இல்லை, அப்படி உடை அணியவில்லை, இரவுகளில் ஆணுக்கு இணையாக வீட்டுக்கு வெளியில் வேலை பார்க்கிறாள் என்று அவளை நோக்கி ஏராளமான குற்றச்சாட்டுகள்.

ஒரு பெண் பாலியல் தொழிலைத் தனியாகச் செய்ய முடியுமா? அவளுடன் உறவு வைத்துக்கொள்பவர்களையும் தாண்டி இன்னும் பல ஆண்கள் இதில் சம்பந்தப்பட்டிருப்பார்கள். ஆனால் அந்த ஆண்கள் யார்? என்ன செய்கிறார்கள்? அனைத்தும் ரகசியம்.

தன்னுடைய உடலை அடகு வைத்துப் பொருளீட்டுவது தவறென்றால், அப்படிச் சம்பாதிப்பதையும் பெண்களிடமிருந்து பங்கு போட்டுக் கொள்ளும் ஆண்களுக்கு என்ன தண்டனை?

அவளிடமிருந்து அத்தகைய சேவையைப் பெறுவதற்கும், அவளை அப்படிச் செய்ய உளவியல் ரீதியாகத் தூண்டும் ஆண்களுக்கும் என்ன தண்டனை?

காவல்துறையினர் ஸ்வேதா பாசுவின் புகைப்படங்களை வெளியிடவில்லை; பெயர் அறிந்தவுடன் மீடியாக்களால் பப்பட்டது இது என்கிறார்கள்.

அவர் நடிப ., என்பதாலேயே அவரது புகைப்படங்களைக் கண்டபடி வெளியிட்டபடி இருக்கும் ஊடகங்கள் தங்கள் ஊடகத்துறை பற்றிய அறச்சிந்தனையை வளர்த்துக் கொள்வது அவசியம். காண்பதும், கேட்பதுமெல்லாம் செய்தியாகாது.

மீடியா இதே போன்றதொரு வழக்கில் கைதான மற்றொரு ஆந்திர நடிகை திவ்யா ஸ்ரீ என்பவர்க்கு பதிலாகத் தமிழ் நடிகை ஸ்ரீவித்யா என்பவரின் புகைப்படத்தை மாறி வெளியிட்டிருக்கின்றன. தகவல் தொழில்நுட்பத்தின் உச்சபட்ச வளர்ச்சியால் ஒரு சிறு தவறான செய்தியும் ஒரே சமயத்தில் கோடிக்கணக்கானவர்களைச் சென்றடையமுடியும். துரதிர்ஷ்டவசமாக உண்மைச் செய்தி வெளிவருவதற்குள் பொது மக்கள் அடுத்த, பரபரப்பான செய்திக்குச் சென்றுவிடுவார்கள். முந்தைய, தவறான செய்தி அப்படியே பதிந்துவிடும்.

பெயர் குழப்பத்தால் பாதிக்கப்பட்ட ஸ்ரீவித்யா ஒவ்வொரு பத்திரிகையாக "அது நானல்ல" என்று அறிக்கைவிடும் நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார். இதற்கு ஊடகங்கள் எப்படிப் பொறுப்பேற்கப் போகின்றன? அவர்கள் ஸ்ரீவித்யாவிற்கு தரும் பதிலென்ன?

தன் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண் தேவையான பொழுதுகூட காவல் நிலையம் செல்வதை விரும்பாத சமூகம்தான் எங்கோ, யாரோ ஒரு பெண் என்றால் எந்த ரத்த பந்தமும் இல்லாமலேயே அவள் மீது உரிமையெடுத்து, ஒழுக்க போதனைகள் வழங்கி, அவளைப் பற்றிய தங்கள் அனுமானங்களைப் பொது இடத்தில் இலவசமாகப் பகிர்ந்துகொள்கிறது. பல சமயம் அது அவளின் படுக்கையறையை எட்டிப்பார்க்கவே விரும்புகிறது.

கலாசாரம், ஒழுக்கம், பண்பாடு என்பதையெல்லாம் இன்னமும் பெண் உடலோடு மட்டுமே தொடர்புபடுத்திப் பார்க்கும் வழக்கத்தை ஆண்கள் இனியேனும் பரிசீலிப்பது நல்லது. எங்கோ இருக்கும், செய்திகளில் இவ்வாறு அடிபடும் பெண்களால் சமூக ஒழுக்கம் கெடும் என்றெல்லாம் எந்தவொரு ஆணும் கவலைப்பட வேண்டியதில்லை.

பாலியல் தொழில் செய்பவரைக் கண்டால் பிடிக்காது என்றால், தாங்கள் அவர்களிடம் செல்லாமல் இருப்பதுதான் உச்சபட்ச ஒழுக்கமாக இருக்க முடியும். வேண்டுமானால் அத்தனை ஆண்களும் ஒன்றிணைந்து "இனி பாலியல் தொழில் செய்பவர்களிடம் நாங்கள் செல்ல மாட்டோம்" என்று சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளலாம். யார் தடுக்க முடியும்?

ஸ்வேதா பாசுவின் கைது உணர்த்தும் மற்றொரு கசப்பான உண்மை பொது மனங்களில் படிந்திருக்கும் வக்கிரம் பற்றியது. ஸ்வேதா பாசுவிற்கு ஆதரவாகக் குரல் கொடுப்பவர்களையும் தாக்க ஆரம்பித்துள்ளனர், "இனம் இனத்தோடுதான் சேரும்" என்று.

அதாவது பாலியல் தொழில் செய்பவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும், அதை எதிர்த்து அவர்களுக்கு ஆதரவாகப் பேசுபவர்களும் அத்தொழிலைச் செய்பவர்கள்தாம் என்பது சில ஒழுக்கவியலாளர்களின் கருத்து.


ஆம், பெரும்பான்மை ஆண்கள் இதுபோன்ற விஷயங்களில் பெண்ணுக்கு எதிரான நிலைபாட்டைக் கொண்டிருந்தால் பெண் இனம் இனத்தோடு சேர்ந்துதான் போராட வேண்டியிருக்கும்.

அப்படி ஒருநாள் ஒட்டுமொத்த பெண் சக்தியும் ஒன்று திரண்டால் சமூகத்தின் மொத்தக் கயமையும் பொசுங்கக்கூடும்.

# உணவு வகைகளை சரியான முறையில் நாம் தெரிவு செய்வது எவ்வாறு?

தாரணி முரளிஹரன்,
(Mphil – Reading (Food & Nutrition))
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ் போதனா வைத்தியசாலை.

2




ஆரோக்கியமான உணவுப்பழக்க வழக்கங்களாவன.

**1. வெவ்வேறு வகையான உணவு களைத் தினமும் உணவுக்கு எடுத்துக்கொள்ளுங்கள்.**

நாம் உண்ணும் உணவானது ஆரோக்கியத்துடன் தொடர்புபட்டுள்ளதுடன், அது உடல் தொழிற்பாடு உட[illegible] உள வளர்ச்சிக்கு உதவுகின்றது. மேலும் சகல உணவு வகைகளும் சிற்சில போசணைப் பொருள்கைளைக் கொண்டிருப்பினும் ஓர் உணவானது சகல போசணை பொருள்களையும் கொண்டிருப்பதில்லை. எனவே தினமும் பல்வகையான உணவுகளை உண்பதன் மூலம் அவசியமான சகல போசணைக் கூறுகளையும் பெற முடியும்.

**2. இயலுமான அளவுக்கு குறைவாக சோறு, தானியம் மற்றும் மா சேர்ந்த உணவுகளைத் தினமும் மூன்று முறை எடுத்துக் கொள்ளுங்கள்.**

எமது பிரதான உணவு சோறு ஆகும். இதைத் தவிர தானிய வகைகள் கிழங்கு வகைகளை நாம் உண்பதுடன் இவை சக்தி வழங்கும் பிரதான மூலங்களாகும்.

**3. மரக்கறி மற்றும் பழங்களை ஒவ்வொரு நாளும் எடுத்துக்கொள்ளுங்கள்.**

இலங்கை வாசிகளான எமக்கு கிடைத்த மகத்தான வரப்பிரசாதங்களில் ஒன்று வருடம் முழுவதும் பலவகையான பல சுவையான பழங்கள் மற்றும் மரக்கறிகள் கிடைத்தல் ஆகும்.

**4. மீன், முட்டை, கருவாடு, இறைச்சி, பருப்பு வகைகள் போன்றவற்றில் ஒன்றையோ அல்லது சிலவற்றையோ தினமும் உட்கொள்ளுங்கள்.**

மீன், முட்டை, இறைச்சி, பருப்பு வகைகள் போன்றவற்றையும், கடலை, கௌபி, பயறு போன்ற விதை வகைகளையும், போஞ்சி, பயற்றங்காய், சிறகவரை, சோயா போன்ற அவரை வகைகள் புரதம் அதிகமுள்ள உணவுகளாம். இவை உடல் வளர்ச்சி, புதிய கல உருவாக்கம், இழையங்களின் தேய்வுற்ற பகுதியைப் புதுப்பித்தல், உடலின் தொழிற்பாடுகளைச் செயற்படுத்தல் நோயிலிருந்து பாதுகாத்தல், நோய் எதிர்ப்பு பதார்த்தங்களைச் செயற்படுத்தல் என்பவற்றுக்கு உதவும்.

**5. பால் அல்லது பால் உணவுகளை தினமும் உட்கொள்ளுங்கள்.**

பால் மற்றும் யோகட், தயிர் வெண்ணெய் மோர் முதலிய பாலுற்பத்திப் பொருள்கள் என்பு, பல் வளர்ச்சிக்கு அவசியமான Ca, P I சத்துக்களை அதிகளவில் கொண்டிருப்பதுடன் அவை காபோவைதரேற்று, புரதம், விற்றமின்களை அதிகளவில் கொண்டுள்ளன. பாலாடையில் அதிகளவு விற்றமின் ஏ உள்ளது. எனவே தினமும் பால் மற்றும் பாலுற்பத்திப் பொருள்களை உள்ளெடுத்தல் முறையான உடற்பயிற்சி என்பன என்பு வளர்ச்சிக்கும் என்பு வலுப்பெறவும் உதவும்.

**6. உங்களுடைய உணவுக்காக நடுநிலை அளவான கொழுப்பை உட்கொள்ளுங்கள்.**

எண்ணெய் மற்றும் கொழுப்பு உடலுக்கு அத்தியாவசியமான உணவுக் கூறுகளாக இருப்பதுடன் விற்றமின் ஏ, டி, கே, ஈ போன்ற கொழுப்பில் கரையும் விற்றமின்கள் அகத்துறிஞ்சவும் அவசியமாக உள்ளது. மேலும் கொழுப்பு உயர் சக்திப் பெறுமானம் உடையதாக இருப்பதுடன் உணவுக்கு ருசி, மணம் மற்றும் உணவு உண்பதற்கான நாட்டத்தையும் ஏற்படுத்துகின்றது. கொழுப்பின் மூலம் பெறப்படும் சக்தியில் ஆகக் கூடியளவு 30 வீதம் மட்டுமே இருக்க முடியும்.

**7. சீனி இனிப்பு வகைகள், உப்பு மற்றும் உப்புச் சேர்ந்த உணவுகள் பாவிப்பதைக் குறையுங்கள்.**

நாம் இனிப்புச்சுவைக்கு அதிக விருப்புடையவர்களாக இருப்பதுடன் அடிக்கடி தேநீர், கோப்பி, முதலிய பானங்களும் பருகுகின்றோம். செயற்கையான குடிபானங்கள் (சோடா) அல்லது சீனி சேர்த்து தாயரிக்கப்பட்ட போத்தலில் அடைக்கப்பட்ட பழச்சாறுகள், ஐஸ்கிறீம், கேக், பிஸ்கட், சொக்லேட், கற்கண்டு போன்றவை அதிக அளவில் சீனியைக் கொண்டுள்ளன எனினும் அதிக சீனி சேர்த்த உணவுகளை அடிக்கடி உள்ளெடுத்தல் நல்லதல்ல. நாம் உணவுகளை சுவையாக்க உப்புச் சேர்ப்பதுடன் உப்பிலிருந்து சோடியம் என்ற கனியுப்பு கிடைக்கின்றது. உணவுகளில் உடலுக்குத் தேவையான அளவு சோடியம் அடங்கியுள்ளதால் செயற்கையான உப்புப் பாவனை அவசியமற்றது. ஆனாலும் தினமும் ஒரு தேக்கரண்டி (5 கிராம்) அளவு உப்பை உணவுடன் சேர்க்க முடியும்.

**8. சுத்தமான நீரைக் கூடுதலாக பருகுங்கள்.**

எங்களின் உடலில் 2/3 பங்குக்கும் விட அதிகமான அளவில் இருப்பது நீர் ஆகும். மேலும் நீர், உடலினுள் நடைபெறும் வெவ்வேறு பரிமாற்றச் செயற்பாடுகளுக்கு அத்தியாவசியமான ஊடகமும் ஆகும். எனவே கொதித்தாறிய வடிகட்டிய நீர் அல்லது மழை நீரை நாளொன்றுக்கு 1.5 லீற்றர் தொடக்கம் 2 லீற்றர் வரை பருகுதல் அவசியமாகும். உடலின் நிறைக்கு ஏற்ப பருக வேண்டிய நீரின் அளவும் வேறு படும்.

**9. சுத்தமானதும் பாதுகாப்பானதுமான உணவுகளை உட்கொள்ளுங்கள்.**

நாம் மிகவும் வேலைப்பளுவுடனான இயந்திர வாழ்க்கையை வாழுகின்றமையால், எமது சம்பிரதாயமான தனித்துவமான உணவுப்பழக்கத்திலிருந்து விலகி உணவு விடுதிகளில் சமைக்கப்பட்ட உணவுகள், உடனடி உணவுவகைகள் அல்லது முன்னரே தயாரிக்கப்பட்டு விற்கப்படும் உணவுகளைப் பயன்படுத்தப் படிப்படியாக பழக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றோம். இந்த வகையான உணவுகளின் பழுதடையக் கூடிய தன்மை வீடுகளில் தயாரிக்கப்படும் உணவுகளை விட மிக அதிகமாகும்.

**10. உடற்பயிற்சி மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கை மூலம் விரும்பத்தக்க ஆரோக்கியமான உடல்நலத்தைப் பேணிக் கொள்ளுங்கள்.**

தனிநபர் ஒருவராயின் வயது பிரிவுக்கு ஏற்றவாறு அவருடைய அல்லது அவளுடைய ஆரோக்கியத் தன்மையையும் போசணைத் தன்மையையும் தீர்மானம் செய்வதற்கு உடலில் நிறை மிகவும் முக்கிய காரணியாகும். உயரத்துக்கு ஏற்ற நிறையைப் பேண போசாக்குள்ள உணவுகளை அவசியமாக அளவில் உள்ளெடுத்தலும், தினமும் உடற்பயிற்சி செய்தலும் அவசியம் ஆகும். மேற் குறிப்பிட்ட ஒவ்வொரு அறிவுறுத்தல்களையும் பற்றி விரிவாக தொடர்ந்து ப்ார்க்கலாம்.

(தொடரும்)

# சினிமா சினிமா

◉ ரஜினியுடன் ஒரு படத்திலேனும் நடிக்க வேண்டும் என்ற த்ரிஷாவின் நீண்டகால கனவு நிறைவேறாமலேயே இருந்தது. அவருக்கு பின் வந்த நயன்தாரா, ஸ்ரேயா, அனுஷ்கா போன்ற நடிகைகள் பலரும், ரஜினியுடன் நடித்து விட்டனர். இந்நிலையில், தற்போது, லிங்கா படத்தில் ரஜினியுடன் நடிக்க த்ரிஷாவிற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. ஏற்கனவே, அப்படத்தில் நாயகியாக அனுஷ்கா மற்றும் சோனாக்ஷி சின்ஹா ஆகியோர் நடிக்கும் நிலையில், த்ரிஷாவும் ஒரு குத்துப்பாட்டுக்கு ரஜினியுடன் நடனமாடுகிறார்.

◉ அனிருத், 3 படத்தில், "வை திஸ் கொலை வெறி..." என்ற ஒரே பாடல் மூலம், இந்தியா முழுக்க பேசப்பட்டவர், தொடர்ந்து, எதிர்நீச்சல் மற்றும் மான்கராத்தே என அடுத்தடுத்த ஹிட்களை கொடுத்தவர், இப்போது விஜய்யின், கத்தி படத்திற்கு இசையமைத்து, முன்னணி இசையமைப்பாளர் ஆகிவிட்டார். இந்நிலையில், நண்பேன்டா படத்திற்கு பின், மீண்டும் ஹன்சிகாவுடன் தான் ஜோடி சேரும் படத்திற்கு இசையமைக்க அனிருத்தை அணுகினார் உதயநிதி. ஆனால், எடுத்த எடுப்பிலேயே, "இரண்டு கோடி சம்பளம் வேண்டும்..." என்று கூறி, அவரை அதிர வைத்தாராம் அனிருத். பின்னர் ஒருவாறு சமரசம் பேசப்பட்டதையடுத்து, இப்போது ஒன்றரை கோடிக்கு ஓ.கே., சொல்லியிருக்கிறார்..


◉ கறுப்பு, வெள்ளை ஆகிய இரண்டு நிறங்களின் மீதும் ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராமுக்கு அப்படியொரு காதல். அன்றாடம் அணியும் ஆடைகளில் இருந்து பயணிக்கும் கார் வரை இந்த வண்ணங்கள் இருக்குமாறு பார்த்துக் கொள்கிறார். முழுவதுமாக ஒரு கறுப்பு வெள்ளைப்படம் எடுத்து விட வேண்டும் என்பதும் அவரது சினிமா ஆசைகளில் ஒன்று. அதனால்தான் "யாவரும் நலம்" படத்துக்காக அதிகபட்ச காட்சிகளை கறுப்பு வெள்ளையில் பதிவு செய்திருப்பார். "அனுமாஷ்ய விஷயங்களின் நிறம் கறுப்பு. தைரியத்தின் நிறம் வெள்ளை. இருட்டு என்றால் பயம் வந்து விடும். வெளிச்சம் வந்தால் பயம் போய் விடும். அதன் அடிப்படையில்தான் அந்த படத்தில் அப்படியொரு ஒளிப்பதிவு தேவைப்பட்டது" என அதற்கு விளக்கம் கொடுத்திருந்தார் பி.சி.ஸ்ரீராம்.

◉ தமிழ் சினிமாவின் முன்னணி நட்சத்திரங்கள் பலர் இணைந்து நடித்த "சுயம்வரம்" 24 மணி நேர படப்பிடிப்பில் எடுக்கப்பட்ட சாதனைப் படமாக உருவானது. தற்போது அந்த சாதனையை முறியடிக்கும் விதமாக உருவாகியுள்ள படம் "நடு இரவு." இப்படத்துக்காக 12 மணி நேர படப்பிடிப்பில் முழு படத்தையும் முடித்துள்ளது படக்குழு. ஓரே வீட்டுக்குள் நடக்கும் சம்பவங்களே, கதை களம் என்பதால், மாலை 6 மணிக்கு படப்பிடிப்பை தொடங்கி மறுநாள் காலை 6 மணிக்கு முடித்துள்ளனர்.

◉ சிம்புதேவன் இயக்கத்தில் விஜய் நடிக்கும் புதிய படத்துக்கு ஸ்ருதி ஹாசன் ஒப்பந்தம் செய்யப்பட்டார். ஒப்பந்தம் செய்யப்பட்டது குறித்து தனது இணையதள பக்கத்தில் மகிழ்ச்சியும் தெரிவித்து இருந்தார் ஸ்ருதி. ஆனால் ஹிந்தியில் ஜோன் ஆப்ரஹாம், அனில் கபூர் ஆகியோருடன் நடித்து வரும் இரண்டு படங்களும் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதால் விஜய் படத்திலிருந்து விலகி விட்டதாக இப்போது குறிப்பிட்டுள்ளார் ஸ்ருதி.

◉ ஒரே டிக்கெட்டில் இரண்டு சினிமாக்கள் என்ற புதிய முறையை அறிவித்து இருக்கிறார் லாரன்ஸ். அதாவது இடைவேளை வரை ஒரு படம், இடைவேளைக்குப் பின் மற்றொரு படம். இதற்காக அவரது ராகவேந்திரா புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் படங்கள் "கிழவன்" மற்றும் "கருப்பு துரை". "கிழவன்" படத்தின் நாயகி ஆண்ட்ரியா. "கருப்பு துரை" படத்துக்கு லட்சுமிராய்.

◉ ரஜினியின் நடிப்பில் கே.எஸ்.ரவிக்குமார் எழுதி இயக்கி வரும் படம் "லிங்கா" படத்தில் இடம் பெறும் சண்டைக் காட்சியை ஹொலிவுட் ஆக்ஷன் இயக்குநர் லீ வொயிட்டேகர் அமைக்கிறார். இவர் "விஸ்வரூபம்", "ஆரம்பம்" ஆகிய படங்களுக்கு சண்டைக் காட்சிகளை அமைத்தவர்.



◉ நீண்ட இடைவெளிக்குப் பின் இசையமைப்பாளர் மணிசர்மா "இஞ்சி முறப்பா" படத்தின் மூலம் தமிழுக்கு வருகிறார். திரைப்படக் கல்லூரி மாணவர் எஸ்.சகா இப்படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குநராக அறிமுகமாகிறார்.

◉ அக்ஷஷய்குமாருடன் நடித்த, எண்டர்டெய்ன்மென்ட் ஹிந்திப் படம் நல்ல வரவேற்பு பெற்றதை அடுத்து, ஹிந்தியில் முதல் வெற்றியை சந்தித்திருக்கிறார் தமன்னா.

◉ பார்த்திபனின், கதை திரைக்கதை வசனம் இயக்கம் படத்தில் நாயகியாக நடித்துள்ள அகிலா கிஷோர், கன்னடத்தில் இதுவரை நான்கு படங்களில் நடித்திருக்கிறார்.

# புதிர்ப்போட்டி இல. 08

**அனுப்பவேண்டிய முகவரி**
புதிர்ப்போட்டி இல: -------
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும் அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு பாடங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.

இல .8.1

## கதைகேளு கணக்குப் போடு



கவிதா, எழிலரசி, இனிதா மூவரும் சகோதரிகள். கோடை விடுமுறையில் இனிமையாகப் பொழுது போக்க கிராமத்திலிருந்த தாத்தா வீட்டிற்குச் சென்றனர். தாத்தாவின் வீட்டில் 6 அலுமாரிகளில் புத்தகங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. முதல் அலுமாரியில் 62 புத்தகங்களும், இரண்டாவதில் 33 மூன்றாவதில் 38, நான்காவதில் 36 ஐந்தாவதில் 32 ஆறாவதில் 30 புத்தகங்களும் இருந்தன.

புத்தகங்களைப் பார்த்த சகோதரிகள், தாத்தாவிடம் அனைத்துப் புத்தகங்களையும் தங்களிடம் பங்கிட்டுக் கொடுத்துவிடும்படி வேண்டினர். தாத்தாவும், சரி நீங்களே பிரித்து எடுத்துக் கொள்ளுங்கள் என்றார். மூன்றாம் சகோதரி ஒரு அலுமாரியிலிருந்த புத்தகங்களை எடுத்துக் கொண்டார். இரண்டாம் சகோதரி 2 அலுமாரிகளிலிருந்த புத்தகங்களை எடுத்தார். முதல் சகோதரி 3 அலுமாரிகளிலிருந்து புத்தகங்களை எடுத்தார். மூன்று பேரும் தமக்குக் கிடைத்த புத்தகங்களை எண்ணிப் பார்த்தார்கள். முதல் சகோதரியிடம் நிறையப் புத்தகங்கள் இருந்தன. இரண்டாம் சகோதரியிடம் இருந்த புத்தகங்கள் முதல் சகோதரியிடம் இருந்த புத்தகங்களில் பாதி அளவே ஆகும். மூன்றாம் சகோதரியிடம் இருந்த புத்தகங்கள் இரண்டாம் சகோதரியிடம் இருந்த புத்தகங்களின் எண்ணிக்கையில் பாதியாகும். யார் யார் எந்தெந்த அலமாரிகளிலிருந்து புத்தகங்களை எடுத்தனர்? சகோதரிகள் ஒவ்வொருவரிடமும் இருந்த புத்தகங்கள் எத்தனை?

## நகைச்சுவை புதிர்கள்

1) சிவப்பு மாளிகை இடப் பக்கத்திலும் நீல மாளிகை வலப் பக்கத்திலும் கறுப்பு மாளிகை முன் பக்கத்திலும் இருப்பின் வெள்ளை மாளிகை எங்கிருக்கும்?

2) கடுமையான மழை நேரத்தில் ஒருவர் குடையின்றி பாதையில் நடந்துச் சென்றார். ஆனால் அவரின் ஒரு தலை மயிர் கூட நனையவில்லை, இது எப்படி சாத்தியம்?

3) நீங்கள் ஒரு பஸ் வண்டியை ஓட்டிச் செல்கிறீர்கள். முதல் தரிப்பிடத்தில் மூவர் இறங்கினர், இரண்டாம் தரிப்பிடத்தில் ஐவர் இறங்கினர். கடைசித் தரிப்பிடத்தில் அனைவரும் இறங்கினர். இங்கு கேள்வி என்னவெனில் பஸ் நடத்துநரின் கண்கள் எந்த நிறமாக இருக்கும்?

4) ஒரு விமானம் இந்தியா பாகிஸ்தான் எல்லையில் விபத்துக்குள்ளானது. விபத்தில் தப்பியவர்களை எந்த நாட்டில் அடக்கம் செய்ய வேண்டும்?

5) ஒரு அப்பிள் மரக்கிளையில் 12 அப்பிள்கள் இருந்தன. அவ்வழியே 12 பேர் பயணித்தனர். அவர்களில் தலா ஒரு பழம் பறிக்க 11 அப்பிள்கள் மரத்தில் எஞ்சியிருந்தன. இது எப்படி?

இல .8.2



நாய் உடலில் காயம் ஏற்பட்டால் அதன் எச்சிலைக் கொண்டே சரி செய்து கொள்கிறதே, எப்படி?

## கணக்குப்புதிர்

01)

ஓர் நான்கு அடுக்கு மாடிவீட்டிற்கு ஒரு தேங்காய் வியாபாரி வந்தார்.

தன்னிடமுள்ள தேங்காயில் பாதியையும் அதனுடன் அரைத்தேங்காயையும் முதல் வீட்டிற்குக் கொடுக்கிறார்.

மீதி உள்ளதில் பாதி அதனுடன் அரைத்தேங்காயை இரண்டாம் வீட்டிற்குக் கொடுக்கிறார்.

மீதி உள்ளதில் பாதி அதனுடன் அரைத்தேங்காயை மூன்றாம் வீட்டிற்குக் கொடுக்கிறார்.

மீதி உள்ளதில் பாதி அதனுடன் அரைத்தேங்காயை நான்காம் வீட்டிற்குக் கொடுக்கிறார்.

தேங்காய் வியாபாரியின் கூடை காலியாகிவிட்டது!

அப்படியானால் வியாபாரி கொண்டு வந்த தேங்காய்கள் எத்தனை?

02)

ஓர் ஏரியில் நிறைய பூக்கள் பூத்திருந்தன! அந்த வழியாக பறவைகள் பறந்து வந்தன! நீண்ட தூரம் பறந்து வந்ததால் சற்று இளைப்பாறலாம் என்று எண்ணி ஒவ்வொரு பூவின் மீதும் ஒரு பறவை அமர்ந்தது! ஒரு பறவைக்கு மட்டும் இடமில்லை! அடடா ஒரு பறவைக்கு மட்டும் இடமில்லையே! சரி ஒரு பூவுக்கு இரண்டு பறவைகளாக அமர்ந்து கொள்வோம் என்று முடிவெடுத்து அப்படியே அமர்ந்து கொண்டன! அடடா என்ன ஆச்சரியம்!! இப்போது ஒரு பூ மீதமிருந்தது!!! அப்படியானால் எத்தனை் பூக்கள்? எத்தனை பறவைகள்

03)

நண்பர்களே உங்கள் நண்பரிடம் ஒரு புத்தகத்தை எடுத்துக்கொள்ள சொல்லி அதில் ஏதாவது ஒரு பககத்தை பார்க்க சொல்லுங்கள். அதில் முதல் 9 வரிகளுக்குள் ஒரு வரியை குறித்துக்கொள்ள செல்லுங்கள். அந்த வரியில் முதல் 9 வார்த்தைகளுக்குள் ஒரு வார்த்தையை எடுத்துக் கொள்ள சொல்லுங்கள். இப்பொழுது அவரிடம் இந்த கணக்கை போடச்சொல்லுங்கள்

அவர் பார்த்த பக்கத்தின் எண்ணை 10 ஆல் பெருக்க சொல்லுங்கள், அதனுடன் 25 ஐ கூட்டவும், அதோடு எத்தனையாவது வரியை எடுத்துக்கொண்டாரே அந்த எண்ணையும் சேர்த்து கூட்ட சொல்லவும். வந்த தொகையை 10 ஆல் மீண்டும் பெருக்கி எந்த வார்த்தையை எடுத்துக்கொண்டாரோ அந்த எண்ணையும் சேர்த்து கூட்ட சொல்லவும். வந்த விடையை நீங்கள் பெற்றுக்கொள்ளவும்... அதில் இருந்து 250 ஐ கழித்துக்கொள்ளுங்கள் வரும் விடையின் கடைசி எண் சொல்லின் எண், அதற்கு முன் எண் வரியின் எண், அதற்கும் முன் வரும் எண்கள் பக்கத்தின் எண்கள். ஆகவே நீங்கள் அவர் பார்த்த சொல்லை நீங்கள் சொல்லி விடலாம்.....எப்படி........

இல .8.3

## புலமை விளையாட்டு

புலமை விளையாட்டு என்பது செய்யுள் இயற்றுவோர் தம் சொல்லாண்மையைக் காட்டக் கையாளும் ஒரு வகை உத்தி. இதனைச் சொல்விளையாட்டு எனவும் வழங்குவர். சித்திரக்கவி போன்றனவும், யமகம், மாலை மாற்று போன்ற சொல்லணி வகைகளும் இதன்பால் அடங்கும். திருஞான சம்பந்தர், அருணகிரிநாதர் போன்றோர் சொல்லோடு விளையாடித் தம் புலமையை வெளிப்படுத்தினர். அருணகிரிநாதர் இயற்றிய அந்தாதி நூலிலுள்ள ஒரு பாடல்.

திதத்தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தததிதா
திதத்தத்தத் தித்த திதித்தித்த தேதுத்து தித்திதத்தா
திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாததத்து
திதத்தத்தத் தித்தித்தி தீதீ திதிதுதி தீதொத்ததே.

பாடல் எண் 54

இப்படி ஒரு பாடல், இப்படி ஒரு உரை, இப்படி ஒரு கருத்துரை, தமிழில் விளையாடிய காலம் 15 ஆம் நூற்றாண்டில் தோன்றி, மறைந்தது. தமிழ்மொழி வரலாற்றில் இதன் பொருளையேனும் உங்களால் கூறமுடியுமா? முயன்று பாருங்கள்

## சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- அ.மற்றில்டா
தரம் :- 6
பாடசாலை:- மானிப்பாய் மகளிர் கல்லூரி.

பெயர் :- சி.சுபர்ணா
தரம் :- 5
பாடசாலை:- யா/ வல்வை மகளிர் கல்லூரி.


பெயர் :- கே.நிலவன்
தரம் :- 7
பாடசாலை:- கிளி/ பூநகரி மகா வித்தியாலயம்.

**விண்ணப்பதாரரின் விபரம்**

முழுப்பெயர் :- ..............................
பாடசாலை :- ..............................
கல்வி கற்கும் தரம் :- ..............................
வீட்டு முகவரி :- ..............................
தொ.பேசி இலக்கம் :- ..............................

## சென்றவார புதிர்களுக்கான விடைகள்

இல 7.1




இல .7.2

பூக்கள் மூன்று, பறவைகள் நான்கு

இல .7.3

16 (முதல் நபர் 4, இரண்டாம் நபர் 3+1, மூன்றாம் நபர் 2+3, நான்காம் நபர் 4)

இல .7.4

கீழிருந்து தொடங்க வேண்டும். கடைசி வாயிலைக் கடந்து வரும்போது தமிழரசனிடம் ஒரே ஒரு நெல்லிக்கனி இருந்தது. அப்படியானால் அவரது ஒப்பந்தப்படி, கடைசியாக வெளியில் வரும்போது காவலிலிருந்த வீரனுக்கு ஒரு நெல்லிக்கனி தந்திருக்க வேண்டும்.

அப்படியானால் கடைசி வாயிலில் வரும்போது 2 நெல்லிக்கனிகள் அவரிடம் இருந்திருக்கும்.5 ஆவது வாயிலைக் கடக்கும்முன் (2+2) 4. 4 ஆவது வாயிலைக் கடக்கும்முன் (4+4) 8, 3 ஆவது வாயிலைக் கடக்கும்முன் (8+8) 16, 2 ஆவது வாயிலைக் கடக்கும்முன் (16+16) 32. முதல் வாயிலைக் கடக்கும்முன் (32+32) 64. தமிழரசன் பறித்த மொத்த நெல்லிக்கனி கள் 64.

இல .7.5

1.மவுனம் 2.புதிர் 3.தீ
4.நாளை 5.நிழல் 6.பலூன்
7.இரகசியம் 8."ந"என்ற ஆங்கில எழுத்து
9.வயது 10.ஒன்றுமில்லை

# சுகாதார திட்டங்களை செயற்படுத்த சாவகச்சேரி நகரசபையால் ஏற்பாடு

## சுகாதார குழுத்தலைவர் கிஷோர் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்கும் பொருட்டு 5 சுகாதார திட்டங்களை செயற்படுத்தவுள்ளதாக சாவகச்சேரி பிரதேச சுகாதார குழுத் தலைவர் ஞானப்பிரகாசம் கிஷோர நேற்று முன்தினம் வியாழக் கிழமை தெரிவித்தார்.

திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பில் சாவகச்சேரி நகர் சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற சுகாதார குழுக்கூட்டத்தில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள உணவகங்களுக்கு தரச்சான்றிதழ்கள் வழங்கும் நடவடிக்கையை மேற்கொள்ளல். உலக கைகழுவல் தினத்தை முன்னிட்டு அது தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடல் மற்றும் சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் பராமரிப்பின்றி இருக்கும் காணிகளை துப்புரவு செய்யவேண்டும் என்பது தொடர்பில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் ஊடாக காணி உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்தல்.

அதுமட்டுமன்றி குறிப்பிட்ட காலத்திற்குள் துப்புரவு செய்யாவிடின் அந்தக் காணிகளின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல். இதன மூலம் சாவகச்சேரி பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியதாக இருத்தல். சாவகச்சேரி பிரதேசத்திலுள்ள மக்களுக்கு அனர்த்தங்கள் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தல், மற்றும் அனர்த்தங்களின் போது எவ்வாறான செயற்பாடுகளை பின்பற்றுதல், பாதுகாப்படைதல் போன்றவை தொடர்பில் மக்களுக்கு அறிவுரைகள் வழங்கப்படவேண்டும்.

மேலும் சாவகச்சேரி பிரதேசத்தில் தற்போது பெருகியுள்ள இலையான்களை இல்லாது ஒழிப்பதற்கு மருந்து விசிறப்பட்டு, தொற்றுநோய்கள் ஏற்படாத சூழலை ஏற்படுத்தல். ஆகிய ஐந்து சுகாதார நடைமுறைகளை மேற்கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மரநடுகைக்கான மாதம் கார்த்திகை ஆண்டுதோறும் கடைப்பிடிக்க தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

கார்த்திகை மாதத்தைவடமாகாணத்துக்கான மர நடுகை மாதமாக ஆண்டு தோறும் கடைப்பிடிக்க தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.



வடமாகாண சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வின் போது விவசாய அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட இப்பிரேணையை முதலமைச்சர் வழி மொழிந்து வைத்தார்.

அத்துடன் பல்வேறு காரணங்களால் காடுகள் அழிக்கப்பட்டு தற்போது வெப்பம் அதிகரித்து மழை இல்லாதுள்ளது. மழையின் காலமான கார்த்திகை மாதமே மரநடுகைக்கான காலம். அது மட்டுமல்லாமல் தமிழர்கள் தீபமேற்றி வழிபடும் கார்த்திகை மாதம் புனிதமானது, எனவே. புனிதமான இம்மாதம் மரநடுகைக்கான புனித மாதமாக உள்ளது. எனவே நம்பர் 01ஆம் திகதியிலிருந்து நவம்பர் 30 ஆம் திகதிவரையான காலப்பகுதியை அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முதலமைச்சர் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (இ)

# பட்டிமன்றச் சமர் இன்று மத்திய கல்லூரியில்

அமரர் கணபதி இராசதுரை ஞாபகார்த்த மாகாண நிலை பட்டிமன்றச்சமர் 2014 என்னும் சுற்றுப்போட்டியை யாழ். மத்திய கல்லூரி தமிழ்ச்சங்கம் நிகழ்த்தவுள்ளது.

இன்று நடைபெறவுள்ள இந்தப்போட்டியில் மூன்று மாணவர்கள் 'பங்கேற்கமுடியுமெனவும்' ஏற்கனவே பதிவுகளை மேற்கொள்ளாத மாணவர்கள் நேரடியாக போட்டி மன்றத்துக்கு வந்து பதிவுகளை மேற்கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றவுள்ளவர்கள் 1995.06.30 இற்கு பின்னர் பிறந்திருத்தல் வேண்டும் எனவும் தமது பிறந்ததிகதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் எவற்றையேனும் சமர்ப்பித்தல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# முன்பள்ளி கட்டட திறப்பு விழாவும் விளையாட்டுப் போட்டிகளும்



வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி விநாயகர் முன்பள்ளி கட்டட திறப்பு விழாவும் விளையாட்டு நிகழ்வும் கடந்த 19ஆம் திகதி பிற்பகல் 1.40 மணியளவில் முன்பள்ளி வளாகத்தில் இடம்பெற்றது. முன்பதாக பள்ளி சிறார்களால் விருந்தினர்கள் மாலையிட்டு அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து மங்கள விளக்கேற்றப்பட்டு தேசியக் கொடி வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக தலைமை நிர்வாக கிராம அலுவலர் ரவிக்குமாரால் ஏற்றப்பட்டது. அதனைத தொடர்ந்து முன்பள்ளி பெயர்ப் பலகை TDH நிறுவன திட்ட முகாமையாளர் சுந்துரு மற்றும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி வடமராட்சி அமைப்பாளர் ரங்கன் ஆகியோரால் திரைநீக்கம் செய்யப்பட்டு, மண்டபம் SDC நிறுவன உட்கட்டுமான பொறுப்பாளர் லேயாவால் நாடா வெட்டி திறக்கப்பட்டு மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது. வெற்றிலைகேணி செல்வ விநாயகர் ஆலய குரு சம்மந்த குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து விளையாட்டுப்போட்டியை முன்பள்ளி இணைப்பாளர் திருமதி ஜே.ஞானம ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் மருதங்கேணி தலைமை கிராம அலுவலர் ரவிககுமார், வெற்றிலைக் கேணி கிராம அலுவலர் டிலக் சிகா வெற்றிலைக்கேணி சமுர்த்தி அலுவலர் ரஞ்சித், பரமேஸ்வரா வித்தியாலய முதல்வர் செல்வக்குமார், செல்வ விநாயகர் குரு சம்மந்த குருக்கள், வெற்றிலைக கேணி கிராம முன்னேற்ற சங்கத்தலைவர் லிங்கேஸ்வரன், ஈழமக்கள் ஜனநாயக கட்சி வடமராட்சி அமைப்பாளர் ரங்கன் கரையோர இணைப்பாளர் குமார் மற்றும் TDH,SDC நிறுவன உத்தியோகத்தர்கள் கிராம மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்




**இன்னும் 95 நாட்களில் தமிழர் தாயகமெங்கும் அகிம்சை வழிப் போர் வெடிக்கும்**

தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அகிம்சை வழிப்போரிற்கான அனைத்து ஆயத்தங்களையும் முன்னெடுத்து வருகின்றார. **'மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் மூன்று மாதங்களுக்குள் பேச்சுக்கு அரசு வர வேண்டும். அதன் மூலம் வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சியைத் தமிழர்க்கு வழங்க வேண்டும். இல்லையேல் தமிழர் தாயகமெங்கும் அகிம்சை வழிப் போர் வெடிக்கும் இதை யாரும் தடுக்க முடியாது. இதில் எந்த மாற்றமும் இல்லை'** என பலமான அறை கூவலை தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வெளியிட்டுள்ளது.

மிக ஆணித்தரமாகவும் ஆவேசமாகவும் இந்தத் தடவை அரசுக்குக் கால அவகாசம் கொடுத்துள்ளனர். இதில் இரண்டு விடயங்களைத் தெளிவாக ஒவ்வொரு தமிழ் மக்களும் அவதானிக்கவேண்டும்.

01) அரசு தமிழ்க்கூட்டமைப்பின் இந்த அறைகூவலிற்கு செவிசாய்க்கின்றதா?.... தீர்வினை வழங்குகின்றதா?... என்பதையும், மற்றையது -

02) தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தில் எந்தளவு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. குறித்த தீர்வுக் கோரிக்கை கிடைக்கும் வரை கூட்டமைப்பு உள்ளிட்ட போலித் தமிழ்த்தேசியவாதிகள் அனைவரும் சுயலாபத்திற்கப்பால் எவ்வாறு தொழிற்படுகின்றனர்.என்பது தொடர்பாகவெல்லாம் மிக ஆழமாக அவதானிக்கவேண்டிய காலம் நெருங்கி வருகின்றது.

**'இமையின் குற்றம் கண்ணுக்குத் தெரியாது என்பார்கள்'** இமை திறந்து வழி விடும் போது தான் இருள் கலைத்த விழிகள் உலகத்தைப் பார்க்கின்றன. அங்குள்ள உண்மை நிலையை அறிகின்றன. அதே வேளை இருள் கலைந்த அந்த விழிகளால் இமைகளின் குற்றத்தை என்றுமே அறிய முடிவதில்லை. இதுவே இன்றைய நிலை. இதை ஒவ்வொருவரும் ஆழமாக சிந்திக்கவேண்டும்.

அரசு சர்வதேச வலைப்பின்னலில் மிகப்பெரிய விருட்சத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. இது இலங்கையின் 'எதிர்கால எதிர்வு கூறல்கள்' என்பதற்கப்பால் நிகழ்கால வெற்றிகளை அரசுக்குத் தேடித்தரும் என்பதில் மாற்றமில்லை.

சீனா, யப்பான், தென்னாபிரிக்கா உள்ளிட்ட முக்கிய பல தலைவர்கள் இங்கு திடீர் விஜயம் மேற்கொண்டுள்ளனர். 34 வருடங்களிற்குப் பின்னர் சீன நாட்டு ஜனாதிபதி இங்கு வந்து 27 உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளார்.

இதற்குள் சர்வதேச அழுத்தங்கள் பிராந்திய அச்சுறுத்தல்கள் உள்ளிட்ட பல விடயங்கள் உள்ளன. எமது உள்ளூர் பத்திரிகைகள் கூறிவருவது போல இலங்கையரசு சர்வதேச பலமிழந்து இருக்கவில்லை. அமெரிக்காவின் எதிர்ப்பைக் காரணம் காட்டி பலமான வேலிகள் பலவற்றைப் பக்குவமாயப் போடுகின்றது.

இதன் மத்தியில் இந்தக் கூட்டமைப்பின் அகிம்சைப்போரிற்கான அவகாசத்தை சிந்திக்கக்கூட இலங்கையரசுக்கு நேரமிருக்குமா?....என்பது ஒரு துருவ வாதமாக இருக்க,

மறுதுருவத்தில் கூட்டமைப்பும் அரசின் செயற்பாட்டால் பல இடங்களில் மொக்கையீனப்பட்டுள்ளது. அந்தவகையில் இவ்வாறான ஓர் பிரமாண்டமான காலக்கெடுவினைக் கொடுத்து அகிம்சை வழிப்போருக்கு அறைகூவும் கூட்டமைப்பு இதனை மிகத்துணிச்சலோடு முன்னெடுக்க வேண்டிய கட்டத்தில் உள்ளது.

வெறும் பேச்சுத் தமிழ்த் தேசியர்கள் அனைவரும் களத்தில் இறங்கவேண்டும். அரச அதிகாரிகள் சுயதொழிலிற்கு பங்கம் வரும் போதும் சளைக்கக் கூடாது. அதேவேளை கூட்டமைப்புத் தலைமைகள் சாக்குப்போக்குச் சொல்லி மக்களை மாயவலைக்குள் இழுத்து பல்வேறு காரணம் காட்டி இடையில் போரை நிறுத்தினால் அதனையும் மக்கள் இனம் காண வேண்டும்.

தெளிவாகவும் ஆவேசமாகவும் மா.வை அண்ணன் மேடைகளில் கூறிவருகின்றார. **'வடக்குக் கிழக்கு இணைந்த சுயாட்சி தமிழர்க்குக் கிடைக்கும் வரை போர் ஓயாது'** என. இதில் எந்த மாற்றத்தையும் கூட்டமைப்பு இனிவரும் காலங்களில் கொண்டுவர முடியாது. அவ்வாறு ஏதாவது மாற்றம் கொண்டு வந்தால் சுயலாபத்தை விரும்பிய ஓர் இனத்துரோகமாகவே அதைக் கருத முடியும்.

எங்கள் சுரேஸ் அண்ணையும் துடிப்போடுதான் உள்ளார். 'தோற்றுப்போன சமூகமல்ல எமது தமிழினம். மறுஜென்மம் எடுத்து வருமாம் மாற்றுவழிதேடி'. **மீண்டும் களம் குதிக்க இவ்வாறு மறுஜென்மம் எடுத்து வந்த போராட்டம்தான் இதுவாக இருக்குமோ?...... தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம் போர் முரசடித்து சேதிகூறி.**

# புகைப்பிடித்த மாணவர்கள் எச்சரிக்கப்பட்டு விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ். துன்னாலை தெற்குப் பகுதியில் பாடசாலை சீருடையுடன் புகைப்பிடித்த மூன்று பாடசாலை மாணவர்கள் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டு பெற்றோர்கள் முன்னிலையில் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

துன்னாலை பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்கும் இந்த மூன்று மாணவர்களும் பாடசாலை நேரத்தில் சீருடையுடன் மதில் ஒன்றில் ஏறியிருந்து புகைப்பிடித்துக் கொண்டிருந்துள்ளனர்.

இதனை அவதானித்த பொது மக்கள், நெல்லியடி பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து, அவ்விடத்துக்குச் சென்ற பொலிஸார் மூவரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

தொடர்ந்து, மாணவர்கள் அவர்களது பெற்றோர் முன்னிலையில் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# இரணைமடு குளத்தில் மீன்பிடிக்க அனுமதி இல்லையென குற்றச்சாட்டு



(கிளிநொச்சி)

இரணைமடு குளத்தில் முழுமையாக மீன்பிடியில் ஈடுபடுவதற்கான அனுமதி தமக்கு மறுக்கப்பட்டுள்ளதாக பிரதேச மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மீன்பிடியை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள சுமார் 123 பதிவு செய்யப்பட்ட மீனவ குடும்பங்களும், உள்ளூர் தொழிலாளர்களும், வியாபாரிகளும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சட்டவிரோத மீன் வலைகளையும், இயந்திர படகுகளையும் பயன்படுத்தி குளத்தில் வேறு தரப்பினர் மீன்பிடியில் ஈடுபடுவதால் எதிர்காலத்தில் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் அபாயம் காணப்படுவதாகவும் மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இரணைமடு குளத்தின் ஆழமான பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு மீனவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுவது குறித்து இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவிக்கையில், இரணைமடு குளத்தின் மீனவ சங்கத்தினரே அங்கு மீன்பிடிப்பது தொடர்பான நடைமுறைகளை வகுப்பதாக தெரிவித்தார்.

எனினும், இராணுவத் தரப்பினால் இரணைமடு குளத்தில் மீன்பிடிப்பது தொடர்பில் குறித்த மீனவ சங்கத்தினருக்கு எவ்வித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# வவுனியாவில் மினி சூறாவளி 201 குடும்பங்கள் பாதிப்பு


(வவுனியா)

வுனியாவில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை ஏற்பட்ட மினிசூறாவளியால் 201 குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்

வவுனியா மாவட்டத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மினிசூறாவளி வீசியது. இதன் காரணமாக பலரது வீடுகள் முழுமையாகவும் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. மன்னகுளம், பம்பைமடு, சுமாங்குளம், மரக்காரம்பளை, நெளுக்குளம், இராசேந்திரங்குளம், உக்கிளாங்குளம், கற்பகபுரம் உள்ளிட்ட பல கிராமங்கள் பாதிப்படைந்துள்ளன. வவுனியா மாவட்டத்தில் மினிசூறாவளி காரணமாக 201 குடும்பங்களைச் சேர்ந்த 259 பேர் பாதிப்படைந்துள்ளனர். இவர்களில் 7 குடும்பங்களின் வீடுகள் முழுமையாகப் பாதிப்படைந்துள்ளதுடன் 194 குடும்பங்களின் வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# பொருளியல் வினாத்தாள் சர்ச்சை சமர்ப்பிக்கப்பட்டது அறிக்கை



அண்மையில் இடம்பெற்ற கல்வி பொதுத்தராதர உயர்தர பொருளியல் வினாத்தாளில் ஏற்பட்ட சர்ச்சை மற்றும் புள்ளி வழங்க வேண்டிய முறைமை குறித்த அறிக்கை ஒன்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை பேராதனை பல்கலைக்கழக பொருளியல் விஞ்ஞான பிரிவு, இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் கண்டி கிளையில் கையளித்துள்ளது.

பொருளியல் விஞ்ஞான வினாத்தாளில் பிரச்சினை நிலவுவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாட்டை பதிவு செய்திருந்தது.

இதன்போது, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து, இது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய, பேராதனை பல்கலைக்கழக பொருளியல் விஞ்ஞான பிரிவு பேராசிரியர்களான அனோமா அபேரத்ன மற்றும் பிரசன்ன பெரேரா உள்ளிட்ட சிலரினால் 34 பக்கங்கள் கொண்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# தென்னை உற்பத்தியை ஊக்குவிக்க வடக்கில் விசேட செயற்றிட்டம்



(கொழும்பு)


வடக்கு மாகாணத்தில் தென்னை உற்பத்தியை ஊக்குவித்து, தென்னை பொருள் தொடர்புடைய தொழில் துறையை வளர்ச்சியடையச் செய்வதற்கென சிறப்புத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்தவுள்ளதாக தென்னை அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

வடமாகாணத்தில் 2020 ஆம் ஆண்டில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தைத் தென்னை உற்பத்தித் தொழில் துறையின் மூலம் பெறத்தக்க வகையில் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாகவும் அந்த அமைச்சு கூறியிருக்கின்றது.

இது குறித்து பிபிசியிடம் கருத்து வெளியிட்ட தென்னை அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஸ்பகுமார, கிளிநொச்சி மாவட்டம் பளைப் பகுதியில் தென்னை உற்பத்தி சபைக்குச் சொந்தமாக உள்ள 600 ஏக்கர் காணியில் இந்த விசேட திட்டத்தைச் செயற்படுத்தவுள்ளதாக குறிப்பிட்டார்.

# 6 மின்குமிழ்கள் ஒளிரும் வீட்டிற்கு மின்கட்டணம் ஒன்றரை இலட்சம்

## உரிமையாளருக்கு மாரடைப்பு




(கொழும்பு)

ஆறு மின்குமிழ்களை மாத்திரம் பயனபடுத்தும் வீடொன்றுக்கு ஒன்றரை இலட்சம் ரூபா, மின் கட்டணமாக வந்துள்ள சம்பவம் பத்தேகமையில் பதிவாகியுள்ளது.

பத்தேகம, அகுரட்டிய உடகம பிரதேசத்தில் உள்ள இந்த வீட்டில் இரண்டு குழந்தைகளுடன் தம்பதியினர் வாழ்கின்றனர்.

வீட்டிற்கு மின்சாரம் பெற்றுக் கொண்ட நாள் முதல் சுமார் 500 ரூபா மாத்திரமே மின் கட்டணமாக வந்துள்ளது.


இதனடிப்படையில் ஆகஸ்ட் மாதத்தில் 68 மின் அலகிற்கான கட்டணமாக 842 ரூபா 40 சதம் காணப்பட்டுள்ளது.

ஆனால் செலுத்த வேண்டிய முழுத் தொகையாக 1,46,561 ரூபா 78 சதம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அது தவறுதலாக இடம்பெற்றுள்ளதாகவும் அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பத்தேகம பிரதேச மின் பொறியியலாளர் சிறில் கருணாரட்ன் தெரிவித்தார்.

அதிகாரிகளின் இந்த பொறுப்பற்ற செயற்பாட்டினால் குறித்த வீட்டில் வசிக்கும் இரண்டு பிள்ளைகளின் தந்தைக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது.

# அளவெட்டி அருணோதயவில் சின்னம் சூட்டும் நிகழ்வு



அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் இவ் ஆண்டுக்கான மாணவர் தலைவர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வு அண்மையில் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது.

அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சிரேஷ்ட மாணவ தலைவனாக செல்வன் எஸ். சிபிசனும், மாணவ தலைவியாக செல்வி.என்.தர்சாவும் தெரிவு செய்யப்பட்டதுடன் மொத்தமாக 45 மாணவ தலைவர்களுக்கு அதிபர், பிரதிஅதிபர், உப அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரால் சின்னஞ்சூட்டி வைக்கப்பட்டது.


# பாடசாலை முன் மீன்சந்தை அமைப்பதற்கு தற்காலிக தடை



வவுனியா, சைவப்பிரகாச மகளிர் கல்லூரி முன்பாக உள்ள வவுனியா பொழுது போக்கு கழகத்திற்கு சொந்தமான அங்காடி வியாபார நிலையங்கள் அமைந்துள்ள பகுதியில் தற்காலிகமாக மீன்சந்தை அமைப்பதற்கு நகரசபை எடுத்து வந்த நடவடிக்கைக்கு வவுனியா நீதிமன்றம் தற்காலிக தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

வவுனியா நகரசபை நவீன மீன் சந்தையை திருத்துவதற்காக தற்காலிகமாக நான்கு மாதங்களுக்கு மட்டும் வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி முன்பாகவுள்ள அங்காடி வியாபாரிகள் உள்ள இடத்தில் மீன் சந்தையை அமைக்க நடவடிக்கையை மேற கொண்டிருந்தது. இது தொடர்பில் வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கம், அந்தணர் ஒன்றியம், வவுனியா பொழுது போக்கு கழகம், பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கம், பழைய மாணவர்கள் எனப் பலரும் கடும் எதிர்ப்பினை தெரிவித்தனர்.

இதனையும் தாண்டி மீன் சந்தை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இது நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. இதன் போது வேறு இடம் தொடர்பில் கவனம் செலுத்துமாறு நீதிமன்றம் ஆலோசனை கூறியதுடன் எதிர்வரும் திங்கட்கிழமை வரை குறித்த பகுதியில் மீன்சந்தையை திறக்க வேண்டாம் எனவும் நகரசபைக்கு தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.



# தரம் 7- 8 மாணவர்களுக்கான பயிற்சி வினாத்தாள்

வரலாறு

## தரம் - 07

.எல்லா வினாக்களுக்கும் விடை தருக

பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1) வரலாற்றின் தந்தை என அழைக்கப்படுபவர்
1) சோக்கிரட்டீஸ் 2) ஹெரடோரஸ் 3) பைதகரஸ்

2) மனித நாகரிக விருத்தியின் ஆரம்ப காலம்
1) விவசாய யுகம் 2) இடையர் யுகம் 3) வேடுவர் யுகம்

3) நெருப்பு கண்டுபிடிக்கப்பட்ட யுகம்
1) இடையர் யுகம் 2) வேடுவர் யுகம் 3) விவசாய யுகம்

4) வேடுவர் யுக மனிதனின் உறைவிடமல்லாதது
1) மரப்பொந்து 2) மண்குடிசை 3) கற்பாறை அடிப்பகுதி

5) வேடுவர் யுக மனிதன் பயன்படுத்திய ஆயுதமல்லாதது
1) கற்கள் 2) கூரான தடிகள் 3) கோடரி

6) மனிதனின் முதலாவது வளர்ப்பு மிருகம்
1) ஆடு 2) நாய் 3) மாடு

7) வேடுவர் யுக மனிதன் கருத்துக்களைப் பரிமாறியது
1) ஒலி எழுப்புதல் மூலம் 2) வாய்மொழி மூலம்
3) சைகை மூலம்

8) இடையர்யுக மனிதன் கருத்துக்கள்ளைப் பரிமாறியது
1) வாய்மொழிமூலம் 2) ஒலி எழுப்புதல் மூலம்
3) சைகை மூலம்.

9) விவசாய யுக மனிதன் கருத்துக்களைப் பரிமாறியது
1) வாய்மொழிமூலம் 2) ஒலி எழுப்புதல் மூலம்
3). சைகை மூலம்

10) ஆரம்ப காலங்களில் மனிதனால் வளர்க்கப்பட்ட விலங்குகளில் ஒன்றல்லாதது?
1) பன்றி 2) செம்மறியாடு 3) குதிரை

11) இடையர்யுக மனிதனின் உடையாக அமைந்தது
1) இலைகள் 2) விலங்குத்தோல் 3) மரப்பட்டைகள்

12) நாடோடி வாழ்க்கை முறை இடம்பெறாத யுகம்
1) விவசாயயுகம் 2) வேடுவர் யுகம் 3) இடையர் யுகம்

13) சில்லு, கண்டு பிடிக்கப்பட்ட யுகம்
1) இடையர் யுகம் 2) வேடுவர் யுகம் 3) விவசாய யுகம்

14) மட்பாண்டங்கள் செய்யப்பட்ட யுகம்
1) இடையர் யுகம் 2) வேடுவர் யுகம் 3) விவசாய யுகம்.

15) ஆரியர்கள் இந்தியாவுக்கு நுழைந்தபோது பயன்படுத்திய கணவாய்
1) பலன 2) கினிகத்தன்ன 3) கைபர்

16) இந்தியாவில் ஆரியர்கள் முதலில் குடியேற்றம் அமைத்த பகுதி
1) சப்த சிந்து 2) மகதம் 3) கல்கத்தா

17) இந்தியாவில் ஆரியர்கள் குடியேற்றம் ஆரம்பத்தில் அமைக்கப் பட்டிருந்த நதிக்கரை
1) கங்கை 2) கோதாவரி 3) இந்து

18) இலங்கைக்கு முதலில் வந்த ஆரியர் குடியேற்றக்குழு
1) பண்டுவாசுதேவன் குழு 2) மதுராபுரி இளவரசி குழு
3) விஜயன் குழு

19) விஜயன் குழுவினர் இலங்கையில் தரையிறங்கிய இடம்
1) மகாதீர்த்த 2) தம்பபன்னி 3) கோகண்ண

20) விஜயன் குழுவினர் இலங்கையில் வந்திறங்கிய கரை
1) கிழக்குக் கரை 2) வடகிழக்குக்கரை
3) வடமேற்குக்கரை

### பகுதி II

1) வரலாறு என்றால் என்ன என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

2) இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் இலக்கிய மூலாதாரங்கள் எவை i) -------------------- ii) ----------------------------

3) வரலாற்றைக் கற்பதனால் கிடைக்கும் பயன்கள் எவை?
i) --------------------------- ii) ---------------------------
iii) ---------------------------

04) நீண்டகால வளர்ச்சியினால் நாகரிகமடைந்த மனிதனின் அடிப்ப டைத் தேவைகள் எவை?
i) ----------------- iii) --------------------------
ii) ----------------

05) இடையர்யுக மனிதனின் வாழ்க்கை துயரம் நிறைந்ததாக இருந்தமைக் கான காரணங்கள் எவை?
i) --------------------------- iii) ---------------------------
ii) ---------------------------

06) i) விவசாயயுக மனிதனின் வாழ்க்கை முறை எந்த வகையில் முன்னைய யுக மனித வாழ்க்கை முறையை விட முன்னேற்றமானதாக இருந்தது?
i) --------------------------- ii) ---------------------------

07) விவசாய யுக மனிதனால் உற்பத்தி செய்யப்பட்ட ஆயுதங்கள் எவை?
i) -------------------------------------------------------------------
ii) -------------------------------------------------------------------

08) விலங்கு வளர்ப்பின் மூலம் விவசாயயுக மனிதன் பெற்ற பயன்கள் எவை?

09) இந்தியாவுக்கு வந்த ஆரியர்களின் தாயகப் பகுதி எது?

2) ஆரியர்கள் இலங்கைக்கு வந்த இரண்டு மார்க்கங்களும் எவை?
i) ----------------------------- ii) -----------------------------

3) இலங்கைக்கு வந்த முதல் மூன்று ஆரியக் குடியேற்றக் குழுக்களை ஒழுங்கு முறையாக எழுதுக?
i) -------------------------------------------------------------------
ii) -------------------------------------------------------------------

## தரம் - 08

1) ஆசியாக் கண்டத்தில் நாகரிகம் நிலவிய நதிக்கரை நாகரிகங்களின் எண்ணிக்கை
1) 4 2) 3 3) 1

2) மொசப்பத்தேமியா நாகரிகம் நிலவிய பிரதேசம் என்று அழைக்கப் படுவது
1) ஈரான் 2) எகிப்து 3) ஈராக்

3) நைல் நதி பாய்ந்து சென்று சங்கமிக்கும் கடல்
1) செங்கடல் 2) மத்தியதரைக்கடல் 3) அராபிக்கடல்

4) நதிக்கரைகளில் நாகரிகங்கள் தோன்றுவதில் செல்வாக்குச் செலுத்திய முக்கியமான காரணி
1) நீர்வசதி 2) நிலப்பரப்பு 3) சனத்தொகை

5) கலாசாரத்தின் தொட்டில் என்று வர்ணிக்கப்பட்ட நாகரிகம்
1) மிஸிர் நாகரிகம் 2) மொசப்பத்தேமியா நாகரிகம்
3) குவாங்கோ நாகரிகம்

6) அமுராபி சட்டங்கள் நடைமுறையில் இருந்த நாகரிகம்
1) மொசப்பத்தேமியா 2) மிஸிர் 3) இந்துநதி நாகரிகம்

7) எஸ்தர் எனப்படும் தெய்வம் குறிப்பது
1) சமாஸ் கடவுள் 2) பெண் தெய்வம் 3) ஆண் தெய்வம்

8) கௌடியா அரசனின் சிலை வடிக்கப்பட்ட கல்
1) முருங்கைக்கல் 2) செங்கல் 3) கருங்கல்

9) ரம்செஸ் அரசன் ஆட்சி செய்த நாகரிகம்
1) மிஸிர் 2) மொசப்பத்தேமியா 3) குவாங்கோ

10) "பரோ" என்ற பெயரினால் அழைக்கப்பட்டது
1) தெய்வங்கள் 2) பிரபுக்கள் 3) அரசர்கள்

11) மரணத்தின் பின்னரும் மனிதனுக்கு வாழ்க்கையுண்டு என்ற நம்பிக்கை முதன்முதலில் நிலவிய நாகரிகம்
1) குவாங்கோ 2) மிஸிர் 3) மொசப்பத்தேமியா

12) "இம்பொடெப்" என்ற பொறியியலாளர் இருந்த நாகரிகம்
1) இந்துநதி நாகரிகம் 2) மொசப்பத்தேமியா
3) நைல்நதி நாகரிகம்

13) "புரம்" என்பதனால் குறிப்பிடப்படுவது
1) கிராமம் 2) நகரம் 3) துறைமுகம்

14) இந்து நதிக்கரை நாகரிகம் நிலவிய முக்கிய இரு நகரங்களுள் ஒன்று
1) லோத்தால் 2) சன்ஹீதாரோ 3) ஹரப்பா

15) இந்து நதிக்கரை நாகரிக ஆட்சியாளர் தொடர்பில் சரியான விடயம்
1) மன்னர் ஆட்சி 2) சமயக்குருமார் ஆட்சி
3) பிரபுக்களின் ஆட்சி

16) பொழுது போக்குக்கான தாயக்கட்டைகள் கண்டெடுக்கப்பட்ட நாகரிகம்
1) மொசபத்தேமியா 2) இந்துநதி நாகரிகம்
3) நைல்நதி நாகரிகம்

17) "துயரம்" என்ற பொருளையுடையது
1) மொஹஞ்சதாரோ 2) மொசபத்தேமியா 3) ஹீசாங்கோ

18) ஹீவாங்கோ நாகரிக பிரதேச பிரதான தானியம்
1) நெல் 2) கோதுமை 3) வாற்கோதுமை

19) ஆமை ஓடுகளில் எழுத்துக்கள் எழுதப்பட்ட நாகரிகம்
1) மொசபத்தேமியா 2) ஹீவாங்கோ 3) இந்துநதி நாகரிகம்

20) வைத்தியத்துறையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதற்கான சான்று கிடைத்த நாகரிகம்
1) ஹீவாங்கோ 2) மிஸிர் 3) இந்துநதி நாகரிகம்

## தரம் - 8

### பகுதி I

1)இலங்கையில் மிக நீண்ட காலம் இராசதானியாக இருந்தது
1) கண்டி 2) பொலனறுவை 3) அனுராதபுரம்

2) கண்டு இராச்சிய ஆரம்பகாலங்களில் இருந்த ஐந்து பிரதேசங்களில் ஒன்று அல்லாதது
1) மாத்தளை 2) மாத்தறை 3) தும்பறை

3) மேலைத்தேசத்தவர்களின் ஆதிக்கத்துக்குட்படாது கண்டி இராச்சியம் ஒரு சுதந்திர இராச்சியமாக இருந்த காலம்
1) மூன்று நூற்றாண்டுகள் 2) நான்கு நூற்றாண்டுகள்
3) இரண்டு நூற்றாண்டுகள்

4) கண்டி இராச்சியத்தைத் தோற்றுவித்த மன்னன்
1) கரலியத்த பண்டார 2) சேனாசம்மத விக்கிரமபாகு
3) 1 ஆம் விலமதர்மசூரியன்

5) சாம்ந்த என்பதன் பொருள்
1) மத்திய நிர்வாக ஆட்சியாளன்
2) கிராம நிர்வாக ஆட்சியாளன்
3) பிரதேச ஆட்சியாளன்

6) டொன்பிலிப் என்ற கத்தோலிக்க நாமத்தைக் கொண்டிருந்தவன்
1) கோணப்புபண்டார 2) யமசிங்க பண்டார
3) வீரசுந்தர பண்டார

7) லஸ்கரின் படையினர் என்பது
1) ஆங்கிலேயர் படையில் பணியாற்றிய உள்நாட்டுப் படையினர்
2) போர்த்துக்கேயர் படையில் பணியாற்றிய உள்நாட்டுப் படையினர்
3) ஒல்லாந்து படையில் பணியாற்றிய உள்நாட்டுப் படையினர்

8) 1 ஆம் விமலதர்மசூரியன் உபசம்பதா சடங்கை நடத்த பிக்குமார்களை வரவழைத்த நாடு
1) சீயம் 2) சீனா 3) மியான்மார்

9) செனரத் மன்னனால் போர்த்துக்கேயர் தோற்கடிக்கப்பட்ட சண்டை நடைபெற்ற இடம்
1) கண்ணொறுவ 2)இரந்தெனிவெல 3) பலன

10) அஸ்தானகுமார என அழைக்கப்பட்ட மன்னன்
1) 1 ஆம் விமலதர்மசூரியன் 2) 2 ஆம் இராஜசிங்கன்
3) 1 ஆம் இராஜசிங்கன்

11) நாயக்கர் வம்ச இறுதி மன்னன்
1) இராஜாதி இராஜசிங்கன் 2) ஸ்ரீ விஜய இராஜசிங்கன்
3) 2 ஆம் விமலதர்மசூரியன்

12) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனின் முக்கிய எதிரியாக இருந்த பிரதானி
1) சமரக்கொடி 2) பிலிமத்தலாவ 3) எஹலப்பொல

13) 1638 ஆம் ஆண்டு வெஸ்ரவோல்ட் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட மன்னன்
1) 1 ஆம் இராஜசிங்கன் 2) 2 ஆம் இராஜசிங்கன்
3) 2 ஆம் விமலதர்மசூரியன்

14) கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்காக முதலில் படையெடுத்த பிரித்தானிய தேசாதிபதி
1) றொபேர்ட் பிறவுன்றிக்
2) பிலிமத்தலாவையிடம்
3) பிரட்டிக்நோத்

15) கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றும் பொறுப்பு பிரித்தானியரால் ஒப்படைக்கப்பட்டது
1) ஜோன்டொய்லியிடம்
2) பிலிமத்தலாவையிடம்
3) எஹலபொல்லிடம்

16) பிரபுக்களின் சேவைகளுக்காக மன்னனால் வழங்கப்பட்ட நிலம்
1) மானிய - பரவேனி நிலம் 2) கபாடகம் 3) நிந்தகம்

17) கண்டி இராச்சியத்தில் முதலில் கல்வி, சமய மறுமலர்ச்சியைத் தோற்றுவித்த மன்னன்
1) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் 2) 1 ஆம் விமலதர்மசூரியன்
3) செனறத்

18) கண்டி இராச்சியத்தில் இரும்பு பொருட்கள் உற்பத்திக்கு பிரசித்தி பெற்றிருந்த இடம்
1) கிரிவவுல 2) தும்பறை 3) கொத்மலை

19) கண்டி இராச்சிய மன்னனின் யானைப்படைக்குப் பொதுவான செயலாளர்
1) மடுவேலேகம் 2) கஜநாயக்க நிலமே 3) பத்வடனலேகம்

### பகுதி II

01) i) கண்டி இராச்சியத்தின் இயற்கைப் பாதுகாப்பு அரண்கள் எவை?
i) ------------------- ii) --------------------- iii) -----------------

ii) கண்டி இராச்சியத்தைக் குறிக்கும் வேறு பெயர்கள் எவை?
i) ------------------- ii) --------------------- iii) -----------------

02) i) 1. ஆம் விமலதர்மசூரியன் எவ்வாறு கண்டி இராச்சிய அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டான்.
--------------------------------------------------------------------

ii) செனறத் மன்னனின் பிள்ளைகள் யார்?
i) ------------------- ii) --------------------- iii) -----------------

iii)நாயக்கர் வம்ச மன்னர்கள் யார்?
i) ------------------- ii) --------------------- iii) -----------------

03) 1) 2 ஆம் இராஜசிங்க மன்னன் மேற்கொண்ட பணிகள் எவை?
i) ------------------- ii) --------------------- iii) -----------------

ii) 1582 ஆம் ஆண்டுல் கண்டி இராச்சியம் மீது 1 ஆம் இராஜசிங்க மன்னனின் ஆக்கிரமிப்பினால் போர்த்துக்கேயரிடம் தஞ்சமடைந்த அரச குடும்பத்தவர்கள் யார்?
i) ------------------- ii) --------------------- iii) -----------------

04)
i) மறுமலர்ச்சி என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.
ii) ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் எவை?.
i) ------------------- ii) --------------------- iii) -----------------
iii) மறுமலர்ச்சிக் காலத்தின் பின் ஐரோப்பாவில் இருந்த நிலமைகள் எவை?
i) ------------------- ii) --------------------- iii) -----------------

## நேற்று வெள்ளிக்கிழமை வெளியான தரம் -4 புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை விடைகள்

1) 2
2) 2
3) 3
4) 4
5) 3
6) 2
7) 2
8) 2
9) 4
10) 3
11) 1
12) 2
13) கொவியா
14) கேம
15) எகய்
16) சீயய்
17) 2
18) 2
19) 2
20) 1
21) 3

22) 3
23) 2
24) 2
25) 1
26) 3
27) 1
28) 2
29) 3
30) 3
31) 2
32) 2
33) மாமிச உண்ணி இலங்கையில் இல்லை
34) தாவர உண்ணி இலங்கையில் இல்லை

35) அனைத்தும் உண்ணி இலங்கையில் இல்லை.
36) அனைத்தும் உண்ணி இலங்கையில் உண்டு.
37) தாவர உண்ணி இலங்கையில் உண்டு.
38) தாவர உண்ணி இலங்கையில் இல்லை
39) தாவர உண்ணி இலங்கையில் இல்லை.
40) மாமிச உண்ணி இலங்கையில் உண்டு.
41) அனைத்தும் உண்ணி இலங்கையில் உண்டு.
42) அனைத்தும் உண்ணி இலங்கையில் இல்லை.
43) 2
44) 3
45) 1
46) 3
47) 1
48) 2
49) 2
50) 3

கடந்த ஞாயிற்றுக்கிழமை மற்றும் செவ்வாய்கிழமை வெளியான தரம் -4 வினாக்களுக்குரிய விடைகள் நாளை வெளியாகும்.

# காங்கேசன் சிமெந்து ஆலை ஊழியர்களுக்கு கொடுப்பனவு



(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் பணியாற்றிய 57 ஊழியர்களுக்கான கொடுப்பனவின் மற்றொரு பகுதி பண்ணையில அமைந்துள்ள தொழில்துறை திணைக்கள அலுவலகத்தில் வைத்து நேற்று வழங்கப்பட்டது. இவர்களுக்கான கொடுப்பனவை வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் கனகேஸ்வரன் வழங்கினார்.

காங்கேசன்துறை சிமெந்து ஆலை 1990ஆம் ஆண்டு இயங்காமல் நிறுத்தப்பட்டது. அங்கு பணியாற்றிய ஊழியர்களுக்கு நஷ்டஈடோ கொடுப்பனவோ எவையும் வழங்கப்படவில்லை. இதனால் அங்கு பணியாற்றிய பணியாளர்கள் 57 பேர் தமக்கு கொடுப்பனவுகள் வழங்கக் கோரி 2011 ஆம் ஆண்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

அதற்கமைய அவர்களுக்கான கொடுபனவுகளை வழங்கவேண்டும் என்று நீதிமன்று உத்தரவிட்டிருந்தது. இதற்கமைவாக 2013 ஆம் ஆண்டு 31.1 மில்லியன் ரூபா கொடுப்பனவு பகுதியாக 57 பேருக்கு 60 வீதமாக வழங்கப்பட்டிருந்தது. நேற்று மற்றொரு பகுதியான ரூபா 1.3 மில்லியன் 40 பேருக்கு 20 வீதமாக வழங்கப்பட்டுள்ளது.

மீதிக் கொடுப்பனவு இந்த வருட இறுதிக்குள் இவர்களுக்கு வழங்கப்படும் என்று வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் கனகேஸ்வரன் தெரிவித்தார். (25)

# இறக்குமதி செய்யப்படும் அரிசியில் ஆர்ஸனிக் விஷம் அதிகளவு கலப்பு

## எச்சரிக்கிறார் பேராசிரியர் சமரஜீவ

(கொழும்பு)

இலங்கைக்கு பாகிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியில் ஆர்ஸனிக் விஷம் அதிகளவில் கலந்திருப்பதாக பேராசிரியர் உபாலி சமரஜீவ தெரிவித்துள்ளார்.

"உணவு தன்னிறைவிலும் வறுமை ஒழிப்பிலும் விவசாயத்தின் பங்களிப்பு" எனும் கருப்பொருளில் கொழும்பில் இடம்பெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:-

இலங்கையில் நிலவும் வறட்சி, அரிசித் தட்டுப்பாடு காரணமாக பாகிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.




ஆனால் அந்நாடுகளின் அரிசியில் ஆர்ஸனிக் விஷத்தின் செறிவு அதிகமாகும். இதனை அளவிடுவதற்கான கருவிகள் எவையும் இலங்கையில் இல்லை. உலக சுகாதார ஸ்தாபனம் ஒரு கிலோ அரிசியில் 200 அலகு ஆர்ஸனிக் அளவை அங்கீகரித்துள்ளது.

ஆனால் இலங்கையில் உற்பத்தியாகும் அரிசியில் கிலோவுக்கு 34 முதல் 92 அலகு ஆர்ஸனிக்கே உள்ளது. ஆனால் பங்களாதேஷின் அரிசியில் சராசரியாக கிலோவுக்கு 340 அலகு ஆர்ஸனிக் உள்ளது.

பங்களாதேஷ் மக்களில் பெரும்பகுதியினருக்கு தோல் சார்ந்த நோய்கள் மற்றும் அவர்களின் உடலில் ஆர்ஸனிக்கின் தாக்கம் உள்ளது. இவ்வாறான தொரு நிலையில் அரசாங்கம் ஏன் அந்நாட்டில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யும் முடிவை எடுத்தது எனவும் சமரஜீவ கேள்வி எழுப்பினார்

# வவுனியா பிரதேச செயலரின் வீட்டின் மீது கல்வீச்சு



(வவுனியா)

வவுனியா பிரதேச செயலாளர் கே.உதயராசாவின் உத்தியோகபூர்வ வீட்டின் மீது நேற்றுமுன்தினம் இரவு 9.45 மணி அளவில் இனந்தெரியாத நபர்கள் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தியுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தார்.

வவுனியா - உத்யான வீதியில் உள்ள பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன் வீட்டு ஜன்னல் கண்ணாடி உடைந்து சேதமாகியுள்ளதென பொலிஸார் குறிப்பிட்டனர்.

தாக்குதலால் பிரதேச செயலாளருக்கோ வேறு எவருக்குமோ பாதிப்பு ஏற்படவில்லை. தாக்குதல் தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்ததாக பிரதேச செயலாளர் கே.உதயராசா தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா, மன்னார் மாவட டத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் யூ.கே. திஸாநாயக்கவின் ஆலோசனையில் வவுனியா வலய சிரேஸ்ட பொலிஸ் பொறுப்பதிகாரி வசந்த விக்ரமசிங்கவின் கண்காணிப்பில் வவுனியா பொலிஸ் பரிசோதகர் சன்ன அபேரத்ன தலைமையிலான பொலிஸ் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

## தேசிய செயன்முறை திட்டமே டெங்கு நோயை கட்டுப்படுத்தும்

(கொழும்பு)

இலங்கையில் டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கு தேசிய செயன்முறைகளால் மாத்திரமே முடியும் என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்கு நோயை கட்டுப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட நுளம்புகளை சுற்றாடலில் பரவவிடும் செயன்முறைகள் தற்போது சர்வதேச ரீதியாக மேற்கொள்ளப்படுகின்றன.

பிரேஸில், அவுஸ்ரேலியா போன்ற நாடுகள் இதனை முன்னெடுத்துள்ளன. இவ்வாறான நடைமுறை ஒன்றை இலங்கையில் மேற்கொள்ள முடியுமா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் வழங்கிய டெங்கு ஒழிப்பு பிரிவின் அதிகாரிகள், இந்த நோயை ஒழிப்பதில் உள்நாட்டு தேசிய செயன்முறையின் மீது மாத்திரமே நம்பிக்கை கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே பீ.ரீ.ஐ. மூலம் டெங்கு நுளம்புகளை கட்டுப்படுத்த முயற்சித்த போதும், அது எதிர்பார்த்த பலனை கொடுத்திருக்கவில்லை என்றும் குறித்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

# இந்திய நடிகை கஜோலை சந்தித்தார் முதற்பெண்மணி



அமெரிக்காவிற்கு சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ பிரபல இந்திய திரைப்பட நடிகை கஜோலை சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு நியூயோர்க்கில் நடைபெற்றுள்ளது. நிதி சேகரிப்பு நிகழ்ச்சி ஒன்றில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியூயோர்க் சென்றுள்ளதுடன் ஷிரந்தி ராஜபக்ஷவும் அவருடன் சென்றுள்ளார்.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**UNIVERSITY OF JAFFNA, SRILANKA**

**FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE**

**RE-COMMENCEMENT OF LECTURES FOR FIRST YEAR STUDENTS**

**ACADEMIC YEAR 2012/2013, FIRST SEMESTER**

The lectures for the first year semester students of the faculty of management studies & commerce, university of jaffna, will be **re-commenced on 29th of september 2014 (Monday)**

Registrar
University of Jaffna
24.09.2014 C/3523



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**UNIVERSITY OF JAFFNA, SRILANKA**

**FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE**

**Change in Examination Time Table**

**Second Examination in Business Administration first semester- 2013**
**Second Examination in commerce first semester- 2013**
**third examination in Business administration first semsester-2013 (New & old syllabus)**

The following changes have been made in the second year first semester and thirs year first semester examination timetable for the academic year 2012/2013 for the following subjects all the other examinations will be held as per the schedule.

| Date | Course Unit | Subject | Venue | Time |
|---|---|---|---|---|
| **Third Exmination in business Administration first semester-2013 (New & old Syllabus)** | | | | |
| 06.10.2014 Monday | BAD BE 3101 / BAD ESL III | Business English | New Commerce Hall | 09.00-12.00 Noon |
| **Second Exmination in business Administration first semester-2013 Second Examination in commerce first semester-2013** | | | | |
| 07.10.2014 Tuesday | BAD BE 2101 | Busines English | New Commerce Hall & MH 1 | 09.00-12.00 Noon |
| | COM 21006 | Busines Communication II | | |

C/3524


# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..........................................

முகவரி :- ..........................................


பிறந்த ஆண்டு :- ..........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# ஈரெழுத்தால் கவியுலகை ஆள்பவர் கவிஞர் சோ. பத்மநாதன்




ஈரடிக் குறள்களால் உலகளந்த வள்ளுவர் போல் ஈரெழுத்துப் பெயரால் ஈழத்துக் கவியுலகை ஆள்பவர் கவிஞர் சோ.ப! சோ.ப அவர்களுக்கும் எனக்கும் இடையிலான உறவு அவரின் கவிதை வழி வந்தது.

தவில் மேதை க.ப சின்னராசா அவர்கள் அமரத்துவம் அடைந்த போது முரசொலி பத்திரிகையில் சோ.ப அஞ்சலிக்கவிதை ஒன்றை எழுதியிருந்தார்.

*வீற்றிருந்தாய் நீ மேடையில் வடக்கு*
*வீதியில் உன்னிசை விருந்தைக்*
*கேட்டிருந்தோம் என்று உரைக்கும் அச் சொல்லைக்*
*கேட்பதெற்குநாளினி? நண்பா,*
*காற்றடித் தால நெடுமரம் சாய்ந்த*
*வாறு நீ கிடப்பது கண்டோம்*
*கூற்றுவனுக்கும் "மூத்தவன் வைத்த*
*கொள்ளிக்குமோ உனைக் கொடுத்தோம்*
*என்பது அவர் எழுதிய அஞ்சலிக்*
*கவிதைகள் பலவற்றுள் ஒன்று.*

கவிதையை நான் மனப்பாடம் செய்யவில்லை. அது தானாகவே மனதிற்பதிந்து விட்டது. இத்தனை ஆண்டுகள் (20ஆண்டுகளுக்கு மேல் நினைக்கின்றேன்) கழிந்தும் என் மனதில் அழியாத ஓவியமாய் நிலைத்து விட்டது. இதுதான் நல்ல கவிதைக்கு இலக்கணம். இக் கவிதையைப் பாராட்டி அவருக்கு எழுதினேன். கடிதம் கண்டவர் மேலும் சில கவிதைகளை எனக்கு அனுப்பிவிட்டார். நான் அவர் ரசிகர் ஆனேன்.

நான் 9,10 ஆம் வகுப்புக்களிற் படிக்கும் போதே கவிதை எழுதத் தொடங்கி விட்டேன். ஆனால், கவிதையை வாசிப்பது எப்படி என்று எனக்குத் தெரியாது. க.பொ.த (உ.த) கற்கும் போது தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம் நடாத்திய பட்டறையில் கவிதைகள் எழுதினேன். எழுதியகவிதைகளை வாசிக்கத் தெரியவில்லை. எனது கவிதையை வாங்கி வாசித்துக்காட்டிய திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் இவர் நல்லாக் கவிதை எழுதுகிறார்

ஆனால் வாசிக்கத் தெரியவில்லை. என்றார். கவிதை வாசிப்பு , கவியரங்க முன்வைப்பு என்றால் என்ன? தேடத் தொடங்கினேன். முதலில் நன்றாகக் கவி யரங்கு செய்யும் யாரையாவது 'கொப்பி' பண்ண விரும்பினேன்.

அந்தக்காலத்தில் நன்றாகக் கவியரங்கை கலக்கியவர்கள் இருவர்.ஒருவர் புதுவை இரத்தினதுரை. மற்றவர்

**கவிஞர் சோ. பத்மநாதனின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்த கட்டுரை பிரசுரமாகின்றது.**

கவிஞர் சோ.ப இருவரினதும் 'ஸ்ரைல்களை' 'மிக்ஸ் பண்ணிக் குழைத்து உடம்பெங்கும் பூசிக்கொண்டேன். புதுவை பாதி சோ.ப பாதி கலந்து செய்த கலவை நான ஆனேன். கவியரங்கில் எனக்கும் புகழ்வரத்தொடங்கியது.

என் தந்தைக்காகவோ அல்லது என்னிலும் ஏதோ திறமை கண்டோ 'என்னையும் இணைத்துக்கொண்டார் சோ.ப. சோ.ப என்ற அந்தப் பெரு விருட்சத்தின் நிழலில் இருந்ததால் நாங்கள் வாசித்த சாதாரணகவிதைகளிலும் ஏதோ பெரும் கவிச்சிறப்பு இருப்பதாக ரசிகர்கள் தேடத் தொடங்கினர்.

கவியரங்கத் தலைவராக சோ.ப.சக கவிஞர்களை நயததோடு, நாசூக்கான கிண்டலோடு அறிமுகப்படுத்தும் விதமே தனித்துவமானது. இணுவில் கந்தசாமி கோவிலில் கவியரங்கு சக கவிஞர்கள் நால்வர். இருவர் இணுவிலைப் பிறப்பிடமாவும் இருவர் புகுந்த இடமாகவும் கொண்டவர்கள். அன்று சோ.ப வின் அறிமுகம்:-

**'இணுவில் மண்கொண்ட கவிஞர் இருவர்**
**இணுவில் பெண்கொண்ட கவிஞர் இருவர்'**


ஆரம்பத்தில் அவரது தலைமைக் கவிதை மிகச் சிறப்பாக இருக்கும். ஆரம்ப 'ஓவர்களில்' சனத் ஜெயசூரியா வெளுத்துவாங்கிய பின் அடுத்து வரும் வற்மேன்களுக்கு, எப்படித் துடுப்பாட்டம் மகிழ்ச்சியாக இருக்குமோ? அப்படி எங்கள் பணியும் இருக்கும். ஆனாலும் ஒன்று... உயர்ந்த தத்துவங்கள், கவிச்சிறப்புக்கள் பொருந்திய கவிதைகளை அவர் ஒளித்து வைத்திருந்து கவியரங்கம் நிறைவெய்தும் வேளையில்தான் எடுத்து விடுவார்.

கவியரங்கு முடிந்து செல்லும் ரசிகன் திருப்தியான உணர்வோடு விடைபெறவேண்டும் என்பதற்காக.. எந்தக் கவிதையும் சோ.ப சேரின் முன் கைகட்டி சேவகம் செய்யும். ஆனால் சந்தக் கவிதைகள் தான் அவர்முன் சந்நதம் ஆடும். அவரது பல சந்தக் கவிதைகளைப் படித்த அனுபவத்தில் இதனைக் கூறுகிறேன். கோகிலா மகேந்திரன் அவர்களின் நாடகம் ஒன்றில் 2 தசாப்தங்களுக்கு முன்னர் இடம் பெற்ற சந்தக் கவிதை ஒன்று இப்போது என்

*நினைவில் நிழலாடுகிறது. அது இசைப்பா*
*'எட்டுத்திக்கும் சுற்றிச் சுற்றிப் பயணம்*
*வித்துச் சுட்டுப் பெட்டிகட்டி பயணம்*
*வெட்கத்தையும் துக்கத்தையும்*
*கக்கத்துக்குள் வைத்துக்கொண்டு பயணம்*

நல்ல கவிஞர் நல்ல உள்ளம் கொண்ட மனிதர் நலமாக நூறாண்டு வாழ்க!

(வானவர்கள் வாழ்த்துவதும் தாம் வாழ)



ஏகலைவ மாணவன்
**ம.பா.மகாலிங்கசிவம்**

---

# மத்திய கல்லூரி வரலாற்றில் நாத்திறம்

"நல்லைநகர் நாவலர் பிறந்திரேல் சொல்லு தமிழெங்கே ......" என்ற பாடல் சைவத்தையும் தமிழையும் வளர்த்த நாவலரின் நாத்திறனை உணர்த்துகின்றது. அவர் கற்ற பாடசாலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியாகும். அக் காலம் முதல் இன்று வரை நாவன்மையாளர் பட்டியல் நீண்டே செல்கிறது. அமரர். க.இராசதுரை அதிபர் காலத்திலேயே ப்ட்டிமன்றம் பலரறியப்படும் நிகழ்வாக இருந்தது. அவ்வழியில் மீண்டும் எழுச்சியை உண்டாக்குவதற்கே இப் "பட்டிமன்றச்சமர் - 2014 " எனும் நிகழ்வு முன்னெடுக்கப்படுகின்றது.

யாழ்.மத்திய கல்லூரியில் நாவன்மை மிக்கோரின் நாயகமாகத் திகழ்ந்தவர் நாவலர்சொற்பொழிவு என்ற துறையைப் பிரசங்க மரபாக ஈழத்தில் ஆரம்பித்து "வைத்தவரும் அவரே வண்ணை வைத்தீஸ்வரன் சந்நிதியையே இதற்குக் களமாகக் கொண்டார்.அவருக்கு துனவனம் துரை எனும் வெள்ளைக்காரபிரபு பரிச்சயமாகவிருந்தார். நாவலர் சிவலிங்கத்தை வணங்கும்போது, "என்னப்பா கல்லை வணங்குகிறாய்?" என்று கேட்டாராம் வெள்ளைக்கார பிரபு அதற்கு நாவலர் "அது கல்லில்லைக் கடவுள்" என்று கூறிவிட்டார். பின்னொரு நாள் நாவலர் வெளியே கிடந்த கல்லில் இருந்தபோது துனவனம் துரை அவரைப் பார்த்து "என்னப்பா கடவுளுக்கு மேலே இருக்கிறாய்?" என்று கேட்டார். நாவலருக்கு என்னவோ மாதிரிப் போய்விட்டது. "இது கடவுள் இல்லைக் கல்" என்று கூறிவிட்டார். துரையோ "எனக்கெப்படித் தெரியும் இரண்டும் கல் தானே" என்று முணுமுணுத்து கொண்டு போய் விட்டாராம் நர்வலர் உறு மீனுக்கு காத்திருந்தார் சரியான தருணம் வந்தது. துனவனம் துரை வில் வண்டியில் தன்து மனைவியுடனும், மகளுடனும் வந்து இறங்குகிறார். உடனே நாவலர் அவரைப் பார்த்து "என்னப்பா உனக்கு இரண்டு பொண்டாட்டியா? எனக்குச் சொல்லவேயில்லை" என்று ஏகத்தாளமாகக் கேட்டு விட்டாராம். அதற்குத் துரை இல்லை ஒன்று

**யாழ்.மத்திய கல்லூரியில் முன்னாள் அதிபர் அமரர். இராசதுரையின் ஞாபகார்த்தமாக இன்று "பட்டிமன்றச்சமர் - 2014" நடாத்தப்படுகின்றது.**

**இதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

மனைவி மற்றது மகள் என்று தலையைக் குனிந்தபடி பதிலளித்தாராம். அதற்கு நாவலர் "எனக்கு எப்படித் தெரியும் இரண்டும் பெண்தானே?" என்று கூறினாராம். அப்போது தான் துரைக்குப் புரிந்தது. கல்லுக்கும். கடவுளுக்கும் உள்ள வித்தியாசம் தனது நாட் குறிப்பிலே எழுதினாராம் "நான் முதன்முதலாக ஒரு அறிவாளனைச் சந்தித்தேன். அவர் தான் நல்லை நகர் ஆறுமுக நாவலர்" என்று இப்படி ஏராளம் எடுத்துக் காட்டுக்கள் உள்ளன.

நாவலரின் வழித்தோன்றல்கள் மத்திய கல்லூரியில் கற்று உலகறிந்த வழக்கறிஞர்களாக உள்ளனர். வலம்புரி ந. விஜயசுந்தரம், பிரதேச செயலர் எஸ். முகுந்தன் எனப் பட்டிமன்ற உலகைக் கலக்குக் கலக்குவோர் நிறையப் பேர் உள்ளனர். சொல்லருவி ரி. கருணாகரன், அவரது சகோதரர் ரி. தயாபரன் என்போர் மேடைகளில் சொல்மாரி பொழிகின்றனர். தேசிய மட்டவிவாதப் போட்டிகளிலும், பேச்சுப் போட்டிகளிலும், தொடர் வெற்றிகளைக் குவித்துள்ளனர். இவ் வெற்றிக்குக் களங் கொடுத்தவர் அப்போது அதிபராகவிருந்த அமரர் கணபதி இராசதுரையாவார்.

பல தமிழ் மொழித்தினப் போட்டிகளை, மாகாணப் போட்டிகளைத் தலைமை தாங்கி நடாத்திக் காட்டியவர். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வவுனியாவில் மாகாண நிலைப் போட்டியில் பங்கேற்ற போது ஆர்வத்தினாலும், அக்கறையினாலும் கொழும்பிலிருந்து நேரடியாக அங்கு வந்து போட்டி நான்கு மணியளவில் நிறைவடையும் வரை மண்டபத்தைச் சுற்றித் சுற்றித் திரிந்து வெற்றியைக் கொண்டாடியவர். மாணவர்களை உற்சாகமூட்டியவர். ஆனால் அம்மாணவர்கள் கொழும்பிலே தேசிய மட்டப் போட்டியில் வெற்றி பெற்ற போது அவர் உயிருடன் இல்லை.

எது எப்படியோ சரிந்த பாடசாலையை நிமிர்த்தியவர், கல்விப் பெறுபேற்றை உயர்த்தியவர், தமிழுக்காகப் பாடுபட்டவர், கடமையின் போது உயிர் நீத்தவர், அவரது நினைவாக தமிழ் மாணவர்களுக்கு நாம் செய்யும் தொண்டு இத்தகைய பட்டிமன்றப் போட்டிகளை நடாத்துவதாகும்.

**நா. புவனேந்திரன்**
யாழ். மத்திய கல்லூரி

---

# எபோலா நோய் தாக்கத்தால் 2917பேர் இதுவரை உயிரிழப்பு

## உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிப்பு


மேற்கு ஆபிரிக்காவின் 5 நாடுகளில் எபோலா வைரஸ் நோயினால் 6263 பேர் பாதிக்கப் பட்டதாகவும் அவர்களில் 2917 பேர் உயிரிழந்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

கினியாவில் கடந்த வருடம், எபோலா பரவ ஆரம்பித்த பின் கடந்த 21 ஆம் திகதிவரை அந்நாட்டில் 1022 பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டதாகவும் அவர்களில் 635 பேர் இறந்துள்ளதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது.

மூன்றிலொரு பங்கினர் கடந்த 21 வரையான 3 வார காலத்தில் இந்நோயின் தொற்றுக்குள்ளாகினர். லைபீரியாவில் 3280 பேருக்கு எபோலா நோய் தொற்றியுள்ளதுடன் அவர்களில் 1677 பேர் .இறந்துள்ளனர்.

அவர்களில் சுமார் 50 சதவீத மானோருக்கு கடந்த 3 வார காலத்தில் இந்நோய் தொற்றியுள்ளது. சியாரா லியோனில் 1970 பேர் பாதிக்கப்பட்டதுடன் அவர்களில் 593 பேர் இறந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தங்கமீனுக்கு 45 நிமிடம் அறுவை சிகிச்சை



அவுஸ்திரேலியாவில் உணவு சாப்பிட முடியாமல் தவித்து வந்த தங்கமீன் ஒன்றுக்கு மருத்துவர்கள் வெற்றிகரமாக அறுவைச சிகிச்சை செய்துள்ளனர்.

10 வயதான இந்த தங்க மீன், உணவு சாப்பிட முடியாமல் தவித்து வந்தது, இதனையடுத்து மெல்பேர்ன் மருத்துவர்கள் சுமார், 45 நிமிடம் அறுவைச் சிகிச்சை செய்தனர்.

இன்னும் 20 ஆண்டுகள் வரை இந்த தங்கமீன் உயிர் வாழும் என்று அறுவைச் சிகிச்சை செய்த மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

# அரசியல் உரிமைகளை வென்றெடுக்கவே இணக்க அரசியலை தொடர்ந்து செய்கிறோம்



எமது மக்களின் அன்றாடத் தேவைகளை இனங்கண்டு அவற்றை தீர்த்து வைப்பது மட்டுமன்றி அரசியல் உள்ளிட்ட உரிமைகளை வென்றெடுப்பதை இலக்காகக் கொண்டே இணக்க அரசியலில் தொடர்ந்தும் பயணிக்கின்றோம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்திற்கு நேற்று வருகைதந்த வடமாகாண ஆசிரிய உதவியாளர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொழில்வாய்ப்பு உறுதி செய்யப்படும் பட்சத்திலேயே வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தி பலப்படுத்த முடியும். அந்த வகையில் எமது எதிர்கால கல்விச் சமூகத்தை கட்டியெழுப்பும் வகையில் பாரிய பொறுப்பை உணர்ந்து கொண்டு அனைவரும் செயற்பட வேண்டும்.

எமது மாணவச் செல்வங்களை கல்வியில், விளையாட்டுத் துறைகளில் மட்டுமல்லாது நவீன காலத்திற்கேற்ப தொழில்நுட்ப ரீதியாகவும் வளர்த்தெடுக்க வேண்டிய முக்கிய கடப்பாடு உங்களுக்கு உண்டு.

தொண்டர் ஆசிரியர்களாக நீங்கள் கடமையாற்றியிருந்த காலப்பகுதியில் உங்களுக்கு ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்றுத் தருவதில் நான் பல்வேறுபட்ட இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

உங்களது நியமனத்துக்காக அமைச்சரவையில் நான் எடுத்துக் கொண்ட போது பல்வேறு எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டது.

அதற்கப்பால் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்த நிலையிலேயே நியமனங்கள் சாத்தியமானது என்றும் சுட்டிக் காட்டினார்.

அந்தவகையில் தான் எமது மக்களின் தேவைகளை நாம் இனங்கண்டு அவற்றுக்கான தீர்வினை அரசுடனான நல்லுறவையும் இணக்க அரசியலையும் பயன்படுத்தி சாதித்து வருகின்றோம்.

இவ்வாறானதொரு நிலையில் தான் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்துக்கான பொறியியல் மற்றும் விவசாயபீடங்களை கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைக்க முடிந்ததாகவும் தெரிவித்தார்.

மக்களின் தேவைகளை நிறைவு செய்வது மட்டுமன்றி வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் அதேவேளை, எமது பகுதிகளை அபிவிருத்தியால் கட்டியெழுப்புவதுடன் அரசியல் உள்ளிட்ட உரிமைகளை வென்றெடுப்பதே எமது முக்கிய நோக்காகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

2013 ஆம் ஆண்டு ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்றுக் கொண்டவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவாக 6 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வந்த நிலையில் அமைச்சர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக 10 ஆயிரம் ரூபா இன்று வரை வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாசிரிய உதவியாளர்கள் தற்போது இரண்டு வருட கற்கை நெறிகளை பூர்த்தி செய்யும் வகையில் தற்போது கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலையில் கல்வி பயின்று வருகின்றனர்.

இதன்போது ஈ.பி.டி.பியின் சர்வதேச இணைப்பாளர் மித்திரன், ஈ.பி.டி.பி.யின் சர்வதேச முக்கியஸ்தர் விந்தன், முன்னாள் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் உடனிருந்தனர்.

## இஸ்லாமிய...

நாடுகளுக்கிடையில் நல்லுறவையும் ஒத்துழைப்பையும் இலங்கை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்தார்.

இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பிற்கு வெளியேயிருக்கும் நாடாக நாங்கள் இலங்கையைக் கருதவில்லை என ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் ஜனாப்.மதனி தெரிவித்தார்.

இலங்கையை நாங்கள் அமைப்பிற்கு உள்ளேயிருப்பதாகக் கருதுகிறோம். ஜனாதிபதி எடுத்துள்ள முன்னோடிப் படிகளை இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு பாராட்டுவதாக வெளிப்படுத்திய ஜனாப்.மதனி, இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பானது இலங்கை பற்றி தொடர்ச்சியான உயர்மதிப்பைக் கொண்டிருப்பதாகத் தெரிவித்த அவர், அமைப்பின் உறுப்பு நாடுகளுக்கிடையே இலங்கையின் உறவுகளை மேம்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

அண்மைக் காலத்தில் இடம்பெற்ற, சம்பவங்களால் உந்தப்பட்ட, தனிமைப்படுத்தப்பட்ட சில சம்பவங்களைப் பற்றிக் கலந்துரையாடும்போது முஸ்லிம் சமூகத்திற்கெதிரான ஏதாவது சம்பவங்களை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்குமென ஜனாப்.மதனியிடம் ஜனாதிபதி ராஜபக்ஷ உறுதியளித்தார். முஸ்லிம் சமூகத்தினரை எனது சொந்தச் சகோதரர்கள் போல காப்பேன் என ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டின் கள நிலைவரங்களையும், எவ்வாறு பல்வகையான சமூகங்கள் சமாதானமாக இணைந்து காணப்படுகின்றன என்பதைப் பார்வையிடுவதற்கும் ஜனாப்.மதனியையும், ஏனைய இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு உறுப்பினர்களையும் இலங்கைக்கு வருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

சவுதி அரேபியாவிற்கு இன்னொரு தடவை வருகை தருமாறு ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு ஜனாப்.மதனி அழைப்பு விடுத்தார். மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் இலங்கையானது 14 இராஜதந்திர தூதுவராலயங்களைக் கொண்டிருக்கிறது. பெரும்பான்மையாக முஸ்லிம்கள் வாழும் நாடுகளுடன் கொண்டுள்ள மேம்படுத்தப்பட்ட ஒத்துழைப்பிற்கு அரசாங்கம் வழங்கும் முக்கியத்துவத்தை இது சுட்டிக்காட்டுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## கீரிமலை...

செலவில் கட்டப்பட்டது. இச்சுவரில் பாரிய வெடிப்புகள் ஆங்காங்கே ஏற்பட்டு கடலுக்குள் இடிந்துவிழும் அபாய நிலையினை எதிரணி மற்றும் ஆளும்தரப்பு உறுப்பினர்களாலும் சுட்டிக்காட்டப்பட்டது.

அப்போது சபையின் தவிசாளர் கேள்வி கேட்ட உறுப்பினர்களைப் பார்த்து “இது உன் வீட்டுப் பணமா?” என்று ஆவேசமாக கத்தியதுடன், இது தொடர்பில் என்னிடம் கேள்வி கேட்க முடியாதென்றும் மழுப்பி பதிலளிக்க முற்பட்டபோது சபையில் அமளி ஏற்பட்டது.

பெருந்தொகைப் பணத்திலே கட்டப்பட்ட இத்தடுப்புச் சுவர் 5 மாதங்களுக்குள் இடிந்துவிழும் நிலை ஏற்பட்டமையினால் இதனுடைய கட்டுமானத்தில் பெரும் மோசடி நடைபெற்றதாக உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

உறுப்பினர்களின் கேள்விக் கணைகளுக்கு பதிலளிக்க முடியாமல் கூட்டத்தை இடைநடுவில் நிறுத்திவிட்டு அங்கிருந்து வெளியேறியதை சபை உறுப்பினர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

## யாழ். அரச....

மேற்கொள்ளப்படவுள்ளன. அந்தவகையில், பளையில் இருந்து யாழ்ப்பாணம் வரையிலான யாழ்தேவி புகையிரத சேவையினை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அத்துடன், பிரதேச செயலக கட்டடங்கள் மற்றும் பாடசாலைகளில் நிர்மாணிக்கப்பட்ட மகிந்தோதய ஆய்வுகூடங்கள் ஆகியனவும் திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தல் தொடர்பிலான கலந்துரையாடலில், அரச அதிகாரிகள் மற்றும் பொலிஸ் இராணுவ அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (25)

## சர்வதேச...

ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதி அப்துல் அஸீஸ் தெரிவாகியுள்ளார். இதன மூலம் ஐ.நா.வின் கீழுள்ள சர்வதேச அமைப்பொன்றின் தலைவராக தெரிவாகிய முதலாவது இலங்கையர் என்ற பெருமையை இவர் பெறுகின்றார்.

## தேய்வடைகிறது...

டிரான் அலஸ், சுசில் கிந்தெல்பிட்டிய போன்றோர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்வதற்கான பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளனர்.

மேல்மாகாண சபை உள்ளிட்ட மாகாண சபைகளில் உறுப்பினர்களாகவுள்ள இன்னும் சில முக்கியஸ்தர்கள் ஜே.வி.பி.யுடன் இணைந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் ஊவா மாகாண சபைத் தேர்தலின் போது மிகவும் குறைவான வாக்குகளைப் பெற்றதன் காரணமாக கட்சிக்கு பொதுமக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கும் பாரியளவில் சரிந்துள்ளது.

இதன் காரணமாக சரத் பொன்சேகாவின் கட்சி மிக விரைவில் பல கூறுகளாக உடைந்து சிதறும் அபாயம் காரணமாக அரசியலில் பொன்சேகா தனிமைப்படுத்தப்படும் நிலையை எதிர்கொண்டுள்ளார். இதற்கிடையே ஊவா தேர்தலில் பின்னடைவு, சரத் பொன்சேகாவின் இரண்டாம் மகள் ஆபிரிக்கர் ஒருவரை திருமணம் செய்துள்ள சம்பவங்கள் போன்றவற்றின் காரணமாக அவரும் மனதளவில் கடுமையான பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக தெரியவந்துள்ளது.

## இரகசிய...

வழங்க வேண்டுமாயின் வங்கிக்கு 472,200 அமெரிக்க டொலர் தேவையென குறித்த வங்கி சார்பில் ஆஜரான சட்டத்தரணி கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

இது குறித்து விசாரணை நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட போது வங்கியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கருத்து முன்வைத்தார்.

நீதிமன்றம் கேட்கும் தரவுகளை வழங்க கணனி செயற்பாடு ஒன்றை முன்னெடுக்க வேண்டும்.

எனவே முன்னாள் பிரதம நீதியரசர் 472,200 அமெரிக்க டொலரை செலுத்த இயலுமாயின் தரவுகளை வழங்க முடியுமென வங்கியின் சட்டத்தரணி நீதிமன்றத்திற்கு கூறியுள்ளார்.

இந்நிலையில் இந்த விடயம் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதவான் மத்திய வங்கி பணிப்பாளருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

முன்னாள் நீதியரசர் வங்கியில் வைத்திருந்த விசேட நடமாடும் கணக்குக்ள் இரண்டு தொடர்பான தகவல்களை மூன்று வருடங்கள் மறைத்ததாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவு தாக்கல் செய்த வழக்கு மீது விசாரணை இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டிஷ்...

விமான சேவை நிறுவனத்தை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. குறிப்பிட்ட திகதியிலிருந்து தமது மாலைதீவிற்கான குளிர்கால விமான சேவைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த விமான சேவை இடைநிறுத்தம் காரணமாக பிரயாணிகளுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்களுக்காக மன்னிப்புக் கோரியுள்ள பிரிட்டிஷ் விமான சேவை, இதன்மூலம் பாதிக்கப்படும் பிரயாணிகளின் கட்டணங்களை முழுமையாக திருப்பிச் செலுத்துவதாக அறிவித்துள்ளது.

லண்டனில் இருந்து கொழும்பிற்கான தமது சேவையை இடைநிறுத்துவது கடினமான ஒரு தீர்மானம் எனினும், கொழும்பிற்கான தமது சேவை இலாபகரமானதாக இல்லையெனவும் பிரிட்டிஷ் விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

## வடக்கே...

திறந்து வைக்கும் அதேவேளை, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரதான புகையிரத நிலையத்தையும் திறந்து வைக்கவுள்ளார்.

தொடர்ந்து யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள மாவட்ட விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பங்கேற்கும் அதேவேளை, துரையப்பா விளையாட்டரங்கில் அரச உத்தியோகத்தர்களுக்கு 2 ஆயிரம் மோட்டார் சைக்கிள்களையும் வழங்கி வைக்கவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆகியவற்றில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடங்களையும் திறந்து வைக்கவுள்ளார்.

மறுநாளான 14 ஆம் திகதி நயினாதீவிற்கு விஜயம் மேற்கொள்ளும் ஜனாதிபதி நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவிலுக்கும், நாகதீபம் விகாரைக்கும் சென்று விசேட வழிபாடுகளில் கலந்து கொள்ளவுள்ளார். தொடர்ந்து நெடுந்தீவிற்கு செல்லும் ஜனாதிபதி அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிரதேச செயலக கட்டடத்தையும் திறந்து வைக்கவுள்ளார்.

இதேபோன்று நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடத்தையும் திறந்து வைக்கவுள்ளார்.

இதேதினம் வேலணைப் பகுதிக்குச் செல்லும் ஜனாதிபதி புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிரதேச செயல்க கட்டடத்தை திறந்து வைப்பதுடன் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, காரைநகர் தியாகராசா மத்திய மகாவித்தியாலயம், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி ஆகியவற்றில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்களையும் திறந்து வைக்கவுள்ளார்.

இதில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வடபகுதிக்கான பயணம் வெற்றிகரமாக அமையப் பெறுதல் வேண்டும்.

ஜனாதிபதியின் இப்பயணம் எமது மக்களுக்கு பெரும் நன்மைகளை பெற்றுக் கொடுக்கும் ஒரு நல்ல தருணமாக அமையப் பெற்றுள்ளதால் அனைவரும் பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இதன்போது வடமாகாண ஆளுநர் சந்திரசிறி, வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் படைத்துறை அதிகாரிகள் அரச திணைக்களங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# அனர்த்த சவால்களுக்கு முகம் கொடுக்கும் வலிமை மிக்க சமூக உருவாக்கம் நிச்சயம்

## பி.பி.ஜயசுந்தர தெரிவிப்பு

சுனாமி அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு மிகச் சிறந்த அனர்த்த முகாமைத்துவ கொள்கைளை வரையறை செய்திருப்பதனால் எதிர்காலத்தில் அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய பாதுகாப்பான சமூகம் இலங்கையில் உருவாக்கப்படுவது உறுதியென நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தம் இடம் பெற்று 10 வருடத்தை நினைவு கூரும் வகையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இவ்வாரம் நடைபெற்ற மூன்று நாள் சர்வதேச அனர்த்த முகாமைத்துவ மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், சர்வதேச நாடுகள், அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் ஆகியவற்றின் உதவியுடன் இலங்கை அரசாங்கம் மிக பரந்த மட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ வலையமைப்பை நிறுவியுள்ளது.

நாட்டின் அபிவிருத்திக்கு அவசியமான கொள்கைகளை வகுப்பதிலும் மாற்றங்களுக்கு முகம் கொடுப்பதிலும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும் எமது அரசாங்கம் முனைப்புடன் செயற்படுகின்றது. இதற்கு வெள்ளம் ஏற்படாத வகையில் கொழும்பு உருவாக்கப்பட்டமையே சிறந்த உதாரணம்.

இலங்கை பரப்பளவில் சிறிய நாடாகவிருந்த போதிலும் நாம் சிறிய நாட்டில் வசிப்பவர்கள் என்ற எண்ணம் எமக்கு இருக்க கூடாது. தற்போதைய அரசாங்கத்திற்கு அவ்வாறானதொரு எண்ணம் துளியளவும் இல்லை. எமது நாட்டில் உயிர்ப் பல்வகை செறிந்து காணப்படுகின்றது.

நாம் சூழல் பாதுகாப்பினை கருத்திற் கொண்டே கொள்கைகள் மற்றும் அபிவிருத்திகளை முன்னெடுக்கிறோம். நாட்டின் அபிவிருத்திக்கு அவசியமான அனைத்து கொள்கைகளையும் உள்ளடக்கியதாகவே மகிந்த சிந்தனை வரையறுக்கப்பட்டுள்ளது.

இது எமக்காக எமது நாட்டில் பல கல்விமான்களால் ஆராயந்து உருவாக்கப்பட்டது. இதனடிப்படையில் நாம் கொழும்பை மாத்திரமின்றி அனைத்து பகுதியையும் கொழும்பிற்கு சமனாக அபிவிருத்தி செய்கின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# இலவச கல்விக் கருத்தரங்கு வவுனியாவில் நேற்று

(கொழும்பு)

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் நடாத்தும், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை மாணவர்களுக்கான இலவசக் கல்விக் கருத்தரங்கு வவுனியா மாவட்டத்தில் நேற்று ஆரம்பமானது.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக தமிழ் மாணவர்களால் ஒவ்வொரு ஆண்டும், இலவச கல்விக் கருத்தரங்கு நடத்தப்பட்டு வருகின்றது.

வடக்கு, கிழக்கு, மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின், 13 மாவட்டங்களில் உள்ள 187 பாடசாலைகளைச் சேர்ந்த 7 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த இலவசக் கருத்தரங்கில் பங்கெடுக்கின்றனர்.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் முன்னேற்றம் ஏற்படுத்துவதற்காக கணித - விஞ்ஞான பாடங்களில் இலவசக் கல்விக் கருத்தரங்கு இன்று வவுனியா கந்தபுரம் வாணி வித்தியாலயத்தில் ஆரம்பமானது.

இக் கருத்தரங்கில் மூன்று முறிப்பு பாடசாலை, கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலயம், கந்தபுரம் வாணி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளை சேர்ந்த 200 மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

நாளைய தினமும் மேற்படி கருத்தரங்கு நடைபெறுமென பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் தெரிவித்தனர. (70)

# தாலிக்கொடி அறுத்தவர் பொலிஸாரால் கைது

தாவடி பத்திரகாளியம்மன் கோவில் வீதியால் நடந்து சென்றுகொண்டிருந்த கர்ப்பிணிப் பெண்ணின் தாலிக்கொடியை அறுத்தவர் கடந்த வியாழக்கிழமைஇரவு கைது செய்யப்பட்டதாக சுன்னாகம் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

கர்ப்பிணி பெண்ணுடைய 12 பவுண் தாலிக்கொடியை, மோட்டார் சைக்கிளில் சென்ற சந்தேகநபர் அறுத்துச் சென்றுள்ளார். அறுத்துச் சென்றவரின் மோட்டார் சைக்கிள் இலக்கத்தை குறித்துக்கொண்ட பெண், சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார்.

பெண்ணின் முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்டு, இணுவிலைச் சேர்ந்த 32 வயதுடைய சந்தேகநபரைக் கைது செய்ததாக பொலிஸார் மேலும் கூறினர்.

# காணியற்றவர்களுக்கு காணித்துண்டுகள்; அராலி ஊரத்தியில் இன்று நிகழ்வு

கடந்த 35 வருடங்களுக்கு மேலாக அராலியில் குடியிருக்கும் ஊரத்தி மக்களுக்கு காணிப் பங்கீடு திட்டத்தின் கீழ் காணி பகிரப்படவுள்ளது.

இன்று காலை 6.30 மணிக்கு அராலி மத்தி ஊரத்தியில் முதற் கட்டமாக காணிப் பங்கீட்டுத் திட்டத்தின் கீழ் கல்லு வைக்கும் நிகழ்வு இடம்பெறும்போது அங்கு வாழும் 37 குடும்பங்களும் பூரண ஒத்துழைப்பினை வழங்கவேண்டும்.

இவ்வாறு வலிகாம இணைப்பாளரும் வலிமேற்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவருமான சிவகுரு பாலகிருஷ்ணன் (ஜீவன்) கேட்டுள்ளார்.

வலி.மேற்கு பிரதேசசபையின் சங்கானை மத்தி - அராலி ஊரத்தி குடும்பங்களுக்கான காணிப்பங்கீடு தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் பாலகிருஷ்ணன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், சங்கானை மத்தியில் உள்ள 30 குடும்பங்களுக்கு காணி அளவீட்டு திட்டத்தின் கீழ் உறுதிகள் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்கு வலி.மேற்கு பிரதேசசபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அதேவேளை, நீண்ட காலத்தின் பின்னர் அராலி மத்தியில் உள்ள குடும்பங்களுக்கு காணிப் பங்கீட்டு திட்டத்தின் கீழ்காணி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இதன் முதற்கட்டமாக இன்று காலை நில அளவீட்டு திட்டத்தின் அடிப்படையில் கல்லு வைக்கும் நிகழ்வு இடம்பெறும்.

இவ்வேளையில் பூரண ஒத்துழைப்பை வழங்கி நடவடிக்கை திட்டத்திற்கு வலுச் சேர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இதன்மூலம் விரைவில் சங்கானை பிரதேச மக்களுக்கான திட்டம் நிறைவேறியது போன்று அராலி மக்களுக்கான திட்டமும் நிறைவேறும் என்றார் எதிர்க்கட்சித் தலைவர் சிவகுரு பாலகிருஷ்ணன். (92)

# சீனாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு கடல் பாதுகாப்பில் அதிக அக்கறை

(பீஜிங்)


இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான உயர் மட்ட மாநாடு சீனத் தலைநகரில் இடம்பெற்றுள்ளது.

சீனாவுக்கும் இலங்கைக்குமிடையிலான வரலாற்று சிறப்பு மிக்க முதலாவது பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான இந்த மாநாடு சீனத்தலைநகரான பீஜிங்கில் நடைபெற்றது.

சீன மக்கள் விடுதலை படையின் உதவி பிரதானி ஜெனரல் வாங் குவான் ஷோன் மற்றும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோர் இந்த கலந்துரையாடலில் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர்.

வலயப்பாதுகாப்பு நிலைமைகள், இரு நாடுகளுக்கிடையிலான இராணுவ நடவடிக்கைகள் குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. அண்மையில் சீன ஜனாதிபதி இலங்கைக்கு விஜயம் செய்த போது இரு நாடுகளின் தலைவர்களும் இணக்கப்பாட்டிற்கு வந்த இராணுவ வீரர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் கடல் பாதுகாப்பு போன்ற துறைகளிலும் சீன இராணுவப்பிரிவு விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# ஹுசைன் - பீரிஸ் சந்திப்பு



ஐக்கிய நாடுகள் சபையின் 69 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள நியூயோர்க் சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

மனித உரிமைகளை பாதுகாப்பது தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புகள் குறித்து அமைச்சர், ஆணையாளருக்கு விபரமாக விளக்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா.வின் விசாரணைகளை நிராகரித்த போதிலும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்துடன் தொடர்ந்தும் ஒத்துழைப்புடன் செயற்பட தயாராக இருப்பதாக அமைச்சர் பீரிஸ் இதன்போது கூறியுள்ளார்.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் கூட்டமைப்பு இன்று சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர்களுக்குமிடையிலான விசேட சந்திப்பு ஒன்று இன்று கல்முனையில் இடம்பெற விருக்கின்றது. முக்கிய காலகட்டத்திலும் அரசியல் சூழ்நிலையிலும் தமிழ், முஸ்லிம் மக்களால் பெரிதும் எதிர்பார்க்கப்படும் இந்தச் சந்திப்பு பிற்பகல் கல்முனை மாநகர சபை மேயர் அலுவலகத்தில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார்பில், கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், தமிழரசுக்கட்சியின் புதிய தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம். ஏ.சுமந்திரன், ரெலோ அமைப்பின் செயலாளர் நாயகம் ஹென்றி மகேந்திரன் ஆகியோரும், முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் கட்சித் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம், செயலாளர் நாயகம் எம்.ரீ. ஹஸனலி, பிரதி செயலாளரும், கல்முனை மாநகர மேயருமான சிரேஷ்ட சட்டத்தரணி எம். நிஸாம் காரியப்பர், சிரேஷ்ட பிரதித் தலைவரும், கல்முனை மாநகர உறுப்பினருமான ஏ. எல்.மஜீத் ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர்.

தற்போதைய அரசியல் சூழ்நிலை மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வில் தமிழ், முஸ்லிம்களின் ஒன்றுபட்ட நிலைப்பாடு மற்றும் இந்த விடயத்தில் தமிழ், முஸ்லிம் தலைவர்கள் ஒத்த கருத்துக்கு வரவேண்டுமென்ற தமிழர் பிரச்சினையில் கரிசனை கொண்டுள்ள நாடுகளின் கோரிக்கை என்பன குறித்து இந்தச் சந்திப்பில் விசேடமாக ஆராயப்படவுள்ளது.

அத்துடன் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் நிலவும் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையிலான பிரச்சினைகள் தொடர்பில் சுமுகமாகப் பேசித் தீர்வுகளைக் காணவும் இச் சந்திப்பின் போது முயற்சிக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# கடும் காற்றினால் பொலிஸ் நிலையம் சேதம்

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா பொலிஸ் நிலையத்தில் உள்ள மரம் ஒன்றின் கிளை முறிந்து விழுந்ததில் பொலிஸ் நிலையக் கட்டடம் சேதமடைந்துள்ளது. மூன்று பொலிஸார் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர்.

வவுனியாவில் இன்று மாலை 5.45 மணியளவில் பெய்த கடும் மழையின் போது பொலிஸ் நிலைய வளவுக்குள் உள்ள பெரிய மரம் ஒன்றின் கிளை முறிந்து பொலிஸ் நிலைய கட்டடத்தின் மீது விழுந்துள்ளது.

இதனால் அக்கட்டடத்தில் இயங்கி வந்த சிறுகுற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவின் கூரைப் பகுதி சேதமடைந்துள்ளது. இதன் போது அப்பிரிவில் கடமையில் இருந்த மூன்று பொலிஸார் சிறு காயங்களுக்கும் உள்ளாகினர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 செப்ரெம்பர் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.